தனிப்பிரதி ஒன்றுக்கு { உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா " ... | ரூ 1-12 |
| வெளி நாட்டுக்கு " ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 8.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மலர் 4 | ஈரோடு, விபவ ஞு தைமீ 8௳ (20—1—29) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 39.

R E V O L T

## 'ரிவோல்ட்'

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஓர் ஆங்கிலப்பத்திரிகை.

வருட சந்தா ரூ. 4
வெளி நாட்டுக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—
ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
S. ராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—
மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

R E V O L T

குளிர்! குளிர்!! குளிர்!!!

## பால கவ்வா அல்லது கம்பளி குல்லா.



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருக்கவேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும். நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0.

உடனே எழுதுங்கள்,
கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்,

Use Only Unbreakable
Wrought Iron Railings Noted for.




100 வருஷத்துக்கு உத்திரவாதம்-
நம்நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள்.
இரும்பு கிராதிகள் விலை சரசம்.

பால்கனி கட்டிடங்களுக்கு அவசியமான இரும்பு கிராதிகள் அநேக தினுசுகளில் விற்பனைக்கு தயார்செய்திருக்கிறோம். இந்த புது தினுசு கிராதிகள் நாசரீகமானதும் கட்டிடங்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதும், எந்த விதத்திலும் உடையாததுமாக தயார்செய்து வராவமாக விற்பனைசெய்துவருகிறோம். கட்டிடங்களுக்கு ஏற்றவாறு எந்த அளவுப்படியும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும். உடனே தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகளுக்கு ஆர்டர் செய்யவும்- பிரைஸ் லிஸ்ட் இனாம்-
தயார் செய்பவர்கள்:—

ஸ்ரீ கிருஷ்ண இரும்பு தொழிற்சாலை,
மதுரை.

## செல்வராஜ் & கோ.,
## காலண்டர்.

தலைவர்களின்படங்களடங்கியது.

30 x 20 அங்குல அளவில் நல்ல தடித்த வழுவழுப்பான ஆர்ட்பேப்பரில் திருவாளர்கள் டாக்டர் நாயர், தியாகராயர், பனகால் அரசர், ராமசாமி நாயக்கர், பி. டி. ராஜன், எ. ராமசாமி முதலியார், எம். கே. ரெட்டியார், குமாரசாமி ரெட்டியார், பன்னீர் செல்வம், சௌந்தரபாண்டிய நாடார், கண்ணப்பர், கே. வி. ரேனன், சுரேந்திரநாத் ஆரியா, சின்னையா பிள்ளை ஆகிய பதினைந்து தலைவர்களின் திருவுருப்படங்களுடன் கூடியது. காலண்டர் 1-க்கு விலை அணா 8 தான். ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு இனாம். தனித்தனி தலைவர் படம் விலை அணா 1. வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். விலாசம்:—

செல்வராஜ் & Co.,
சைக்கிள் வியாபாரிகள், ஈரோடு.

## திருப்பூர் பனியன்ஸ்.

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0
வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ரிப்பேர் பண்ணவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார், இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்

அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீர்ணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றுடம் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், ஸ்னானபான அநுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்.

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல் பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர். & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

தண்டபாணி வைத்தியசாலை,
29௨, சைனாபஜார், மதராஸ்



## ஜீவரசம்! ஜீவரசம்!!

சகல நோய்களுக்கும் தேவாமிர்தம் போன்றது

ஒரு பாட்டில் ஜீவரசம் உங்களிடமிருந்தால் வியாதிகளைப்பற்றிய கவலை வேண்டாம். இது ஓர் சிறந்த குடும்ப ஔஷதமென பல பெரியோர்களால் நற்சாக்ஷி பெற்றது. உண்மையறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள், பாட்டில் 1-க்கு விலை ரூ. 1—8—0

முக்கிய வியாபாரிகள்:—
T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், மதுரை.
M. இஸ்மாயில் சாஹிப் அய்யன்கடை, தஞ்சாவூர்.

ஜீவரசம் கம்பெனி லிமிடெட்,
(2) காரைக்குடி S. I.



## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுட்பட இந்தியா, பர்மா, இலங்கைக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
24½, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311.
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.



ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மனவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.




அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மேடல் பெற்ற

## விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு. கேடலாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு, வெட்சர்சரி தோட்டம், சேலம்.



## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் வரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம், மஸ்லின் துணியிலும் பல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 4-15-0.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

ஸ்ரீ கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

# பிராமண சபைத் தீர்மானத்திற்குப் பண்டிதர்களின் பதில் ஏனில்லை.

கைவல்ய சாமியார் எழுதுவது.

துவார், கும்பகோணம், என்கிற ஊர்களில் பிராமணசபை என்று பாப்பார்கள் கூட்டம் கூட்டினார்கள். அதில் "பிராமணர்களை பத்திரிகைகளிலும் பகிரங்க மேடைகளிலும் சிலர் தூஷிக்கிறார்கள்" என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கும், சில பாப்பார்களுக்கும், அடிமை, ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன் என்னும் அர்த்தத்தையுடைய சூத்திரன் என்பதின் இழிவை உணராதபணக்காரனுக்கும், சமயவாதப்பண்டிதர்கட்கும் குடி அரசின் மூலமாக பல நியாயங்கள் எடுத்துக் காட்டினோம். இந்த வியாசத்திலும் இன்னும் முக்கிய விஷயங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

பணக்காரர்களே, பண்டிதர்களே, பட்டம் பெற்ற கனவான்களே, பிரபுக்களே! சாஸ்திரத்திலிருந்தும் சமயத்திலிருந்தும் இடைவிடாமல் அவமானமும் கஷ்டமும் பட்டுப்பட்டு தீண்டலாயிருப்பதை தீர்த்துக் கொள்ளுவதற்கு தைரியமாய் உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் "குடி அரசு"க்கு ஆசி கூறாமல் கோபிக்கும் சமயவாதப் பண்டிதர்களே! துவாரில் கூடின முதல் பிராமண சபைக்கும் கும்பகோணத்தில் கூடின இரண்டாவது சபைக்கும் தீர்மானத்திலுள்ள வித்தியாசங்களைப் பார்த்தீர்களா? முதல் சபையில், பாப்பான் ஒருவனொழிய நீங்களும் நாங்களும் மற்றெல்லோரும் அடிமைகள், தாசிமக்கள், கண்டதை உண்பவர்கள் என்று தீர்மானம் செய்தார்கள். முதல் சபைத் தலைவர் பாலக்காட்டுப் பாப்பான்; அதுபோலவே இரண்டாவது சபைத்தலைவரும் பாலக்காட்டுப் பாப்பானாகவிருந்தும் முதல் சபையின் தீர்மானம் இரண்டாம் சபையில் விடப்பட்டதற்கு காரணமென்ன? நமது பண்டிதனுக்கும் பணக்காரனுக்கும் பயந்தா? நமது பண்டிதர்களின் கோழைத்தனமும் பணக்காரச் சோம்பலும் பாப்பார்களுக்குத் தெரியாதா? சுயமரியாதைச் சங்கங்களும் அதன் தொண்டர்களும சமய சாஸ்திரங்களினால் சமூகங்களைத் தாழ்த்தி வைத்திருக்கும் ஏற்பாட்டையும் கொடுமைகளையும் அநியாயங்களையும் பகிரங்கமாக எடுத்து உலகறிய மீண்டும் மீண்டும் முறையிடத்தக்க தைரியவான்களாக இருந்ததினாலல்லவா அத்தீர்மானம் மாற்றப்பட்டது. ஆதலால் நீங்களெல்லாம் அவர்களுக்கு உதவியாகவிருந்து உங்கள் காரியமும் நீங்கள் செய்ய வேண்டிய காரியமுமானதையே அவர்கள் செய்கிறார்கள் என்று நினைத்து அவர்களுக்கு விரோதம் செய்யாமல், எதிரிகளுக்கு காட்டிக் கொடுப்பவர்களையும் கண்டித்து, சைவ சித்தாந்த சபை பிரசங்கங்களில் அங்கொரு வார்த்தை இங்கொரு போக்காக குற்றம் சொல்லுகிறவர்கள் தலைமேல் ஆசாரம் கெட்டவன் ஒழுக்கமில்லாதவன் தேவடியாள் மகன் என்கிற ஜாதி ஏறியிருப்பதை இறக்கி வைப்பதில் பண்டிதத்திறமையைக் காட்டும்படியாகச் சொல்லி, அவர்கள் பக்கமே நீங்களிருந்தால் சாப்பிக்கையிலிருந்து இந்துலா என்கிற இங்கிலீஷ் சட்டபுஸ்தகம் வரையிலுமுள்ள எல்லாவிடத்து சூத்திரப் பேரையும் எடுத்து விடுவார்கள். ஆனால் கடவுளுக்கு ஒரு ஆபத்தும் வந்து விடாதென்று சத்தியமும் செய்து தருவார்கள்.

"பிராமணன் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், எனவருணம் நான்கு. இதில் க்ஷத்திரியனும் வைசியனும் கலியுகத்தில் இப்பொழுதில்லை. பிராமணன் சூத்திரன் என்பவர்களே இருக்கிறார்கள்" என்று திரு அனந்தகிருஷ்ண அய்யரை சபைத் தலைவராக கொண்ட துவார் மகாநாடு தீர்மானம் செய்தது. சபைத்தலைவர் கல்கத்தாவில் இங்கிலீஷ் உபாத்தியாயராக இருப்பவர். தென்தேச ஆசார அனுஷ்டானங்களை விட்டு வடதேசத்திலிருக்கும் பாலக்காட்டுப் பாப்பான். இவர் அன்னிய பாஷை படித்து அதற்கே உபாத்தியாயராகவுமிருப்பதால் தருமசாஸ்திரங்களில் தள்ளப்பட்டு பிராமண தருமத்திற்கு புறம்பாய் ஒதுக்கப்பட்டவர். ஏகதேச அறிவு பரவியிருக்கும் இந்த காலத்தில் "உயர்ந்த பிராமணர்களான நாங்களும் தாழ்ந்த சூத்திர அடிமைகளான நீங்களும் தான் உலகத்திலிருக்கிறோம்." என்று சொல்லுவது ஆணவத்திலுள்ள அநீதியல்லவா?

இதை எந்த பண்டிதராவது கவனித்தாரா? சமாதானம் கூறினார்களா? கூறினால் கம்பராமாயணத்தின் கலை போய்விடும், காவிய அழகின் ஓவியம் போய் விடுமென்று சொல்லும் பண்டிதத் திறமைக்குப் பங்கம் வந்து விடுமா? சூத்திரன் என்பதின் அர்த்தம் பண்டிதர்களுக்குத் தெரியாதா? முன் சில சைவர்களின் ஆட்சேபனைக்கு "நீங்களெல்லாம் சற் சூத்திரர்கள் மற்றவர்கள் தான் அசல் சூத்திரர்கள்" என்று பாப்பான் சொல்ல அதைக்கேட்டு ஒதுங்கி நின்ற சிலரைப்போல் இப்பொழுதும் பண்டிதர்கள் தாங்கள் சற்சூத்திரர்கள் என்று ஒதுங்கி நிற்கிறார்களா? சற் சூத்திரனென்றால், நல்ல அடிமை, நல்ல ஆசாரம் கெட்டவன், நல்லொழுக்கமில்லாதவன், நல்ல தாசிமகன் என்ற அர்த்தத்தின் அகராதி பண்டிதர்கள் பார்வையில் படாவிட்டாலும் சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதின புஸ்தகத்தையும் படிக்கவில்லையா?

நவீன நாகரீகத்தின் சில தோற்றங்களை மாற்றி உயிர் களைத்துப் போய் மேல்தோல் செத்துக் கிடக்குமிடத்தில் உயிரைப் பொழிந்து அவசியமில்லாத விதியினிடத்தே மனுஷிய இருதயத்தைப் போட்டு, இன்னிசையும் உயிருமுள்ள வளர்ச்சியையும் உண்மையையும் அழகையும் மேலாக எண்ணி, கேவலம் காரியலாபத்தையும் வலிமையையும் தாழ்வாக நினைத்து, நம் தேசத்தையும் நடத்திப் பார்க்க சில புதிய யோசனை செய்ய வேண்டுமென்று சொல்லும் ராமசாமி நாயக்கருக்கு சாஸ்திரப் படிப்பில்லையாம். சாஸ்திர சமயப்படிப்பும் நுண்ணிய ஆராய்ச்சியுமுடைய நம் பண்டிதர்கள், ஆசாரம்கெட்டவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதைத்தின்போன், அடிமை, முட்டாள் என்கிற சூத்திரனுமிற்றே. இந்தப் பேரை மாற்றிக் கொள்ள என்ன செய்யப் போகிறார்கள்? சமயத்தில் ஒளிந்து கொள்ளவோ வழியில்லை. நாயக்கர் சொல்லும் வழியல்லாமல் வேறெந்த வழியில் ஒளிந்தாலும் காட்டிக்கொடுக்க சமயத்தில் உளவு இருந்தே இருக்கிறது. கடவுள் சொன்னது, பெரியவர்களால் கூறப்பட்டது, சாஸ்திரத்தால் அங்கீகரிக்கப்பட்டது, ரிஷிகளால் சொல்லப்பட்டது, அவதார புருஷர்களால் நடந்து காட்டப்பட்டது, வழக்கத்தில் வந்து விட்டது, பாப்பார சபையால் தீர்மானம் செய்யப்பட்டது, அரசாங்க சட்டத்திலும் அடங்கிப் போய் அடிமை கொண்டு இருப்பதல்லவா சூத்திர தருமம்? காடு மலைகளிலுள்ள மூலை முடுக்கு அந்தி சந்தி அருவி ஓரம் மானுக்காக புலி பதுங்கி யிருப்பது போல சமயங்களின் சந்திலும் இதிகாச புராணங்களின் இடைச்சந்துகளிலும் காவியத்தின கலையிலும் கவியின் திறத்திலும கடவுளின் கட்டளையிலும் மோக்ஷ வழியிலும் இந்து லாவிலும் பதுங்கிக்கிடப்பதல்லவா பிராமண தரும பாரபட்சம்?

பல காலமாக, பாப்பான் சொல்லுவது ஞாயம் தான், சாஸ்திரம் தான், கடவுளுக்குச் சம்மதம் தான் என்று பண்டிதன் முதற் கொண்டு கேட்டுக் கொண்டு வந்தமையால் பாப்பார்களும் கவலையற்று எது வேண்டுமானாலும் சொல்லவும் செய்யவும் ஏற்பட்டது. அந்தவழக்கத்தை அனுசரித்து சபைத்தலைவரும் சபையும் தீர்மானம்செய்துவிட்டார்கள். அதுவுமல்லாமல் நம்பண்டிதர்களுக்கு இலக்கிய இலக்கணம்தெரியும். பாட்டைப்பதம் பிரிக்கத்தெரியும். ராமாயணபாரதத்திற்கு அர்த்தம்சொல்லத்தெரியும். மற்றபடி யாதொன்றும் தெரியாது. சாஸ்திரம் மந்திரம் இவர்கட்கு வராதென்று பாப்பான் அநேக நாளாக அலட்சியப்படுத்தி வந்திருப்பதாலும், எப்படியானாலும் சூத்திரன் தானே என்று ஏக வசனத்தால் நம்மையும் மனிதன் என்று நினைக்கும் பழக்கமில்லாததாலும் 'பிராமணனென்கிற அறிவுடைய நாங்களும் சூத்திரனென்கிற அடிமை முட்டாள்களான நீங்களுமிருக்கிறீர்கள்' என்று சபைத்தலைவர் சொல்லவும் சபை அங்கீகரிக்கவும் பாப்பார பத்திரிகைகளெல்லாம் அதைப்பிரசுரித்து உலகத்துக்குத் தெரியப்படுத்தவும் ஏற்பட்டது.

இந்த மாதிரியான தீர்மானம் எந்த தேசத்திலாவது நாட்டிலாவது கூட்டத்திலாவது மேடையிலாவது தீர்மானம் செய்ய முடியுமா? 'நாங்கள் அறிவாளி, நீங்கள் முட்டாள்; நாங்கள் உயர்ந்த ஜாதி, நீங்கள் தாழ்ந்த ஜாதி; நாங்கள் எஜமான் நீங்கள் அடிமை; நாங்கள் முதலாளி, நீங்கள் கூலியாள்; நாங்கள் ஆசார முடையவர்கள், நீங்கள் ஆசாரமில்லாதவர்கள்; நாங்கள் ஒழுக்கமுடையவர்கள் நீங்கள் ஒழுக்கம் கெட்டவர்கள்; நாங்கள் பெண்ஜாதி மக்கள், நீங்கள் தாசி மக்கள் நாங்கள் பகுத்துண்பவர்கள், நீங்கள் கண்டதைப் புசிப்பவர்கள், இந்த விதத்தன்மையோடு கூடிய உயர்ந்த பிராமண ஜாதியும் தாழ்ந்த சூத்திரஜாதியுமே இந்து சமூகத்திலிருக்கின்றன' என்பது தானே முதல் மகாநாட்டுத்தீர்மானங்களில் முக்கியமானது. சுயமரியாதை வேண்டுமென்று சொல்லுகிறவர்களை சைவசபைப் பிரசங்கங்களில் வார்த்தையோடு வார்த்தையாகக் குற்றம் சொல்லும் 'இயற்கை அழகை' விரும்பும் பண்டிதர்களே! தமிழன் தலையில் பூதாகாரமாக விழுந்து கிடக்கும் பழிக்கு கருமாந்திரம் கல்லெடுப்பு செய்து அதைசுடுகாட்டில் சுட்டுத்தொலைக்காமல் இனிமேல் விழப்போகும் சமய சாஸ்திரப் பேரிழவிற்கு கருமாந்திரம் இப்பொழுதே செய்ய 'நுண்ணறிவு வேண்டும் உன்னிய பார்வை வேண்டும், இயற்கையழகு வேண்டும், தவம் கிடக்க வேண்டும், இதற்கெல்லாம் இன்னொரு தரம் திருஞானசம்பந்தர் பாலனாகத் தோன்றவா' என்று சொல்லி விட்டால் பண்டிதத்தன்மை முடிவடைந்து விட்டதா? இப்படிப்பட்ட அசம்பாவிதத்தின் செந்தபாரம் நெடுநாள் ஸ்திரமான சமநிலையில் இருக்குமா? இதற்கு நெறிப்படி ஒரு தீர்ப்புச் செய்யாவிடின் சரித்திரத்தின் சோக நாடகத்தில் பயங்கரமான திரை விழுந்து கொண்டேயிருக்குமே, இந்து தேசத்தின் புராதன சரித்திரமாகிய நாடகம் இப்படியே சோகமாக முடிந்திருக்கிறது. சில மனிதர்கள் ஒன்று சேர்ந்து யோசனை பண்ணி நாம் என்றைக்கும் பிரிவுபட்டு நிற்க வழிகள் தேடியதும், தமக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய ஸ்வதந்திரங்களைப் பிறர் அனுபவியாமல் தடுத்ததும், சர்வசாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்கு சிறப்புரிமைகள் என்று பெயர் சூட்டி மானுஷீகத்தை அவமானப்படுத்தினதும், இந்த அசம்பாவிதங்களைக் காப்பாற்ற எத்தனையோ பலமான சாஸ்திர மூட்டைகளை வைத்து காத்து தென் தேசத்து இயற்கை அழகைக்கெடுத்ததுமான உண்மைகளை ராமசாமி நாயக்கர் கண்டுபிடித்து விட்டார் என்பதை உலகம் தெரிந்துவருகிறது.

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

## திருவாளர் சந்திரசேகரப்பாவலரவர்களை

# வினாவும் வினாத் தொடர்.

திரு. பாவலர் அவர்களே! தாம் "குடி அரசில்" இதிகாசங்கள் என்ற தலைப்பின் கீழ் எழுதிவரும் இராமாயணத்தைப்பற்றிய கட்டுரைகள் வான்மீகத்தைப்பின்பற்றியே வெளியிட்டுவருவதாக பன்முறையும் தெரிவித்திருக்கின்றீர்களாதலின் ஈண்டு சில ஐய வினாக்களுக்கு விடையளிக்குமாறு விரும்புகின்றேன்.

1. 25-11-33ல் வெளிப்போந்த 'குடி அரசில்' அயோத்தியாகாண்டம் கட்டுரை 6 ல் 'கைகேசியை மணஞ்செய்யும்போது அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அரசைத்தருவதாக வாக்குறுதிசெய்தான பின் அதற்கு மாறாக இராமனுக்குப் பட்டங்கட்ட முயலுகின்றான் தசரதன்' என்று வெளியிட்டிருக்கின்றீர்கள். இவ்விபரம் அயோத்திபாகாண்டத்தில் எந்த அத்தியாயத்தில் எவ்வெண்ணுடைத்தசுலோகத்தில்கூறியிருக்கின்றது?

2. அவ்வாறாயின் பட்டம் பரதனதேயாகவேண்டுமென வாதிடுவதை விட்டு என்றோ சம்பரன்போரிற்கிடைத்த இருவரத்தையாசித்து ஈரேழாண்டு பரதன் நாடாளவும் இராமன் அது காலம் வரை காடேகவும் அதனால் சொற்ப காலம் வரை அற்ப சுகமடைந்து அதற்காக தீராக்கோபம் போரோய்விளைவித்துக்கொள்வானேன்? இது உள்ளங்கைத்தேனை ஒழுகவிட்டு முழங்கையை நக்கும் முட்டாள் தனமாகத்தோன்றவில்லையா?

3. ஓர்பெண்ணாகிய கைகேசியைக் காட்டிலும் ஓர் ஆணாகிய இராமனிடத்தில் அளவற்ற ஆசைகொண்டு பிரியமாட்டாமல் தவிப்பதற்கு ஏதாவது தகுந்த காரணங்களிருக்க வேண்டும்? 'இராமனை தசரதன் மிகுந்த அழகுள்ளவனாகப் புகழுவதினால் உலகத்தில் சிலரைப்போல ஆண் பித்துக்கொண்டவன் போலும் தன் ஆசைக்கு இருப்பிடமான இராமன் அருகில் இல்லாததால் கைகேசியின் மேல் சாய்கின்றான்' என்றதில் ஆண்பித்துக் கொள்ளுதல் என்றதில் கருத்தென்ன?

4. 'ஆரியர் வணங்கும் திருமால் வேறு, நம் தமிழ் மக்கள் வணங்கும் திருமால் வேறு' யென்று கூறி இதைப்பின்பு கூறுவதாயுரைத்து நீண்ட காலமாகியும் இதுவரை அதுவெளியிடப்படவில்லை. அத்திருமாலைப்பற்றி எந்த நூலின் வாயிலாலுணரத்தகும்?

5. இராவணனுக்கு முக்கோடி வயதெனக்கூறியிருப்பாக எடுத்தாண்டிருக்கின்றீர்கள். அவ்வாறு வான்மீகத்தில்யாண்டுளது?

இவ்வினாக்களுக்கு தயவுசெய்து தக்கநூல்களின் ஆதாரவுடன் பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுயமரியாதை அன்பன்,
கே. கூத்தப்பன், மேலூர்.

## திரு K. கூத்தப்பன் அவர்களின் வினாத்தொடருக்கு விடை

நண்பர் திரு. கே. கூத்தப்பன் விடுத்த வினாத் தொடரைக் கண்ணுற்றோம். வினாக்களில் ஒன்று இரண்டு மூன்றுக்கு விடை அயோத்தியாகாண்டம் ஒன்பதாவது கட்டுரையிற் பரக்கக்காண்க. வினாக்கள் நான்கும் ஐந்தும் இராவணனைப்பற்றி ஆராயுமிடத்து விளக்கப்படும். அது வரை நண்பரை அன்பு கூர்ந்து பொறுத்திருக்கவேண்டுகிறோம்.

சந்திரசேகரப்பாவலர்.

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(10-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

இக்கட்டுரையில் நாம் நமது சொந்த மொழியாக ஒன்றும் கூறோம். கதைத்தொடர்ச்சியிலும் செல்லேம். ஆயின் மொழிபெயர்ப்பாளராகிய சென்னை சமஸ்கிருத காலேஜ் உபாத்தியாயர் திரு. சி. ஆர். சீனிவாசய்யங்கார் பி. ஏ., தமது வான்மீகி இராமாயண வசனம்- அயோத்தியா காண்டம் இரண்டாம் பதிப்பு (1925) கடைசியில் "அயோத்திபாகாண்டம் குறிப்புகள்" என்ற தலைப்பிட்டு எழுதும் பாகத்திலுள்ள கீழேகண்ட குறிப்புக்களை மட்டும் அவர் எழுதியுள்ளபடியே கீழே குறிக்கின்றோம். அவைகளை நண்பர்கள் கவனித்துப்படித்து உண்மையுணர்வார்களாக. கதைத்தொடர்ச்சியும் ஆராய்ச்சியும் அடுத்த கட்டுரையில் எழுதுவோம்.

(1) "தசரதர் முன்பு தான் கைகேயிக்கு இரண்டு வரங்களைக் கொடுத்து, எதைவேண்டுமானாலும் கேட்கலாமென்று அஜாக்கிரதையாக வாக்களித்ததை மறந்ததும்,

(2) அவளை விவாகஞ் செய்தபொழுது அவளுக்குப்பிறக்கும் புத்திரனுக்கே ராஜ்பத்தைக்கொடுப்பேனென்று செய்த ஒப்பந்தத்தை மறந்ததும்,

(3) அறுபதாயிரம் வருஷங்களான பிறகும் காம மோகத்திற்கு அடிமைப்பட்டுத் தன் மூத்த பார்யையான கௌஸல்யை சுமித்திரைகளைத் தகுந்தபடி நடத்தாமல் அலக்ஷ்யஞ் செய்ததும்,

(4) கைகேயீயின் கோபத்தைத் தணிப்பதற்காக எதைக்கேட்டாலும் கொடுக்கிறேனென்று அஜாக்கிரதையாக வாக்களித்ததும்,

(5) முன்பு கைகேயிக்கும் அவளுடைய பிதாவிற்கும் செய்த பிரதிக்ஞைக்கு விரோதமாக ராமனுக்கு அதே ராஜ்பத்தைக்கொடுப்பேனென்று ஜனங்களுக்கு முன்பாகப்பிரதிக்ஞைசெய்ததும்,

(6) பிறகு கைகேயீ கேட்ட வரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டினதால் இராமனை காட்டிற்கனுப்பி அந்த பிரதிக்ஞை வீணானதும்,

(7) இப்படியெல்லாம் நியாய விரோதமாக நடந்ததால் அவருடைய பூர்வ பிரதிக்ஞையின்படி பரதனுக்குக் கிடைக்க வேண்டிய ராஜ்பத்தை அவன் அடையாமற் போனதும்,

(8) வசிட்டருடைய சொற்படி இக்ஷ்வாகு வம்சத்தில் பல தலைமுறைகளாய் மூத்த புத்திரனுக்கே ராஜ்யம் கிடைக்க வேண்டுமென்று குல தர்மத்தை கேவலம் காமத்தால் தூண்டப்பட்டு ஒரு பெண்ணை விவாகஞ் செய்வதற்காகத் தசரதர் மாற்றினதும்,

(9) தான் அஜாக்ரதையால் செய்த பிரதிக்ஞையின் பயனை வருந்தாமல் அனுபவிக்க வேண்டியிருக்க அவர் கைகேயியைக் குற்றஞ் சாட்டி நிந்தித்துச் சபித்து அந்த வரங்களை விட்டுக்கொடுக்கும்படி பிரார்த்தித்ததும்,

(10) தன்னையும் தன் தன்மையையும்மறந்து அவளுடைய கால்களைப்பிடித்துக்கொள்ள முயன்றதும்,

(11) முன்பு நடந்த விஷயங்களை நன்றாக அறிந்த சுமந்திரரும் வசிட்டரும் தசரதரை எச்சரித்து ஞாபகப்படுத்தி ராமனுக்கு அபிஷேகம் செய்ய நிச்சயிப்பது பூர்வ பிரதிக்ஞைக்குவிரோதமென்று தடுக்காமலிருந்ததும்,

(12) மூன்று காலங்களையுமறிந்த வசிட்டர் மேற்சொன்னதை மறந்து ராமனுக்கு யௌவராஜ்பாபிஷேகம் நடக்காதென்று தெரிந்தும் அதற்கு முகூர்த்தம் வைத்து சகல ஏற்பாடுகளையும் செய்ததும்.

(13) தனக்கு நியாயமாகக் கிடைத்த வரங்களை பூர்த்தி செய்யும்படி கேட்ட கைகேயீயை வசிஷ்டரும் சித்தார்த்தரும் சுமந்திரரும் தடுக்கப் பார்த்ததும் கண்டித்ததும்,

(14) ராமனுடைய அபிஷேகத்திற்காக பிரஜைகளின் சம்மதியை அபேக்ஷித்த தசரதர் பிறகு கைகேயீக்கு வரங்களைக் கொடுத்து அதன்படி ராமனைக் காட்டிற்கனுப்பின பொழுது மந்திரிகளையும் மஹரிஷிகளையும் பிரஜைகளையும் கொஞ்சங்கூடக் கலந்து கொள்ளாமல் யதேச்சாதிகாரமாக நடந்ததும்,

(15) அதே ஜனங்களும் மந்திரிகளும் அவருடைய நடத்தையைக் கண்டித்து அப்படிச் செய்யக் கூடாதென்று தடுக்காமலிருந்ததும்,

(16) தன் வம்ச சரித்திரத்தையும் ராஜ்ய ரகசியங்களையும் நன்றாயறிந்திருக்க வேண்டிய ராமனும் பரதனும் முன்பு தசரதர் கைகேயீயை விவாகஞ் செய்த பொழுது அவளுடைய புத்திரனுக்கே ராஜ்யத்தைக் கொடுப்பதென்று செய்த ஏற்பாட்டை அறியாமலிருக்க முடியாதென்பதும் (அயோத்தியாககண்டம் சர். 107) அப்படியிருந்தும் தசரதர் தனக்கு அபிஷேகம் செய்விப்பதாய்ச் சொன்னபொழுது அவருக்குப் பூர்வ விருத்தாந்தத்தை ஞாபகப்படுத்தாமல் அபிஷேகஞ் செய்து கொள்ள இராமன் சம்மதித்ததும்,

(17) 'இம்மாதிரி காரியங்களுக்குப் பலவகை இடையூறுகள் நேரும், உன் தம்பி பரதன் மிகவும் நல்ல எண்ணமுடையவனே, இந்திரியங்களை ஜயித்தவனே, தயையுள்ளவனே, ஆனாலும் அவன் இங்கிருந்து அம்மான் வீட்டுக்குப்போய் நாளாயிற்று, தர்ம சிந்தையுள்ளவர்களாயும் சாதுக்களாயும் பிறரால் கலைக்க முடியாத மனதுள்ளவர்களாயுமிருக்கும் மனிதர்களுடைய மனசும் மாறிவிடும், ஆகையால் பரதன் ஊருக்கு வருவதற்கு முந்தியே இந்தக் காரியத்தை முடிப்பது நல்லது" என்று (அயோ 4) தசரதர் சொன்னதால் பரதனை வஞ்சித்து அவனுக்கு கிடைக்க வேண்டிய ராஜ்யத்தை நயமாகராமனுக்குக் கொடுக்க நிச்சயித்ததும், ராமன் அதற்கு ஆட்சேபிக்காமல் அதை ஒப்புக்கொண்டதும்,

(18) ராமனுக்குக் கிடைக்கவேண்டிய ராஜ்யத்தைத் தான் பரதனுக்குக் கொடுக்கும்படி முடிவில் ஒரு வேளை நேரிட்டால் அந்த அக்கிரமத்தை ஜனகர் ஒப்புக்கொள்ளாமல் கண்டிப்பாரென்று அவருக்கு சமாசாரம் அனுப்பாததும்,

(19) பரதனுக்குக் கொடுப்பதாய் விவாக காலத்தில் ப்ரதிக்ஞை செய்த ராஜ்பத்தை ராமனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்ததைக் கேட்டால் கேகய ராஜன் ஆட்சேபிப்பானென்று அவனுக்கு சமாசாரம் அனுப்பாமலிருந்ததும்,

(20) மற்ற அரசர்களுக்குச் சொல்லி அனுப்பியதும் சிக்கலான விஷயங்களே............

பத்மபுராணத்தில் இதைக்காரணமாகவைத்துக் கொண்டுகைகேயிக்குத்தசரதர் செய்தபிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக இராமனுக்குச் செய்த பிரதிக்ஞையைத் தவறினாரென்றும், அதற்காக அவருக்கு நல்லகதி கிடைக்கவில்லை யென்றும் சொல்லப்படுகிறது.........மேலும், கைகேயீயும் மந்தரையும் செய்த காரியங்களுக்குத் தகுந்த நியாயமும் காரணங்களும் காணப்படுகின்றன. அவைகளைப் புறக்கணித்து அவர்களை எல்லையில்லாமல் நிந்திப்பதும் குற்றஞ்சாட்டுவதும் நியாயத்திற்கு ஒத்ததாகத் தெரியவில்லை. இதில் ரகசியத்தைப் பரத்வாஜர் பரதனுக்குச்(92 வதில்)சொல்லுகிறார்"

மேலேகண்ட குறிப்புகளெல்லாம் மொழிப்பெயர்ப்பாளர் திரு. அய்யங்காருடையன. இவைகளில் பல உண்மைகள் உறைவிருப்பதை அறிஞர் அறிவார்களாக. இனி கதைத்தொடர்ச்சியிற் செல்வோம்.

# காக்கை குருவி சம்பாஷணை.

சித்திரபுத்தின் எழுதுவது.

குருவி—ஓ. காக்கையே! நீ எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் பார்ப்பனர்களை ஜெயித்து விடலாம் என்றோ அல்லது அவர்களுடைய புரட்டுகளை வெளியாக்கிவிடலாம் என்றோ நினைப்பாயேயானால் அது அவ்வளவும் பகற்கனவு தான். காரியத்தில் சுலபத்தில் முடியும் காரியம் அல்ல. அடியோடு தடியடியாய் அடித்தால் அதுவும் ஒரு சமயம் முடியும்.

காக்கை—என்ன குருவியே! நீ இப்படிச் சொல்கின்றாய்! பார்ப்பான் சங்கதி எடுத்ததெல்லாம் புரட்டாயிருக்கின்றது. அவன் சொல்வதெல்லாம் புழுகாயிருக்கின்றது. இதை வெளிப்படுத்த முடியாது என்கின்றாயே உனக்கு என்ன அவனிடத்தில் அவ்வளவு பயம்?

குருவி—எனக்கு பயம் ஒன்றுமில்லை, நீ பார்ப்பன தந்திரத்தை சரியாய் உணரவில்லை, தெரிந்திருந்தால் இவ்வளவு லேசாக அவனை மதித்திருக்கமாட்டாய்.

காக்கை—சரி நீ உணர்ந்த விஷயத்தைத் தான் சொல்லு பார்ப்போம்,

குருவி—சொல்லட்டுமா?

காக்கை—சொல்லு சொல்லு.

குருவி—முதலாவது, பார்ப்பான் எந்த விஷயத்தைச் சொல்ல வந்தாலும் 'அது உன் கண்ணுக்கும் மனதுக்கும் அறிவுக்கும் எட்டாதது' என்று சொல்லிவிடுவான்' இரண்டாவது, இந்த லோகத்தில் பிரத்தியக்ஷத்தில் கண்டு பிடிக்கக் கூடியதாகவோ இப்போது நடந்ததாகவோ எந்த விஷயத்தையும் அவன் சொல்லி சிக்கிக் கொள்ளாமல் அவன் எது சொன்னாலும் மேல் ஏழு லோகத்தில் உண்டு என்றும் கீழ் ஏழு லோகத்தில் உண்டு என்றும்தான் சொல்வான் 'கண்ணுக்குத்தெரியாத சூக்ஷும சரீரத்தோடு இருக்கின்றார்கள்' என்று தான் சொல்லுவான்.

'போன யுகத்தில் நடந்தது, அதற்கு முந்தின யுகத்தில் நடந்தது, பிரளய காலத்தில் நடந்தது' என்று தான் சொல்லுவான். 'அசரீரியாய் சொல்லிற்று, மாயாரூபியாய் இருந்தது' என்று தான் சொல்லுவான். 'நம்பினால் தான் உண்டு நம்பாவிட்டால் பாவம்' என்று சொல்லுவான். இவைகளில் நீ எதைக்கண்டு பிடித்து பார்ப்பானைப் பொய்யன் என்று சொல்லி விட முடியும்? சொல்லு பார்ப்போம்.

காக்கை—நீ சொல்லுவது ஒரு விதத்தில வாஸ்தவம் தான். அதனாலேயே எல்லாம் பொய் என்று சொல்லிவிடமுடியுமா?

குருவி—ஆனால் நான் காணும் சொல்லுகின்றேன். [illegible] பாப்பான் சொல்லுவதில் ஒன்றைக்கூட நீ பொய்யென்று ருஜுப்படுத்த முடியுமா?

உதாரணமாக, இந்த உலகம் எத்தனையோ யோசனை தூரம் [illegible] என்கின்றான். நீ எப்படி அதைப் பார்த்து தப்பு என்று சொல்ல முடியும்? எத்தனையோ மனுக்கள், பிர்மாக்கள், விஷ்ணுக்கள், சிவன்கள் பிறந்து இறந்தாய் விட்டது, ஒவ்வொருவருக்கு எத்தனையோ யுகங்கள் ஆயுள் என்று சொல்லுகின்றான். அதில் ஒரு வினாடி கம்மி என்று உன்னால் சொல்ல முடியுமா?

'எத்தனையோ சிரஞ்சீவிகள் இருக்கின்றார்கள், ஆனால் ஒருவரும் உன் கண்ணுக்கு தென்படமாட்டார்கள்' என்கின்றான். இவற்றுள் ஒரு சிரஞ்சீவியாவது இல்லை என்று உன்னால் சொல்ல முடியுமா?

நீ இதற்கு முன் இத்தனை ஆயிரம் ஜன்மம் எடுத்தாய் விட்டது. ஆனால் அது உனக்கு இப்போது தெரியாது என்று சொல்லுகின்றான். அதை நீ இல்லை இல்லை என்று சொல்ல முடியாது.

'நீ எங்களுக்கு கொடுக்கும் சிரார்த்தம் முதலியவைகளை உனது பிதுர்க்கள் சூக்ஷும சரீரத்துடன் வந்து பெற்றுப் போகின்றார்கள். ஆனால் அது உன் கண்ணுக்குத் தெரியாது' என்கின்றான். நீ அவற்றுள் ஒரு கடுகளவாவது பொய்ச்சொல்லை என்று சொல்லி அவனிடம் தப்பித்துக் கொள்ள முடியுமா? சொல்லு பார்ப்போம்?

பார்ப்பனீயம் இத்தனை காலமாய் நமது நாட்டில் இருப்பதற்கு காரணமே இது தானே. எதை எடுத்தாலும் உனக்கு 'தெரியாது, உன் கண்களுக்குப் படாது, உன் புத்திக்கும் மனதுக்கும் எட்டாது, நீ அதைப் படிக்க அருகனல்ல, யுக்தி வாதங்களால் தர்க்கம் பண்ணுவது நாஸ்திகம், சூக்ஷும சரீரம், இதெல்லாம் சோதனை, சிவன் பார்வதிக்குச் சொன்னார், ராமருக்கு வசிட்டர் சொன்னார், சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்கு சொன்னார். சுகர் சொன்னார் ஜனமேஜயர் சொன்னார், பகவான் கீதையில் சொன்னார்', என்றே சொல்லுவார்கள். 'யார் சொன்னார்? எப்பொழுது சொன்னார்? யார் ஒண்டிக் கேட்டுக் கொண்டிருந்தது?' உனக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டால், அது நாஸ்திகம் என்று சொல்லிவிடுகின்றான். நீயோ நாஸ்திகம் என்றால் நடுங்கி விடுகின்றாய், பிறகு எப்படி நீ அவனை ஜெயிக்க முடியுமென்று சொல்லு பார்ப்போம்.

காக்கை—ஆமாப்பா நீ சொல்லுவதெல்லாம் சரியாய்த்தான் இருக்கின்றது. மனுஷனை குண்டா முண்டா கட்டிப் போட்டு விடுகின்றான், ஒன்றையாவது யோசித்துப் பார்ப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஆனாலும் பார்ப்பனர்கள் புத்திசாலிகள்தான் அதில் சந்தேகமில்லை.

குருவி—அவர்களை புத்திசாலிகள் என்றால் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். தந்திர சாலிகள் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்.

காக்கை—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? அவர்கள் புத்திசாலித்தனம் உனக்கு விளங்கவில்லையா?

குருவி—அவர்கள் புத்திசாலிகளா என்கின்ற விஷயத்தை சற்று கவனித்துப்பார். நீ எந்தப் புராணத்தையோ சாஸ்திரத்தையோ வேதத்தையோ வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்துபார். இமயமலைக்கு அப்புறம் அவர்கள் ஒன்று கூடத்தெரிந்துகொண்டிருப்பதாய்க்காணமுடியாது. அது மாத்திரமல்லாமல் பார்ப்பானுக்கு கைலாயமே இமயமலை தானே. அது பனிக்கட்டியில் மூடியிருப்பதால் அதை 'வெள்ளியங்கிரி' என்று சொல்லிவிட்டான். அந்தக்காலத்தில் அங்கு யாரும் போகமுடியாமல் இருந்ததால் 'சிவன் அங்குதான் இருந்தான், உமை அந்த மலைக்குத்தான் பிறந்தாள், பிர்மா அங்கு தான், ரிஷிகள் அங்கு தான், தேவர்கள் அங்கு தான், சுவர்க்கம் அங்குதான்' என்று எல்லாவற்றையும் அந்த மலையின் தலையிலேயே போட்டுவிட்டான்.

அது மாத்திரமா? மலையைப்பார்த்தால் அது ஒரு தேவதை, சமுத்திரத்தைப்பார்த்தால் அது ஒரு தேவதை, மழைபெய்தால் அது ஒரு தேவதை, காற்றடித்தால் அது ஒரு தேவதை, நெருப்பெரிந்தால் அது ஒரு தேவதை, சூரியன் ஒருதேவதை, சந்திரன் ஒரு தேவதை, நக்ஷத்திரம் ஒவ்வொன்றும் தனித்தனி தேவதை, இது போலவே அந்தப்பயல்களுக்கு (சையன்ஸ்) விஞ்ஞான சாஸ்திரம் தெரியாததால் தொட்டதெல்லாம் தேவதை தேவதை என்று பேர் வைத்து ஒவ்வொன்றின் பேராலும் நம்ம தலையில் கையைவைத்து கொள்ளையடிக்க சவுகரியம் செய்து கொண்டான். அவன் முட்டாள்தனமும் அவனுக்கு உதவியாக இருக்கின்றது. ஆனால் நம்முடைய அறிவோ நமக்கு நாஸ்திகமாயும் எமனாகவும் இருக்கின்றது.

இதெல்லாம் கிடக்க, உன் தலையில் கையை வைத்திருப்பது உனக்குத் தெரியுமா? ஓ காக்கையே! நீ ஒருகாலத்தில் சீதையினுடைய முலைக்காம்பைக்கொத்தி விட்டாயாம். சீதையின் புருஷனாகிய இராமன் உன் கண்விழிகளில் ஒன்றைப் பிடுங்கிவிட்டானாம். அதனால் நீ ஒற்றைக்கண் குருடாய் இருக்கிறாயாம். இந்தப்படி எழுதி வைத்திருக்கிறான் உன் பேரில் அவர்களுக்கு இருந்த கோபத்தினால். பெண்களிடம் கூட மரியாதை இல்லாமல் சீதை, ஒரு காக்கை வந்து கொத்தும்படி அவ்வளவு மெய்மறந்து தனது மார்பைக் காட்டிக் கொண்டு படுத்திருந்தாள் என்று எழுதியிருக்கின்றான். எனவே அவர்கள் சங்கதி சுலபத்தில் சரிப்படுத்தக் கூடியதல்ல.

காக்கை—நேரமாய் விட்டது. சாவகாசமாய் பேசிக் கொள்ளலாம்.

குருவி—சரி போய் வருகிறாயா.

---

## அம்பாளூர் தென்னிந்திய நலவுரிமைச் சங்க ஆரம்பவிழா.

1929ம் ஆண்டு ஜனவரிமீ 19ந் தேதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு அம்பாளூர் கிராமத்தில் ஸ்ரீமான் எம். என். மணிகோட்டீஸ்வரர் பி. ஏ. அவர்கள் தலைமையின்கீழ் தென்னிந்திய நலவுரிமைச்சங்க ஆரம்ப விழா நடைபெறும். சங்கத்தின் அவசியத்தைப்பற்றி ஸ்ரீமான் செங்கல்வராய பிள்ளை பி. ஏ. அவர்கள் பேசுவார்கள் என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

# திருவள்ளுவரின் பெண்ணுரிமை.

(சித்திரபுத்திரன் எழுதியது.)

தற்காலம் நமது தமிழ் நாட்டில் வழங்கப்பெறும் நீதி நூற்களிலெல்லாம் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது என்று சொல்லப்படும் குறள் என்னும் நீதி நூலே மிகவும் மேலானது என்றுசொல்லப்படுகிறதானாலும் அதையும் பார்ப்பனர்களோ சைவர்களோ வைணவர்களோ மற்றும் எந்த பிரிவினர்களோ அடியோடு காரியத்தில் ஒப்புக்கொள்ளுவதென்றால் முடியாத காரியமாகவேஇருக்கும்.

என்றாலும் திருவள்ளுவரைப்பற்றி ஏதாவது குற்றம் சொல்லிவிட்டால் பண்டிதர்களும் பெரும்பாலும் சைவர்களும் சண்டைக்கு மாத்திரம் வந்து விடுவார்கள். பார்ப்பனர்களென்றாலோ திருவள்ளுவரின் பெயரைச் சொன்னாலே சண்டைக்கு வந்து விடுவார்கள்.

இவ்வளவும் இருந்தாலும், திருவள்ளுவர் யார்? என்ன ஜாதி? என்ன மதம்? அவரது கொள்கை என்ன? என்பதில் இன்னமும் எல்லோருக்கும் சந்தேகமாகவே இருக்கிறது. சைவர்கள் திருவள்ளுவரை தம் சமயத் தலைவர் என்று பாத்தியம் கொண்டாடிக் கொள்ளுகின்றார்கள். வைணவர்களில் சிலர் அவரை வைணவர் என்று கொண்டாடுகிறார்கள். சமணர்கள் அவரை தம் சமயத்தவர் என்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பார்களில் ஒருசாராராகிய பறையர்கள்என்றுசொல்லப்படுபவர்கள் திருவள்ளுவரை தம் இனத்தவர் என்று சுதந்திரம் பாராட்டுகின்றார்கள். அவரைப்பற்றி கிடைத்திருக்கும் புராணமோ அல்லது அவரது சரித்திரக் கதையோ மிகவும் அசம்பாவிதமும் ஆபாசமானதுமாய்க் காணப்படுகின்றது. இவ்வளவு புறச்சான்றுகளையும் விட்டு விட்டு அகச்சான்று என்பதாகிய திருவள்ளுவர் குறளைப் பார்த்தாலோ, அதுவும்மயக்கத்திற்கிடமானதாக இருக்கின்றதே ஒழிய ஒரு தெளிவுக்கு ஆதாரமானதாய்க் காணப்படவில்லை. அவரது குறளில் இந்திரன், பிர்மா, விஷ்ணு முதலிய தெய்வங்களையும் மறுபிறப்பு, சுவர்க்கம், நரகம், மேல் லோகம், பிதுர், தேவர்கள் முதலிய ஆரியமத சம்பிரதாயங்களையும் மூட நம்பிக்கைகளையும் கொண்ட விஷயங்களையும் பரக்கக்காணலாம்.

எனவே இவற்றைக்கொண்டு திருவள்ளுவர் யாராயிருக்கலாம் என்று பார்ப்போமானால், அவர், தற்காலம் பார்ப்பனர்களைமாத்திரம் குற்றம் சொல்லிக்கொண்டு அவர்களால் கற்பிக்கப்பட்ட தெய்வங்கள் புராணங்கள் முதலாகியவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டு பார்ப்பனீயம் என்னும் பார்ப்பனக்கொள்கைகளை ஒரு சிறிதும் தளர்த்த மனமில்லாதவர்களாய் இருந்துகொண்டு தங்களை பெரிய சீர்திருத்தக்காரர்கள் என்றும் தாங்கள் பெரிய கல்வி கேள்வி ஆராய்ச்சி முதலியவைகளில் தேர்ச்சி பெற்ற வல்லவர்கள் என்றும் சொல்லிக்கொண்டு தங்களை வெளியில் சமரசசன்மார்க்கச் சமயத்தவர் என்றும் உள்ளுக்குள் சைவ சமயம்தான் தன்னுடைய மதம் என்றும் மற்றும் இதுபோல் உள் ஒன்றும் புறமொன்றும் செய்கை ஒன்றுமாய் இருந்து கொண்டு தங்களை ஒரு பெரிய சீர்திருத்தக்காரர்கள் என்றுசொல்லிக்கொள்ளும் இப்போதைய சீர்திருத்தக்காரரைப்போல்தான் காணப்படுகிறார்.

இவை எப்படி இருந்தாலும் திருவள்ளுவரின் பெண்ணுரிமைத் தன்மையைப்பற்றி கவனித்தால் பெண்களுக்கு அவர்கூறிய குறளிலுள்ள நீதிகள் ஒருபுறம் இருக்க, திருவள்ளுவன் மனைவியாகிய வாசுகியம்மையாரின் சரித்திரத்தைக்கேட்டோர் மனம் பதறாமலிருக்க முடியாது. அதாவது வாசுகி அம்மையாரை திருவள்ளுவர் தம்மனைவியாக ஏற்றுக்கொள்ளுமுன் ஆற்று மணலைக்கொடுத்து சாதம் சமைக்கச் சொன்னாராம். அதாவது வாசுகி கற்புள்ளவரா அல்லவா என்று பரீட்சிக்க, அவ்வம்மையார் அந்தப்படியே மணலை சாதமாகச் சமைத்துக்கொடுத்து திருவள்ளுவருக்குத் தமது கற்பைக் காட்டினாராம்.

அம்மையார் கிணற்றில் நீர் இறைக்கும்போது நாயனார் அம்மையாரைக்கூப்பிட, அம்மையார் கயிற்றை அப்படியே விட்டு விட்டு வந்தபோது கயிறு கிணற்றில் விழாமல் அப்படியே தொங்கிக்கொண்டிருந்ததாம்.

திருவள்ளுவர் ஒரு நாள் பகலில் நூல்நூற்கும்போது நூற்கதிர் கீழேவிழ, உடனே அம்மையாரைக் கூப்பிட்டு "விளக்கேற்றிக் கொண்டுவா, நூற்கதிரைத் தேடவேண்டும்" என்றுசொல்ல அம்மையார் "பகல்நேரத்தில் விளக்கு எதற்கு" என்று கேட்காமல்-கேட்டால் பதிவிரதா தன்மைக்கும் கற்புக்கும் பங்கம் வந்துவிடுமெனக்கருதி-உடனே விளக்குப்பற்றவைத்துக்கொண்டு வந்து கொடுத்தார்களாம்.

ஒரு நாள் நாயனார் பழைய சாதம் சாப்பிடும்போது 'சாதம் சுடுகின்றது' என்று சொன்னவுடன் அம்மையார் 'பழைய சாதம் சுடுமா' என்றுகூடக் கேட்காமல்-கேட்டால் பதிவிரதா தன்மை கெட்டுப்போகுமே என்று கருதி-உடனே விசிறி எடுத்துக்கொண்டு வந்து வீசி ஆற்றினாராம்.

திருவள்ளுவர் அம்மையாரை தினமும் ஒரு டம்ளரில் தண்ணீரும் ஒருஊசியும் தனியாககொண்டு வந்து வைத்து விட்டு சாதம் பரிமாறும்படி கட்டளையிட்டிருந்தாராம். அவ்வம்மையாரும் 'இதுஎதற்காக' என்றுகேட்காமல், கேட்டால் பதிவிரதா தன்மை கெட்டுப்போகுமே என்று கருதிக்கொண்டு தினமும் அந்தப்படியே செய்து வந்தாராம். ஆனால் அம்மையாரின் நிரியாண காலத்தில் அம்மையார் உயிர் போகாமல் வாதாடிக்கொண்டிருக்க, அது ஏன் என்று திருவள்ளுவர் அம்மையாரை கேட்கும்போது, அம்மையார் பயந்துகொண்டு "தினமும் பாத்திரத்தில் தண்ணீரும் ஊசியும் வைக்கச் சொன்னீர்களே, அது எதற்காக என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்கின்ற ஆசைமுடிவு பெறாமல் இருப்பதால் உயிர் போகாமல் வாதாடி மானாவஸ்தைப்படுகிறேன்" என்று சொன்னாராம். பிறகு திருவள்ளுவர் தயவுசெய்து பெரிய மனது வைத்து அதன் காரணத்தை, அதாவது சாப்பிடும்போது அன்னம் கீழே விழுந்தால் அந்த ஊசியில் குத்தி எடுத்து அந்த டம்ளர் தண்ணீரில் கழுவுவதற்கு என்று சொன்னாராம். அதன் பிறகுதான் அம்மையாரின் உயிர் நீங்கிற்றாம். இது திருவள்ளுவர் புராணத்தில் உள்ள அவரது மனைவியின் சரித்திரம். எனவே இது இடைச்செருகலாகவோ கற்பனைக்கதையாகவோ இல்லாமல் உண்மைக்கதையாயிருந்தால் திருவள்ளுவரின் பெண்ணுரிமைஎன்னஎன்பதையும் கற்பனையாக இருந்தால் கற்பனையல்லாத புராணம் எது? அதற்கு என்ன பரீட்சை? என்பதையும் அறிஞர்கள் வெளிப்படுத்துவார்களாக.


## ஒரு விதவைப்பெண் தேவை.

சைவ வெள்ளாள வாலிபர், பி. ஏ. படித்திருக்கிறார், வயது 23. கலியாணமாகாதவர். கொஞ்சம் பூஸ்திதியுண்டு. ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் உதவியாசிரியர். அவருக்கு, எந்த வகுப்பைச் சேர்ந்த பெண்ணாயிருந்தாலும் சரி, படித்த, அழகுள்ள ஓர் விதவைப் பெண் தேவை. கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

X, C/o பத்திராதிபர்,
"குடி அரசு" ஈரோடு.


## காலண்டர் வரவு.

கீழ்கண்ட நண்பர்கள் தம்தம் கம்பெனியின் 1929-ம் வருடத்திய காலண்டர்கள் அனுப்பியுள்ளார்கள். அன்புகூர்ந்தனுப்பிய டி காலண்டர்களை எமது மனமார்ந்த வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம்.

திருவாளர்கள்.

கே. ஏ. பெரியண்ண பிள்ளை,
புகையிலை வியாபாரம்,
திருச்சினாப்பள்ளி.

எம். சையத் அமீர் சாயபு,
பீடித் தொழிற்சாலை,
சேலம்.

எஸ். கே. ஐ. அப்துல்ரஹிமான் சாயபு,
காய்கறிப் பழவிதை வியாபாரம்,
சேலம்.

எம். சின்னசாமி நாயுடு,
கோல்டன் அச்சாபீஸ்,
பவானி.

இண்டோ ஜர்மேனியா கம்பெனி,
8-195 சைனா பஜார் ரோட்,
மதராஸ் E.

கார்ட்டன் அன் கோ.,
டைப்பு தொழிற்சாலை,
சூளை மதராஸ்.

ஷண்முகா பிரிண்டிங் ஹவுஸ்,
திருச்செங்கோடு.

இவைகளில் திருச்சி புகையிலை வியாபாரம் கே. ஏ. பெரியண்ண பிள்ளை அவர்களாலும், சேலம் பீடித் தொழிற்சாலை எம். சையத் அமீர் சாயபு அவர்களாலும் அனுப்பப்பட்டிருக்கிற காலண்டர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

# வேலூரில் பொதுக் கூட்டம்.

இம்மாதம் 5, 6, 7 தேதிகளில் வேலூரில் நடந்த வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாடுகளின் வைபவத்தை முன்னிட்டு வேலூர் கோட்டை மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டம்;—

5 தேதி மாலை 6 மணிக்கு வேலூர் கோட்டை மைதானத்தில் திரு தண்டபாணிபிள்ளை தலைமையில் ஒரு பிரமாண்டமான மகாநாடு கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஊரிலுள்ள வர்த்தகர்கள், மாணவர்கள், பிரபல மிராசுதார்கள் வாலிபர்கள், மற்றும் பொது ஜனங்கள் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் 3, 4 ஆயிரம் பேர் வந்து கூடியிருந்தனர்.

முதலில் திரு கண்ணப்பரவர்கள் கல்கத்தா காங்கிரசின் புரட்டைப்பற்றியும் திரு காந்தியின் குட்டிக்கரணங்களைப்பற்றியும் சைமன் கமிஷன் பகிஷ்காரப் பித்தலாட்டங்களைப்பற்றியும் விஸ்தாரமாக பேசிக்கொண்டு வரும்போது ஜனங்கள் செய்த ஆரவாரத்திற்கும் அடைந்த மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. திரு கண்ணப்பரின் சொற்பொழிவில், சென்னை சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் புரட்டுகளைப்பற்றி சொல்லி வருகையில், சென்னையில் உயர்ந்த உத்தியோகத்திலிருந்த ஒரு பார்ப்பனர் உத்தியோக முறையில் சைமன் கமிஷனை வரவேற்று மண்டி போட்டு சலாம் செய்து விட்டு, தன் மகனை விட்டு பகிஷ்காரப்புரட்டர்களோடு சேர்ந்து கூச்சல் போடும்படியும் சூழ்ச்சி செய்து விட்டு, போலீஸ்காரர்களையும் போலீஸ் அதிகாரிகளையும் காலிகளின் கொட்டத்தை அடக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும்படி செய்து விட்டதின் பயனாய் சென்னையில் பகிஷ்கார தினத்தன்று காலிகளுடையவும் பார்ப்பனக்கூலிகளினுடையவும் அட்டூழியம் ஏற்பட இடமுண்டாயிற்றென்றும், குறிப்பிட்ட பார்ப்பனர்களெல்லாம் அன்றையத்தினம் தங்களை ஒளித்துக்கொண்டு இருக்குமிடம் தெரியாமல் மறைந்து கொண்டார்களென்றும், இந்த விஷயம் பொது ஜனங்களுக்கு வெளியானதும் சென்னையில் எங்குபார்த்தாலும் '[illegible]' 'பார்ப்பானை உதை' என்கிற சப்தங்கள் தான் இரண்டு மூன்று நாள் தாண்டவமாடிற்றென்றும், இதன் பலனாய் சில பார்ப்பனர்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஊரைவிட்டே ஓட நேரிட்டதென்றும் இரண்டொரு ஆதிதிராவிட சகோதரர்கள் அநியாயமாய் உயிர் விடவும் சிலர் அடிபடவும் சில கடைகள் கொள்ளையடிக்கப்படவுமான காலித்தனங்கள் தான் நடந்ததேயொழிய பகிஷ்காரம் என்பது ஒரு சிறிதும் [illegible] பெறவில்லையென்றும், இனி இந்தக் காலித்தனத்துக்கும் கொள்ளைக்கும் யாரும் பயப்படப்போவதில்லையென்றும் சொல்லிக்கொண்டு வரும்போது கூட்டத்தின் பின்னால் மறைந்துகொண்டிருந்த ஒரு பார்ப்பனப் பத்திரிகையினுடையவும் ஒரு பார்ப்பனப் பிரசார கூலிப்பத்திரிகையினுடையவும் நிருபரான ஒருவர் "பார்ப்பனரல்லாத ஒருகூலியைபிடித்து 'காலித்தனமென்பதை வாபீஸ் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று சத்தம் போடு' என்று தூண்டிக்கொடுத்தது அந்த பார்ப்பனரல்லாத நபர் கூட்டத்தில் தலை காட்டாமல் மறைந்து கொண்டு 'நான் அந்த வார்த்தையை ஆட்சேபிக்கிறேன்' என்று சத்தம் போட்டார். உடனே கூட்டத்திலிருந்த வாலிபர்கள் அவனை 'தலை மறைவிலிருந்து பேசுகிற அயோக்கியன் யார்? ஆண்பிள்ளையாயிருந்தால் இங்கு வரட்டும்.' என்று சத்தம் போட்டார்கள். உடனே திரு நாயக்கர் அக்கிராசனர் உத்திரவு பெற்று கூட்டத்திலிருக்கிற பொது ஜனங்களை அமைதியாயிருக்கும்படி கட்டளையிட்டபோது சொன்னதாவது—

'சகோதரர்களே! எவனோ ஒரு வைத்தியக்காரன் எங்கோ இருந்து சத்தம் போட்டுவிட்டால் அதற்காக நீங்கள் இத்தனைபேரும் எழுந்து அவன் மீது பாய்வது கொஞ்சமும் சரியான காரியமல்ல. யார் எந்த கேள்வி கேட்டாலும், என்ன ஆட்சேபனை சொன்னாலும் அவற்றிற்கு பதில் சொல்லவும் ஆட்சேபனைகளை சமாளிக்கவும் எங்களுக்கு ஆற்றலிருக்கிறதென்று நீங்கள் கருதவேண்டுமேயொழிய எங்களுக்கு சிபார்சுக்காக இத்தனைபேரும் சத்தம் போடுவது எங்களை அவமானப்படுத்தியதாகும்' என்றும் 'அன்றியும் நமது எதிரிகளும் பார்ப்பனக்கூலிகளும் தங்கள் பத்திரிகையில் 'வேலூர்கூட்டத்தில் பெரிய கலவரம்' என்று பெரிய தலைப்புக்கொடுத்து அற்பத்தனமாகவும் இழிதனமாகவும் பத்திரிகையில் எழுதுவதற்கு இடங்கொடுத்ததாகும் என்றும் எந்தக்கேள்வி யார் கேட்டாலும் எனனவிதமான காலித்தனம் யார்செய்தாலும் நாங்களே பார்த்துக்கொள்ளுகிறோம். நீங்கள் அமைதியாயிருக்கவேண்டும்' என்றும் 'இல்லாவிட்டால் கூட்டத்தைக் கலைக்கும்படி அக்கிராசனரைக் கேட்டுக்கொள்வேன்' என்றும் அதட்டியிட்டு உட்கார்ந்தார். உடனே கூட்டம் நிஸ்சப்தமாய் விட்டது. அந்த சமயத்தில் மறுபடியும் முன் சொன்ன பத்ரிகா நிருபரின் தூண்டுதலால் ஒரு நபர் சந்திலிருந்து கொண்டு 'பத்திரிகைக்காரர்களை அயோக்கியர்கள் என்று சொன்னதை வாபீஸ் வாங்கிக்கொள்ளவேண்டு'மென்று சொன்னார். நாயக்கர் தன்னிடம் அந்த வழக்கமில்லை என்று சொல்லிவிட்டு, மேலால் திரு. கண்ணப்பரை பேசும்படி கேட்டுக்கொள்ள அவர் முன்பேசியதை ஒட்டிப்பேசிவிட்டு, சமூக சம்மந்தமாக பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களை நன்றாய் எடுத்துச் சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

பிறகு திரு. ஆரியா அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொள்ள, அவர்களும் எழுந்து ஆவேசத்துடன் பேசினார். இந்தச்சமயத்தில் கூட்டத்தில் இரு சிறு கற்கள் வந்து விழுந்தன. இதையாரும் லட்சியம் செய்யாமல் இருக்கவேண்டுமென்று திரு. நாயக்கர் கேட்டுக்கொள்ளவே அமைதி ஏற்பட்டது. பிறகு ஆரியா அவர்கள் பேச்சு முடிந்ததும் அக்கிராசனர் திரு. தண்டபாணி பிள்ளை "கேள்வி கேட்கிறவர்கள் கேட்கலாம்" என்று சொன்னதும், ஒருவர், தாம் இரண்டொரு கேள்விகள் கேட்பதாகச் சொன்னார்.

உடனே திரு- நாயக்கர் அவரை பக்கத்தில் வரும்படி சொல்லி அழைத்து வந்து பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு பொது ஜனங்களைப் பார்த்து "சகோதரர்களே! இவர் கேட்கப்போகும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுகிறேன். நீங்கள் யாரும் இவரைப் பரிகாசம் பண்ணவோ, கைதட்டவோ, சிரிக்கவோ கூடாது என்று கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன்" என்று சொல்லி விட்டு "என்ன கேள்வி" என்று கேட்டார்.

அக்கேள்வி கேட்க வந்தவர் சொன்ன பதிலாவது:—

"ஐயா. நான் உங்கள் 'குடி அரசை'ப் பார்த்த நாள் முதற்கொண்டு என் வீட்டுக்கு எந்தவிதமான சுபாசுப காரியத்திற்கும் பார்ப்பனர்களைக் கூப்பிடுவதில்லை. பார்ப்பனர்களுக்குப் பிச்சையும் கொடுப்பதில்லை. இப்படியிருக்க உங்கள் தலைவர் பனகாலரசர் இறந்து போன கருமாதிக்கு பார்ப்பனர்களை வைத்து நடத்தினார்களே, இது நியாயமா?" என்று கேட்டார்.

திரு. நாயக்கர், "அது நியாயமல்லவென்று நானும் கருதுகிறேன். ஆனால் அந்தக்காரியத்திற்கு பனகாலரசர் மீது பழிபோடுவதற்கு நியாயமில்லை. அவர் இறந்த பிறகு அவர் வீட்டிலுள்ள மூடப்பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை பெறாதவர்கள் செய்த காரியத்திற்கு யார் பொறுப்பாளியாய் இருக்க முடியும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். அம்மாதிரி மூடப்பழக்க வழக்கங்களால் கட்டுப்பட்டுக் கிடப்பவர்கள் விடுதலையடைய வேண்டுமென்றுதான் நாங்கள் இப்பொழுதும் பிரசாரம் செய்து வருகிறோம். அன்றியும். யார் தங்களை தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு மேலும் இம்மாதிரி நடந்து கொள்ளுகிறார்களோ அவர்களையெல்லாம் நாங்கள் தாராளமாய்க் கண்டித்துத்தான் வருகின்றோம். உதாரணமாக, திருவாளர்கள் பாத்ரோ, தணிகாசலம் செட்டியார் முதலியவர்களையும் கண்டித்துத்தான் வந்திருக்கிறோம்" என்று சொன்னார்.

கேள்வி கேட்டவர் "இது சரி, திரு. பத்மநாப முதலியார் தன் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு பார்ப்பனர்களைக் கொண்டு சடங்கு நடத்தலாமா" என்று கேட்டார்.

திரு நாயக்கர் "திரு பத்மநாப முதலியார் கூட்டத்தில் இருப்பதால் அவர் பதில் சொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஏனெனில் இக்கேள்விக்கு பதில் சொல்வதின் மூலம் திரு. முதலியார் அவர்களுக்கும் தனது குற்றம் தெரிய இடம் ஏற்படட்டும்" என்று சொல்லி திரு முதலியாரை பதில் சொல்லும்படி கேட்டுக்கொண்டார். திரு- பத்மநாப முதலியார் எழுந்து தனக்கு பார்ப்பானை வைத்து நடத்த இஷ்டமில்லை என்றும் தனது மனைவியாரும் மற்றும இரண்டொரு பெரியோரும் தன்னை நிர்ப்பந்தப்படுத்தினார்கள் என்றும் கண்களில் தண்ணீர் விட்டு அழுதார்கள் என்றும் ; அதைப்பார்த்துதான் மனைவி அவர்களிஷ்டப்படி விட நேர்ந்ததென்றும் தனக்கு பார்ப்பான் உயர்ந்தவன் என்பதி

(14-ம் பக்கம் பார்க்க)

## கடவுளைப்பற்றிக் கவலைப்படுவதேன்?

(சாமி சிதம்பரனார் எழுதுவது.)

இதுபோது நடைபெற்றுவரும், சுயமரியாதைக் கிளர்ச்சியைக் கண்டு சிலர் அஞ்சுகின்றனர். செய்வது இன்னதென்று தெரியாது திகைக்கின்றனர். இதனால் தாங்கள் இதுவரையிலும் பெற்றிருந்த பெருமைக்கு அழிவு வந்துவிட்டதேயெனக் கவல்கின்றனர். அப்பெருமையையும் அதனாற் கிடைத்த செல்வாக்கையும் வைத்துக்கொண்டு அடைந்து வந்த வருவாய்க்குக் குறைவு வந்துவிட்டதேயெனத் துன்புறுகின்றனர். இக்காரணத்தால் — தங்கள் தன்னலத்திற்கு இடையூறு வருகின்றதென்னுங் காரணத்தால் — நமது இயக்கத்தை வெறுக்கவும், தூற்றவும், எதிர்க்கவும் முன்வருகின்றனர். ஆனால் அவர்கள் சொல்லையும், எதிர்ப்பையும் பொருட்படுத்த இப்பொழுது உலகம் தயாராக இல்லையென்பதை இன்றறியாவிடினும், நாளைக்கு அறிந்துகொண்டு அடங்கிவிடுவார்களென்பது உறுதி. இக்கூட்டத்தாரைப்பற்றி நமக்கு ஒரு சிறிதும் கவலையென்பதில்லை.

ஆனால் நமது கொள்கையில் பற்றுடைய பல அறிஞர்கள் இரண்டொரு செய்திகளைப்பற்றிப் பேசுதற்கோ, நம்புதற்கோ அச்சம் இயற்கையாக வந்துதான் தீரும். பழக்கவாசனை கொடியதன்றோ? பெருங்காயமிருந்த பாண்டத்தின் நாற்றம் போகுமா? பன்னூறு ஆண்டுகளாக — ஏன் பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் கொண்டிருந்த பழக்கத்தை மாற்றுவதென்றால் அது எளிதான செயலாகுமா? நமது தாய் தந்தையர்களின் இரத்தம் நம்முடலிலிருக்கின்றதன்றோ? ஆகவே அவர்கள் கொள்கையும், அவர்கள் எண்ணமும், அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், நம்மிடமும் இல்லாமற் போகுமா? மின்னல் ஒளிபோல் சிற்சில சமயங்களில் நம்மனத்தில் உண்மை புலப்பட்டாலும் கொடிய பழக்கத்தினால் மறைபட்டுவிடுகின்றதன்றோ? அதுபோலவே தான் நமது அன்பர்களிற் பலர் நமது கொள்கைகள் பலவற்றையும் நம்புகின்றார்கள். நாம் கூறுகின்றபடி புராணங்கள் புரட்டென்பதை ஒப்புக்கொள்ளுகின்றார்கள். சாதிகளை தந்திரசாலிகள் தங்கள் தங்கள் தன்னலத்திற்காக ஏற்படுத்தி வைத்தார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். மதங்கள் புரட்டான செய்திகளைவெளியிட்டு மக்களையேமாற்றுகின்றன என்பதையும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். சடங்குகள் எல்லாம் பொருளற்றன, ஒரு சாரரின் வயிற்றுப் பிழைப்புக்கா ஏற்படுத்தப்பட்டன என்பதையும் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்.

ஆனால் "கடவுள்" என்ற பெயர் இதற்கிடையில் அவர்கள் மனத்தில் வந்து புகுந்து தொந்தரவு செய்கின்றது. இந்த எண்ணம் மனத்திற்குள் நுழைந்தவுடன் எப்படிப்பட்டவனையும் நடுநடுங்கச்செய்கின்றது. ஆனால் இளைஞர்களையும், அயல் நாட்டுச் சரித்திரங்களை யறிந்தவர்களையும், தற்காலத்தில் நம் நாடிருக்கும் துக்ககரமான நிலையை அறிந்தவர்களையும், பழைய நூல்களைப் படிக்காதவர்களையும், தன்னலத்தைக் கருதாதவர்களையும், தற்பெருமையை விரும்பாதவர்களையும், இக் "கடவுள்" என்ற மொழி ஒன்றுஞ் செய்வதில்லை. அவர்களை அசைக்கச் செய்வதற்கு அதற்கு ஆற்றலில்லை. ஆனால் மத சம்பந்தமான நூல்களைக் கற்றவர்களைத்தான் அது அஞ்சச்செய்கின்றது. அதனால் "எல்லாம் சரிதான், மற்றவற்றையெல்லாம் ஒப்புக்கொள்ளுகின்றோம், கடவுள் இல்லை என்ற கொள்கை உலகில் நிலவிவிட்டால் என்ன செய்கின்றது? கடவுள் இல்லை என்று சொன்னால் நாம் எப்படி நல்ல கதியடைகின்றது? நமது பாவத்தை எப்படி நீக்கிக்கொள்ளுகின்றது? கடவுள் இல்லை என்று கூறுவது நாஸ்திகம் அல்லவா?" என்ற கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து விடுகின்றார்கள்.

இவர்கள் கேட்கின்ற "கடவுள் உண்டா? இல்லையா?" என்ற கேள்விகளுக்கு நாம் ஒருநாளும் சமாதானம் கூறவேண்டிய அவசியமில்லை. ஆனால் நாம் கூறும் செய்திகளை மட்டிலும் கவனித்து உலகமக்கள் விடுதலைபெற வேண்டிய வழியில் ஒழுகுவார்களானால் கடவுளைப்பற்றிய கவலை ஒரு சிறிதும் வேண்டுவதில்லை. அவர் இருப்பினும் சரி இல்லாவிடினும் சரி. மனிதன் தன்னுடைய கடமையை—தனக்கு ஏற்பட்டிருக்கும் ஆற்றலை—அறிவை—பயன் படுத்த வேண்டும் என்பது தான் நமது நோக்கம். மனிதன் எச்செயலையும் செய்வதற்கு வல்லமையுடையவன். நாம் இதற்கு முன் கதைகளிலும் கேட்டிராத பெருஞ் செயல்களை இப்பொழுது கண்ணாற் காண்கின்றோம். தற்கால அறிவு நூற்புலவர்கள், ஆணைப் பெண்ணாக்குகின்றனர். பெண்ணை ஆணாக்குகின்றனர், கிழவரை வாலிபராக்குகின்றனர். ஆகாயத்திற் பறக்கின்றனர். மின்சாரத்தைக் கொண்டு எத்தனையோ அற்புதங்களைச் செய்கின்றனர். இறந்தவரையும் பிழைக்கவைக்க முயல்கின்றனர். இவையெல்லாம் மனிதன் தன்னறிவைக் கொண்டு செய்கின்றானா? இல்லையா?

எளிய குடியிற் பிறந்த ஏழை மனிதர்கள் தம்முயற்சியினாலும், அறிவினாலும், திறமையினாலும், உயர்ந்த பதவியை யடைவதைக் காண்கிறோம். உயர்ந்த குடியிற் பிறந்த பணக்காரன் தனது அறிவின்மையாலும், முயற்சியின்மையாலும், திறமையின்மையாலும், வறுமையுற்று உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி வருந்துவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இஃதிப்படியிருக்க "அவனன்றி ஓரணுவும் அசையாது" "எல்லாம் இறைவன் செயல்" என்றிருந்தால், நாம் உழவுத் தொழில் செய்யவேண்டியதில்லை. உத்தியோகம் பார்க்க வேண்டியதில்லை. ஆடைகட்ட வேண்டியதில்லை. அரசியல் நடத்தவேண்டுவதில்லை. குற்றஞ் செய்பவர்களைக் கண்டிக்க வேண்டுவதில்லை. தானே விளைந்து வீட்டுக்கு வரவேண்டும், தானே, சோறு, கறி, குழம்பாக ஆகியிருக்கவேண்டும். அவ்வுணவும் தானே நமது வயிற்றுக்குள் வந்து புகுந்து கொள்ளவேண்டும். உத்தியோக காரியங்களும் தானே நடைபெறவேண்டும் பருத்தியெல்லாம் புடவையாகவும் ஆடையாகவும் காய்த்து நமது இடுப்பில் வந்து ஏறிக் கொள்ள வேண்டும். அரசியல் என்பது வேண்டிய அவசியமேயில்லை. மக்கள்குற்றஞ் செய்யாமல் இருக்க வேண்டும். அல்லது குற்றம் செய்தவர்கள் தானே தண்டனையடைய வேண்டும். மேற்கண்ட செயல்களுக்கு எங்கே கடவுள் துணை செய்கின்றார்? அவற்றையெல்லாம் நாமே நடத்துகின்றோமன்றோ. ஜெர்மன் சண்டையில் உபயோகிக்கப்பட்ட விஷப்புகையை உலக முழுதும் பாவச்செய்தால் உலகத்தை அழித்துவிடலாமன்றோ? மீண்டும் சாணியிற் புழுக்களும், சாக்கடையில் ஈக்களும் கொசுக்களும் உண்டாவதுபோல உலகம் உண்டாகி விடுமன்றோ? நாம் கூறும் இச்செய்தியைக் குறும்புத்தனமானதென்று நினைக்காமல், நாஸ்திகவாதமென்று சொல்லாமல், சொந்த அறிவைக்கொண்டு ஆராய்ந்து பாருங்கள். மனிதனுடைய வல்லமை விளங்கும். நம் கண்ணுக்குத் தோன்றாத பொருளாக இருக்கின்றார் என்று கூறப்படும் "கடவுளின்" உதவி எதற்காக மனிதனுக்கு வேண்டும்? என்ற எண்ணம் உண்டாகாமற்போது.

"கடவுள் உண்டு" என்று உறுதியான நம்பிக்கை கொள்வதனால் வருந்தீங்குகளைச் சிறிது சிந்தித்துப்பாருங்கள்! அவரால் தான் எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன என்று எண்ணுவதனால் வரும் ஆபத்தை நினைத்துப்பாருங்கள்! ஆழ்ந்த தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்கள் கடவுளுக்கு உருவமில்லையென்று கூறுகின்றார்கள். குணமில்லை என்று சொல்லுகின்றார்கள். செய்கையில்லையென்று சொல்லுகின்றார்கள். ஆனால் அக்கடவுளால் என்ன காரியத்தைச் செய்ய முடியும் என்று கேட்டால் "அவர் நினைப்பு மாத்திரையால் எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன, எல்லாவுலகமும் உண்டாக்கப்படுகின்றன, எல்லா உலகமும் காப்பாற்றப்படுகின்றன, எல்லா உலகமும் அழிக்கப்படுகின்றன" என்று கூறுகின்றார்கள். கடவுள் தன் நினைப்பினாலேயே எல்லாம் நடத்துகின்றார் என்றால் அது ஒரு குணமல்லவா? குணம் ஒரு பொருளுக்குரியதன்றோ? ஆகவே கடவுள் உருவப்பொருளன்றோ? காணப்படும் பொருள்களெல்லாம் அழிந்து விடக்கூடியனவன்றோ? ஆகவே "உருவமற்றவர் குணமற்றவர் செயலற்றவர் என்ற மொழிகள் பொருளின்றிப் போகின்றதன்றோ"? என்று கேட்டால், உடனே, "நீ நாஸ்திகன், கடவுள் துரோகி, மதத்துரோகி, நரகத்திற்குப் போவாய், அற்பாயுளில் இறந்து போவாய்" என்ற "தூய்மை"யான வார்த்தைகளால் நமக்கு "வாழ்த்து"க்கூறி, கடவுள் உண்டென்று நிலைநாட்டி விட்டதாக மகிழ்ந்து கொள்ளுகின்றார்கள்.

இன்னும் இவர்கள் கடவுளால் தான் எல்லாம் நடைபெறுகின்றதென்ற "உயர்ந்த" கொள்கையினால், துன்பப்படுகின்ற உயிர்களிடத்தில் இரக்கம் உண்டாகின்றதில்லை. தாழ்த்தப்பட்ட குலத்தினர்கள் என்றபெய

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## செங்குந்தர் சமூக மகாநாடு

# பொருட்காட்சி திறப்பு.

### திரு. நாயக்கர் சொற்பொழிவு.

அன்புள்ள சகோதரர்களே! இன்று தென்னிந்திய செங்குந்தர் முதலாவது சமூக மகாநாட்டின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இப்பொருள்காட்சி சாலையைத் திறந்துவைக்கும் பெருமையை எனக்கு அளித்ததற்காக என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வெகுசொற்பகால முன்னறிவிப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பொருட்காட்சியானாலும் இதில் ஏராளமான சாமான்கள் காட்சிக்கு வந்து குவிந்திருப்பது போற்றத்தக்கதாகும்.

பொருள்காட்சிகள் என்பன மக்களின் முன்னேற்றத்திற்குரிய சாதனமாகும். வியாபாரம், கைத்தொழில் சிக்கனம் ஆகியவைகளின் முன்னேற்றம் பெரிதும்பொருள்காட்சியினாலேயே ஏற்படும். ஒவ்வொருநாட்டாருடையவும்கைத்தொழில், பொருள் வரவு, மனோபாவம், தொழில் திறம், செய்யும் மாதிரி ஆகியவைகள் தெரியவும் மற்றவர்கள் அதைப்பின்பற்றவும் இன்னும் இம்மாதிரி எத்தனையோ விஷயங்களுக்கு இப்பொருள்காட்சிகள் பயன்படுகின்றன.

எவ்வளவோ கைத்தொழில்களுக்கு நமது நாடு மிகப் பழமையானதும் பெயர் போனதுமாயிருந்தாலும் நாம் கைத்தொழில் முறையில் ஒரு சிறிதும் முற்போக்கடையவில்லை என்பதைத் தெரிவிப்பதற்காக நீங்கள் வருத்தப்படக்கூடாது. பொருள்காட்சி என்பது (இன்வென்ஷன்) கண்டுபிடித்தல், மேலும் மேலும் முற்போக்கடைதல் என்கின்ற தத்துவம் அடங்கியது.

ஆனால் நமது நாடு பழமையை கெட்டியாய் குரங்குப் பிடியாய் பிடித்துக்கொண்டிருப்பதின் உண்மைநிலையே போய்போனது என்று சொல்லவேண்டும். மேல்நாட்டார், அவர்கள் கண்டுபிடிக்கும் விஷயங்கள் எவ்வளவு மேலானதாயிருந்தாலும் மேலும் மேலும் அதிலிருந்து சீர்திருத்தம் கண்டுபிடிப்பதிலேயே கவலை கொள்ளுவார்களே ஒழிய ஓய்வெடுத்துக்கொள்ள சம்மதிக்கவே மாட்டார்கள். உதாரணமாக, ரயில்வண்டி, இரண்டு சக்கரவண்டி, மோட்டார்கார், ஆகாய விமானம் ஆகியவைகளசம்பந்தமானவைகள் ஒவ்வொருநாளும்புதுப்புது சீர்திருத்தங்களுடனே வெளிவந்துகொண்டிருக்கின்றதைப் பார்க்கின்றோம். காருக்குள்ளிலே குறைவு, செலவுசுருக்கம், காலம் சுருக்கம், சாமான்கள் கெட்டி, ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்கின்றார்கள். இதுபோலவேஒவ்வொரு துறையிலும் அற்புதங்களைக் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கின்றார்கள். இவற்றைத் தாராளமாய்த் தங்கள் நாடு முழுதும் பயனடையும்படி பரப்பிக் கொண்டே வருகின்றார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைக்காரரும் வியாபாரியும் ஆராய்ச்சிக்காகவும் புதியமுறைகள்கண்டுபிடிப்பதற்காகவும்தங்கள் வருப்படிகளிலும் சொத்துக்களிலும் தக்க பாகத்தைஒதுக்கிவைத்து வருகின்றார்கள். நமது நாட்டிலோ ஆராய்ச்சி எவையோ புதிய முறைகள் என்பதோ மக்களின் காதுகளுக்கு வெறுப்பாகவும் கண்களுக்கு கோரமாகவும் கருதப்படுகின்றது.

சாதாரணமாக நம் ஊர்களிலுள்ள ஒத்தைமாட்டு வண்டி, இரட்டைமாட்டு வண்டிகளை எடுத்துக் கொண்டால், எனக்குத் தெரிய 40, 50 வருஷ காலமாக இதேமாதிரியாகத்தான் இருக்கின்றது. வண்டிக்குள் உட்கார்ந்து ஒரு பத்து மைல் பிரயாணம் செய்துவிட்டால் இடுப்புஒடிந்துவிடும், முதுகு வளைந்துவிடும், உடல் வலி கிறக ஒருவாரமாகும். கெர்ப்பஸ்திரீயாயிருந்தால் வண்டியிலேயே பிரசவமாகிவிடும். இது 80 அல்லது 100, 200 வருஷம் என்றுகூடச் சொல்லலாம். இதுவரையில் ஒரு கடுகளவு கூட அவைகள் முன்னேற்றமடைந்திருப்பதாய் சொல்லமுடியாது. பணக்காரர்களாயிருந்தால் வெள்ளியில் நகத்தடி போட்டு தங்கத்தில் பூண்கட்டி இரண்டு வைரமோ கெம்போ புதைத்துவிட்டால் அதுவே விசேஷ வண்டியாக மதிக்கப்படுகின்றது. இம்மாதிரியே நூல் நூற்பதிலும்கூட சுமார் 100, 200 வருஷங்களுக்கு முன் செய்த ராட்டினம் எதோ அதுதான் இன்றும் பூஜிக்கப்படுகின்றது. 200 வருஷத்திற்கு முன் ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் எடை பஞ்சுநூற்று மூக்காலணா அல்லது ஒரு அணா கூலி பெற்றிருந்தால் இன்றைக்கும் 9 அல்லது 10 ரூபாய் எடை பஞ்சுதான் நூற்று 8 அல்லது 9 காசு கூலிதான் வாங்கவேண்டும். இந்த முறையைச்சற்றும் மாற்றுவதில் குரங்குப் பிடிவாதமாய்ப் பிடித்துக்கொண்டிருப்பதுதான் இப்போது நமது முன்னேற்ற வேலை, விடுதலை வேலை, ஏழைகளைக் காப்பாற்றும் வேலை என்று மதிக்கப்படுகின்றது.

இன்னும் நெசவுத் துறையிலும்இதுபோலவே நமது நாட்டில் பெரும்பாலும் 100 வருஷத்திற்கு முன் இருந்த முறைகளேதான் கையாளப்பட்டு வருகின்றன. பொதுவில் கொஞ்சமும் மாறுதல் இல்லை. தென்னிந்தியாவில் உள்ள செங்குந்த சமூகம் ஒரு மதிக்கத்தகுந்த ஜன சங்கியை உடையதாக இருந்தும் இவ்வளவு பேருக்கும் 100-க்கு 99 பேருக்குமேவாகநெசவுத்தொழிலாக இருந்தும் இதுவரையில் இச் சமூகம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கின்றது என்றுபார்த்தால், செங்குந்தர்கள் என்பவர்கள் யார், நமது ஜனத்தொகைஎன்ன, என்கின்ற விஷயம் தெரிந்துகொள்ளவே இந்த காலம் ஆச்சுது என்றுதான் சொல்லவேண்டி இருக்கின்றது. மேலும் ஏதாவது முற்போக்கடைந்து இருக்கின்றோமா என்று பார்த்தால், நாம் எப்படி வந்தோம்? நமது ஆதி பெருமை என்ன? என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் கவலை செலுத்தத் தக்க நிலைமையை அடைந்து கண்டுபிடித்து விட்டோம் என்கின்ற சந்தோஷந்தான். எனவே இதுவேதான் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினுடையவும் சமூக மகாநாட்டினுடையவும் கடமையாய் இருந்துவருகின்றது.

நான் இதுவரைசுமார் நூற்றுக்கணக்கான சமூகநாடுகள்பார்த்திருக்கின்றேன். அநேகமாய் ஒவ்வொன்றும் தங்கள் ஆதிப் பெருமையைப் பற்றிபேசுவதில் கவலை கொண்டிருக்கக் கண்டேனேயல்லாமல் இனிமேல் என்ன செய்வது என்பதை முக்கியமாய் கவனிப்பதைக் காணவில்லை. நாட்டின் முன்னேற்றமும் தங்கள் சமூக முன்னேற்றமும் தங்கள் நாடு ஆதியில் எப்படி இருந்தது என்று கண்டுபிடிப்பதிலும் தங்கள் சமூகம் ஆதியில் எப்படி இருந்தது என்று கண்டுபிடிப்பதிலும் ஒரு சிறிதும் அடங்கியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயம். இம்மாதிரி பொருள் காட்சிகளும் நூதன தொழில் முறைகளும், சமூக மக்கள் அனைவரும் குறைந்த கஷ்டத்தில் தாராளமாய் நல்ல ஜீவனத்திற்கு ஏற்ற மார்க்கம் ஏற்படுத்திக்கொள்ளுவதற்கும், மானத்துடன் அதாவது ஜீவனத்துக்காக உயிர் வாழுவதற்காக மானத்தையும் மனச் சாட்சியையும் பறிகொடுக்காமல் மனிதத் தன்மையோடு வாழும் நிலைமைஉண்டாக்கிக் கொள்வதற்கும் தற்காலம் நமது நாட்டின் முற்போக்குக்கும் வழி காட்டியாகும். ஆதலால் இந்த இரகசியத்தை உணர்ந்து இச் செங்குந்த சங்கத் தலைவர்கள் இம் மகாநாட்டுடன் ஒரு பொருள் காட்சி ஏற்பாடு செய்தது மிகவும் அறிவுடைமையும் பொருத்தமானதுமாகும்என்று சொல்லி நான் அவர்களைப்பாராட்டுவதுடன் இதைத் திறந்துவைக்கும் கௌரவத்தை எனக்குக் கொடுத்ததற்காக மறுபடியும் ஒருமுறை எனது நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

---

## சிலபெரியாரின்

# பொன்மொழிகள்.

மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு வித்தியாசம் இருக்கக்கூடாது. நானாவது அல்லது எனது பிரதிநிதியாவது வகுப்பினர்க்குள்ளும் அல்லது நிறத்தினர்க்குள்ளும் வித்தியாசம் காட்டமாட்டோம்.

விக்டோரியா மகாராணியார்

ஜாக்கிரதை! நீங்கள் உங்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று நினைத்துக்கொண்டேயிருந்தால், நீங்கள் முன்னேற்றம் அடைய முடியாது. கவர்ன்மெண்டும் சரி!, சட்டமும் சரி, மற்ற பிரஜைகளைப் போலவே உங்களுக்கும் சம உரிமையிருப்பதாகவே கருதுகின்றன.


சென்னை கவர்னர் துரை.

ஜாதிபேதமே இந்தியா சுதந்திரம் அடைவதற்குத் தடைசெய்கின்றது, சுயமரியாதையின் தொண்டே சுதந்திரத்திற்குமார்க்கம்.

டாக்டர் சுப்பராயன்

ஜாதி வருக்கும் வருணாச்சிரம தருமமே இந்தியாவின் அடிமைக்குப் பொறுப்பு. அது இன்னும் இருந்துகொண்டே வருமாயின் நமது முன்னேற்றம் பாதாளத்திற்குப் போய்விடும். அவ்விதம் ஏற்படாதபடி அதைத் தடுக்க இவ்வருணாச்சிரம தருமத்தை அடியோடு அறுத்துவிடவேண்டும்.

சர் K. V. ரெட்டி



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஹூ தை-மீ 8-உ.

## ஹிந்திப்புரட்டு.

சமீபத்தில் சென்னை மாகாணத்திற்கு சென்னைப்பார்ப்பனர்கள் வடநாட்டுத் தலைவர்கள் என்பவர்களை ஹிந்தி பிரசாரம் என்னும் பேரால் பார்ப்பனப்பிரசாரம் செய்ய அழைத்துவரப் போகின்றதாகத் தெரிய வருகின்றது. இந்த வழியில் பார்ப்பனப் பிரசாரம் செய்வதோடு மாத்திரமல்லாமல பார்ப்பனரல்லாத மூடர்களிடமிருந்து சுமார் ஒரு லக்ஷம் ரூபாயாவது கொள்ளை அடிக்கக் கருதியிருக்கின்றார்கள் என்பதாகத் தெரியவருகின்றது.

கதரின் பேரால் அடித்த கொள்ளையாகிய ஐந்து லக்ஷம் ரூபாய் இன்னும் ஜீரணம் ஆகாமல் அப்படியே கல்லுப்போல் பார்ப்பார்கள் வயிற்றில் கிடக்க, சென்ற வருட காங்கிரசின் பேரால் கொள்ளை அடித்த சுமார் 20, 30 ஆயிரம் ரூபாயும் அப்படியேகிடக்க இப்போது இன்னும் ஒருலக்ஷம் ரூபாய்க்கு திட்டப் போட்டு சில பார்ப்பனர் வெளிக்கிளம்பி யிருப்பது பார்ப்பனர்களின் சாமர்த்தியமா அல்லது பார்ப்பனரல்லாதார்களின் முட்டாள்தனமா என்பது நமக்கு பூரணமாய் விளங்கவில்லை யானாலும் ஒருவாறு இது பார்ப்பனரல்லாதார்களின் முட்டாள் தனமான இளிச்சவாய்த்தன்மை என்றே சொல்லவேண்டும். பார்ப்பனர்கள் வந்து எதற்காகப் பணம்வேண்டுமென்று கேட்டாலும் நம்மவர்கள் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்கள். வருணாசிரம மகாநாடு நடத்த பார்ப்பனர்களுக்கு பணம் கொடுக்கும் பார்ப்பனரல்லாதவர்கள் இந்திக்கு பணம் கொடுப்பது ஒரு அதிசயமல்ல.

எனவே, பணம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இந்தியினுடையவும் இந்தி பிரசாரத்தினுடையவும் புரட்டையாவது பொது ஜனங்கள் அறியட்டுமென்றே இதை எழுதுகின்றோம்.

முதலாவது இந்திபாஷை என்றால்என்ன? அதற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் என்ன சம்மந்தம்? அதை படிதததினால் தமிழ் நாட்டு மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன? என்பது போன்றவைகளை முதலில் கவனிப்போம். பிறகு இந்தி பாஷை என்பதை அகில இந்திய பாஷையாகக் கருதவேண்டும் என்பதுபற்றி பின்னால் யோசிப்போம்

இந்தி பாஷை படித்த தமிழ் மக்களுக்கு அதனால் ஏற்படும் பயன் என்ன? இதுவரை தமிழ்நாட்டில் காங்கிரஸ் பணத்திலிருந்தும் மற்றும் பொதுமக்களிடமிருந்தும் இந்திக்காக செலவு செய்யப்பட்ட பணத்தில் எவ்வளவு பார்ப்பனரல்லாதார்கள் படித்தார்கள்? அதை எதற்கு உபயோகப்படுத்துகின்றார்கள்? என்பவைகளும் கவனிக்கத்தக்கவையாகும். இந்தி பாஷை என்பது தமிழ் மக்களுக்கு விரோதமான ஆரியபாஷையாகும், அதிலுள்ள வாசகங்கள் முழுவதும் ஆரியப் புராணங்களும் மூடப்பழக்க வழக்கங்களும் கொண்டதும்பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏற்படுத்தப்பட்டதுமாகும். இந்த நாட்டில் இப்போது சமஸ்கிருதம் இருப்பதுபோலவும் அது உபயோகப்படுவதுபோலவும்இந்தியொரு சிறிதேவையில்லாததாகும். அப்படி இருந்தாலும் அது எதாவது வடநாட்டுக்குப்போய் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்காவது உதவுமா? என்று பார்ப்போமானால், அப்படியும் சொல்லுவதற்கில்லாமல், இதுவரை இந்தி படித்தவர்களில் 100க்கு 95 பேர் பார்ப்பனர்களே படித்து அந்த படிப்பைக் கொண்டு வடநாட்டுக்கு உத்தியோகத்திற்கோ பிச்சைக்கோ சென்று அதன்மூலம் பார்ப்பனரல்லாதார்களுக்கு துரோகம் செய்யவே உதவப்பட்டு வருகின்றது. அதற்காக சம்பாதித்த பணங்கள் முழுவதும பார்ப்பன ஆதிக்கத்திலேயே இருந்துவருகின்றது. ஒரு சமயம் பார்ப்பனரல்லாதார்களும் இந்தி படித்திருப்பதாக வைத்துக் கொண்டாலும் இந்த நாட்டில் அவர்களுக்கு அது என்னபயனைக் கொடுக்கக்கூடும். இதுவரை ஹிந்திபடித்த பார்ப்பனரல்லாதாரில் எவராவது அதனால் இன்ன பிரயோஜனம் அடைந்தார்கள் என்று எதாவது ஒரு சின்ன உதாரணமாவது காட்டமுடியுமா?

இந்தியாவுக்கு ஒரு பொதுப்பாஷை வேண்டுமானாலும் அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொதுப்பாஷை வேண்டுமானாலும் ஆங்கில பாஷையை தெரிந்து எடுத்து அதை எல்லா மக்களிடையிலும பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல் வேறு பாஷையைப்பற்றி யோசிப்பது முட்டாள்தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும். இங்கிலீஷ் உலகபாஷை, உலக வியாபாரப்பாஷை, இந்திய அரசாங்கபாஷை அது மாத்திரமல்லாமல், மூடப்பழக்க வழக்கமும் பார்ப்பனீயமும இல்லாமல் அவ்வளவும் அடிப்படையான கலைகளை வாசகமாக யபாஷையாகும். இவைகள்மாத்திரமல்லாமல் இந்தி உருது முதலிய பாஷைகளை தாய்ப்பாஷையாகக்கொண்ட துருக்கபாஷைகூட இங்கிலீஷ்பாஷைக்கும் இங்கிலீஷ் எழுத்துக்குமே மதிப்புகொடுத்து தனது தாய்ப்பாஷையைமாற்றிவிட்டது. அன்றியும் நமது இங்கிலீஷ் அரசாங்கம் உள்ளவரை—மேல்நாடுகளின் வியாபார சம்மந்தமோ கலைசம்மந்தமோ கல்விசம்மந்தமோ உள்ளவரை—இங்கிலீஷ் இல்லாமல் முடியவே முடியாது. இப்படிஎல்லாம் இருக்க, இவைசற்றும் கவனியாமல் இப்போது தமிழ்நாட்டில் இந்திபாஷை பரப்பவந்திருப்பதென்பது தற்காலம் தமிழ் நாட்டில் உள்ள உணர்ச்சியை ஒழிக்கச்செய்யும் சூழ்ச்சியேயாகும. ஆதலால் இதற்கு எந்த பார்ப்பனரல்லாதாராவது பணம்கொடுத்தால் அது பெரிய சமூகத்துரோகமேயாகும்.

---

## அருப்புக்கோட்டையில் திரு. சௌந்திரபாண்டிய நாடாருக்கு ஆடம்பரமான வரவேற்பு.

திருவாளர் உ. பு. அ. சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவரானதுபற்றி அவரை பாராட்ட அருப்புக்கோட்டை வாசிகளும் சுற்றுப் பக்கத்துகிராமவாசிகளும் ஜனவரி 15, 16ஆம் தேதிகளில் ஆடம்பரமான வரவேற்பு பாராட்டு விழா கொண்டாடினார்கள். திரு. நாடாரவர்களும், திரு. ஈ- வெ. ராமசாமி நாயக்கரவர்களும், திரு. ராஜன் அவர்களும் மற்றும் மதுரையிலிருந்தும் விருதுபட்டியிலிருந்தும் ஏராளமான பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

திரு நாடாரவர்களும், ராஜன் அவர்களும், நாயக்கரவர்களும் மதுரையிலிருந்து மோட்டு மார்க்கமாக சுமார் பகல் 2 மணிக்கு புறப்பட்டனர். வழிநெடுக வரவேற்பு பத்திரங்களும் சிற்றுண்டி முதலியவைகளும் அளிக்கப்பெற்றுக்கொண்டேவந்தனர். திரு. நாடார் வண்டியிலிருந்தபடியே வரவேற்புகளையும் பத்திரங்களையும் ஏற்று பதிலளித்துவிட்டு 4-30 மணி சுமாருக்கு அருப்புக்கோட்டை வந்தவுடன் அங்கிருந்து வாத்தியம் குடை கொடி முதலியவைகளுடன் அருப்பு கோட்டை திரு குருவய்ய நாயக்கர் அவர்கள் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஆங்கில முறையில் ஒரு பலமான டிபார்டி நடத்தப்பட்டது. சுமார் 200 பேர் வரையில் இச்சிற்றுண்டியில் கலந்து கொண்டார்கள், திரு குருவய்ய நாயக்கர் அவர்கள் அளித்த சிற்றுண்டிக்கு திரு. நாடாரும் திரு. நாயக்கரும் வந்தன மளித்தபின்னர் அங்கிருந்து இரட்டைக்குதிரை பூட்டிய ரதத்தில் திருவாளர்கள் நாடார், நாயக்கர், ராஜன் ஆகியவர்களும் மற்றும் ஜில்லாபோர்டு, இஞ்சினியர், அசிஸ்டெண்ட் இஞ்சினியர் ஆகியவர்களும் ஊர்வலமாக யூனியன் ஆபீசுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சுமார் 1½ மைலும் வீடுகள் தோறும் கடைகள்தோறும் வாழைக்கம்பங்களாலும் பந்தல்களாலும் தோரணங்களாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த தடைவிடுதவறாமல் மாலைகளும் பழமும

மரியாதையும் அளிக்கப்பெற்றுக்கொண்டே வந்தனர். ஊர்வலமாக யூனியன் ஆபீசுக்கு சென்றதும் அங்கு யூனியன் போர்டாரின் உபசாரப்பத்திரமும் மற்ற ஸ்தாபனங்களின் உபசாரப்பத்திரமும் ஆக சுமார் சுமார் 10 உபசாரப்பத்திரங்கள் திரு ராஜன் அவர்களுக்கும் திரு சௌந்தரபாண்டியருக்கும் வாசித்துக்கொடுக்கப்பட்டதுடன் அன்று இரவு சாலிய மகாஜனங்களால் ஒரு பலமான விருந்தும் நடத்திவைக்கப்பட்டது.

மறுநாள் காலையில் அருப்புக்கோட்டையிருந்து கல்லூருணி, முத்துராமலிங்கபுரம் முதலிய இடங்களின் பிரமுகர்களின் அழைப்புபடி சென்று ஆங்காங்கு பல வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்ட பிறகு பகல் 1-30 மணிக்கு அருப்புக்கோட்டைக்குவந்து சுயமரியாதைச்சங்கத்தலைவர் திரு சுப்பரமணிய முதலியாரவர்கள் வீட்டில் விருந்தளிக்கப்பட்டனர். பிறகு அங்கேயே பகல் மூன்றுமணிக்கு ஒரு பெரியபொதுக்கூட்டத்தில் மூன்று நான்கு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு நாடார் சமூக உறவின் முறையார் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒருபெரிய கொட்டகைக்கு பீட்டினில் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்கள். ஊர்வலத்தில் யானை குதிரைகளும் சுமார் 20 மோட்டார்கார்களும் 2, 3 பஸ்களும் தொடர, மாலை7-மணிக்குகொட்டகையை அடைந்தார்கள். ஊர்வலத்தில்சுமார் 7, 8 ஆயிரம் மக்கள் கலந்துகொண்ட காக்ஷியும் அவ்வூர் ஒற்றுமையும் பார்ப்பவர்கள் கண்ணுக்குவிளைவித்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. பந்தலுக்கு சென்றபோது பந்தலில் இடமில்லாமல் ஜனங்கள் நெருக்கமாகக் கூடி இருந்தனர். எனினும் பெண்களும் மற்றும் பிரமுகர்களும் உள்ளூர்ப் பொதுஜனங்களும் வந்து குவிந்திருந்தாலும் மிகவும் அமைதியாகவே இருந்தது.

அருப்புக்கோட்டை. பல வகுப்பார்களினுடையவும் சார்பாக திரு- நாயக்கர் அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று நாடார்சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு. சிதம்பர நாடார் அவர்கள் பிரேரபிக்க பத்திராதிபர் முத்துநாடார் அவர்கள் ஆமோதிக்க திரு. நாயககர் அக்கிராசனம்வகிக்க முதலில் பெண்மாணவிகள் திருநாடார்மீதுவாழ்த்துப்பாக்கள்பாடினர். வரிசைக்கிரமமாய்வரவேற்புபத்திரங்கள் வாசித்துகொடுக்கப்பட்டன. திருநாடார் இவ்வளவுக்கும் பதில் அளித்த பிறகு திரு நாயக்கரும் முடிவுரையாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்- திரு நாடார் பதில் அளிக்கும்போது "விருதுபட்டியில்திருநாயக்கர் நாடார்சமூகம்பிறத்தியாரால் தாழ்த்தப்பட்டது, என்று சொன்னதற்காக சிலர் வருத்தப்பட்டுகொண்டார்களாம் ஆனால் நான் அவர்சொன்னது சரிஎன்றே சொல்லுகின்றேன். வேண்டுமானால் எந்தநாடார் சகோதரராவது தான் பிறரால் தாழ்த்தப்பட்டிருக்கவில்லை என்று ருஜுப்பிக்கட்டும் என்று பந்தயங் கூறுகின்றேன்" என்று சொன்னார். திரு நாயக்கர் "அந்தவிஷயம் நின்று போனதினால் அதைப்பற்றி நீங்கள் பேசவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். ஆனால் திருநாடார்தனதுசமூகம் பிறரால் தாழ்த்தப்பட்டிருப்பதைதாம் கண்ணியமாய்ஒப்புக்கொள்ளுகிறதாகவும் அதைஒழிக்கவே தான் முயற்சிசெய்கின்றதாகவும் அதுவிஷயத்தில் திரு நாயக்கருக்கு சிஷ்யராயிருக்கின்றதாகவும் அதைப்பொதுஜனங்களுக்கு தெரிவிக்கவேண்டியது தனது கடமைஎன்றும் சொன்னார். பிறகு அருப்புக்கோட்டை நாடார்சமூக ஹைஸ்கூலில் ஆதிதிராவிட வகுப்புப்பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளமறுப்பதற்காக தான் ஒருநாடார் என்கின்ற முறையில் வெட்கப்படுவதாகவும் இதனால் நாடார் மக்களால் ஆதிதிராவிடர்கள் தாழ்த்தப்பட்டிருக்கிறார்களா இல்லையாவென்றும் இம்மாதிரி நாடார்கள் செய்வது தர்மமல்லவென்றும் ஆதிதிராவிடரானாலும் சரி, வேறுயாரானாலும் சரி, சமமாகக்கருதிபள்ளியில் சேர்த்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் அதற்காக நாடார் சமூகத்தையும் பள்ளிக்கூட நிர்வாகிகளையும் தாள்பணிந்து கெஞ்சுவதாகவும் நெஞ்சுருகப்பணிந்து பேசினார்.

மற்றும் தனது பதவியையும் சவுகரியங்களையும் சுயமரியாதைத்தொண்டிற்கேசெலவு செய்வதாக வாக்குறுதி கூறினார். பிறகு திரு நாயகர் எழுந்து முடிவுரையாக மூடப்பழக்க வழக்கங்களைப்பற்றி பேசிவிட்டு நாடார்கள் கோவிலில் பார்ப்பனர்களைவிட்டு பூஜை செய்விப்பதையும், நாடார் மகிமைப்பணத்தில் பதினாயிரக்கணக்கான ரூபாய்களை கோவிலுக்கு செலவுசெய்வதையும் நிறுத்தி அதை பெண்பள்ளிக்கூடத்திற்கு செலவுசெய்யும்படியும் வேண்டிக்கொண்டதுடன்விருதுபட்டியில் நாடார்களைப்பற்றி நாயக்கர் பேசியதாகச் சொன்ன விஷயங்களைப்பற்றி இங்கு பிரஸ்தாபிக்கவேண்டாம்என்று இருந்ததாகவும் திரு நாடார் பேசிவிட்டதால்தான் இரண்டொரு வார்த்தைமாத்திரம் சொல்லுவதாகவும் சொல்லி தான் நாடார் சமூகம் பிறரால் தாழ்த்தப்பட்டது என்று சொன்னது உண்மைதான் என்றும் ஆனால் அதைக்கேட்ட சில வாலிபர்கள் சகிக்கக்கூடாத உணர்ச்சிகொண்டதைப்பார்த்து தான் மிகவும் சந்தோஷப்பட்டதாகவும் ஏனெனில் அந்த வார்த்தைகூட பிறர் சொல்லக்கூடாது என்கின்ற அவ்வளவு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டது உண்மையான சுயமரியாதை உணர்ச்சிக்கு அறிகுறி என்றும் இவ்வுணர்ச்சிக்கு தானும் ஒரு பங்கெடுத்துக்கொண்டிருப்பதாகவும் இனியும் அதற்காகவே உழைப்பதாகவும் ஆனால் அதிகமான சுயமரியாதை உணர்ச்சியில் உள்ளதை மறைத்து விடக்கூடாதென்றும் ஏனெனில் எதைஎதை மறைக்கின்றோமோ அது மீதியாய் தவறி நின்றுவிடும் என்றும் ஆதலால் தாராளமாய் உள்ளதை ஒப்புக்கொண்டு அவைகளை ஒழிக்க தைரியமாய் உழைக்க வேண்டும் என்றும் பேசினார்.

பிறகு கூட்டம் 10மணிக்கு கலைந்து நாடார் மகாஜன ஹைஸ்கூலில் உள்ளூர் நாடார், சாலிய மகாஜனம், நாயுடு மகாஜனம், முதலியார்செட்டியார் மகாஜனம் ஆகிய சமூக பிரதிநிதிகளும சில ஆதிதிராவிடரும் மற்றும் மகமதிய கிறிஸ்தவ சகோதரர்களும் கொண்ட ஒரு பெரிய விருந்து நடந்தது.

இவ்வைபவங்களில் திரு மைனர் நாயுடு காரு அவர்களும் குருவப்ப நாயுடுகாருவும் யூனியன் போர்டு தலைவரும், சுப்பிரமணிய முதலியாரும் மற்றும் அவ்வூர் உத்தியோகஸ்தர்களும் பெரிதும்கலந்துகொண்டுபெரிய ஆடம்பரமாய் அவைகளை நடத்தினார்கள். பிறகு இரவு 11மணிக்கு அங்கிருந்து மதுரை ரோட்டு மார்க்கமாய் புறப்பட்டு மறுநாள் காலை 9 மணிக்கு அங்கிருந்து திரு நாடாரும் நாயக்கரும் தேவதானப்பட்டி சுயமரியாதை கல்யாணத்திற்கு சென்றுவிட்டார்கள். திரு கண்ணப்பரும் மற்றும் பலரும் வந்து சேர்ந்துகொண்டார்கள்.

## உபசாரப் பத்திரங்களின் விபரம்.

1. முத்துராமலிங்கபுரம செட்டி வாலிப சுயமரியாதை சங்கத்தின் சார்பாக திருவாளர்கள் தி. ரெங்கசாமி செட்டியார் மா. பி. திருவேங்கடரெட்டியார்.
2. அருப்புக்கோட்டை பிரிண்டிங் பிரஸ் புரொப்ரைட்டர் பி. குருசாமிக்குருக்கள்.
3. அருப்புக்கோட்டை யூனியன் போர்டார் சார்பாக யூனியன் பிரசிடெண்ட் பி. ரா. ம. ராமி செட்டியார்.
4. அருப்புக்கோட்டை அகம்படியர் சங்கத்தார்.
5. அருப்புக்கோட்டை ஸ்ரீ முத்துசாமி நாடார் ஞாபகச்சின்னவாசகசாலையின் சார்பாக திரு வ. கே. அண்ணாமலை நாடார்,
6. அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையார் சார்பாக திரு. அ. பெ. ரத்தினவேல் நாடார்.
7. அருப்புக்கோட்டை தேவாங்க குல முன்னேற்ற வாசகசாலையார்.
8. அருப்புக்கோட்டை சன்மார்க்க சங்கத்தார்.
9. கல்லூருணி வாலிப நாடார்சங்கத்தார்
10. பாலையம்பட்டி உறவின் முறை நாடார்கள் சார்பாக திருவாளர் அம்பலம் வ. வீரகுமாரு நாடார்.
11. அருப்புக்கோட்டை சுயமரியாதைச் சங்கத்தார்.
12. அருப்புக்கோட்டை உறவின் முறை நாடார்கள் சார்பாக திரு. ஆ. யி. அண்ணாமலை நாடார்.
13. கல்லூருணி உறவின் முறை ;நாடார்
14. அருப்புக்கோட்டை சாலியர்மகாஜன சங்கத்தார்.
15, அருப்புக்கோட்டை மோட்டார் அசோசியேஷன் சார்பாக திரு. எம். நடராஜ நாடார்.
16. ஹைஸ்கூல் மாணவர் சார்பாக திரு, வி. ரத்னசாமி நாடார். ஆகியவர்கள் திரு. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களுக்கு வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர்.

திருவாளர் பி. டி. ராஜன் பார். அட். லா. அவர்களுக்கும் ஏழெட்டு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன.

தொடரும். ஒரு நிருபர்.

## தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு. ஈரோடு.

நிகழும் ஜனவரி மாதம் 19, 20-ம் நாட்களில், ஈரோட்டில் "செங்குந்தர் நகர்" என்றமைக்கப்பட்ட பந்தலில், தென்னிந்திய செங்குந்தர் சமூக மகாநாடு, செங்குந்த வர்த்தகர் மகாநாடு, செங்குந்தர் வாலிபர் மகாநாடு, கண்காட்சி முதலியவைகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

மகாநாட்டுப் பந்தல் சுமார் 10000 சதுர அடி பரப்புள்ள இடத்தை கவர்ந்து கொண்டிருந்தது. தெருக்களின் ஒவ்வொரு சந்தியிலும் வளைவுகளும் தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டு ஊர் முழுதும் அலங்கரிக்கப்படிருந்தது. மகாநாட்டுத் தலைவர்களின் ஊர்வலம் பெரிய திருவிழாப்போலிருந்தது. சுருக்கமாகச் சொல்லுமிடத்து இவ்வளவு பெரிய தோரணையில் இதுவரை எந்தச் சமூக மகாநாடும்நடைபெறவில்லையென்றே சொல்லவேண்டும். இம்மகாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடைபெறச் செய்தது செங்குந்தப் பிரமுகர்களும் வரவேற்புக்கமிட்டியாரும், வாலண்டியர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியே யாகும்.

---

## திருச்சி மருத்துவ குல சங்கம். 2ம் ஆண்டுவிழா.

வாகநகர் மேட்டுத்தெரு க. பிச்சைமுத்து சித்தவைத்தியசாலையில் 5—1—29-லும் 11—1—29-லும் சிலோன் திரு வீ. கணபதி மருத்துவர் தலைமையிலும் திருவாளர் வக்கில் தி. பொ. வேதாசலம் பிள்ளை அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.

கல்வி, சமயம், அரசியல விஷயமாகவும் தற்காலம் நாம் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்தைப்பற்றியும் மிகுந்த ஊக்கத்துடன் சொற்பொழிவு நிகழ்த்தியபின், மாட்சிமைமிக்க நம் சக்ரவர்த்தியார் அசௌ்கர்யத்திற்காகவும், பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர் பனகால் ராஜா காலஞ்சென்றதைக்குறித்தும் வருந்துவதாக தீர்மானம் நிறைவேறின.

க. பிச்சைமுத்து.

---

## "ஸ்ரீ அத்வைதானந்த வாசகசாலை" கொழும்பு.

இம்மாதம் 13-ம் தேதி ஞாயற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு வாசகசாலையின் இரண்டாவது வருட முதலாவது வாரந்தப் பொதுக்கூட்டம் சமாஜக்கட்டடத்தில் வாசகசாலையின் அக்கிராசனர் திரு. சி. சு. [illegible] அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதன் பின் திரு க. சுந்தரராஜ் அவர்கள் ஆதித்திராவிடர்கள் முன்னேற்றத்திற்கு முக்கியமானவர்களில் ஒருவரும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவரும், சிறந்த சுயமரியாதைக் காருமாகிய [illegible] திரு பனகால் அரசர் பரணத்தை [illegible] வருந்துவதாக ஓர் தீர்மானம் [illegible] நிற்க தீர்மானம் [illegible].

இறுதியில் அக்கிராசனர் முடிவுரையாக [illegible] செய்ய வேண்டிய வேலையைப்பற்றிப் பேச கூட்டம் இனிது கலைந்தது.

காரியதரிசி.

---

# தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு.

### தியாகராய நகரில் நடைபெறும்.

பிப்ரவரி மாதம் 17, 18ஆம் தேதிகளில், செங்கல்பட்டில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தியாகராயர் நகரில், பனகால் அரசர் மண்டபத்தில் நடைபெறும்.

## சைமன் கமீஷனை மகாநாட்டுக்கு அழைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

திருவாளர்கள்:—

P. T. ராஜன் கொடியேற்று விழா ஆற்றுவார்
M. K. ரெட்டியார், வரவேற்பு கமிட்டி அக்கிராசனம் வகிப்பார்
Dr சுப்பராயன் மகாநாட்டைத் திறந்துவைப்பார்.
W. P A சௌந்திரபாண்டிய நாடார் மகாநாட்டின் தலைவர்.
M. கிருஷ்ணன் நாயர் திரு. பனகாலரசரின் படத்தை திறந்துவைப்பார்.
சுரேந்திரநாத் ஆரியா தொண்டர் படைத்தலைவராக இருப்பர்.
J. S. கண்ணப்பர் விளம்பர அதிகாரி.
K V. மேனன் விஷயாலோசனைக் கமிட்டி அதிகாரி
சி. ஜெயராமநாயுடு சங்கீத மகாநாட்டுத்தலைவர்.
Dr. துரைசாமி நாயுடு சங்கீத மகாநாட்டு காரியதரிசி.
M. வேதாசலமுதலியார், முனிசிபல் சேர்மென், செங்கல்பட்டு, பொதுகாரியதரிசி

மற்றும் பல மகாநாடுகளும் பல வைபவங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மகாநாட்டுத்தலைவரை ஆனைகள்கட்டிய ரதத்தில் வைத்து ஊர்வலம் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றது. மகாநாட்டுக்கு ஸ்பெஷல்டிரெயின்கள்விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன, சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு 36மைல் அலங்காரம் செய்யப்பட்டு வரவேற்புகளுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டு வருகின்றது. மகாநாடு நடத்தப்படும் தியாகராயர்நகரில் ஸ்பெஷலாக ரயில்வேஸ்டேஷன், தபாலாபீஸ், தந்திஆபீஸ், பாங்கி, ரீடிங்ரூம், எச்சாபீஸ், ஆஸ்பத்திரி, ஆபத்சகாய நிலையம், சுகாதாரக்காட்சிசாலை, சினிமாபடக்காட்சி, சுயமரியாதை நாடகம் முதலியவைகளும், இந்திய சிற்றுண்டிச்சாலை, ஐரோப்பிய சிற்றுண்டிச்சாலை, ஒலிபெருக்குங்கருவி, (Loud Speaker) தீபாலங்காரக்காட்சி முதலியவைகள் எல்லாம் வைக்கஏற்பாடுகள செய்யபட்டிருக்கின்றன. 10000க்கணக்கான பிரதிநிதிகள் கொள்ளத்தக்க பிரமாண்டமான அளவில் பனகாலரசர் மண்டபம்ஜோடிக்கப்பட்டிருக்கிறது. மதுரையிலிருந்து பிரசிடெண்ட் ஸ்பெஷல் டிரெயின் புறப்படும். இக்காட்சிகளெல்லாம் கண்படைத்தார் பார்த்துத்தீரவேண்டியவை. இப்பொழுதே ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் பதிவுசெய்து கொண்டார்கள். இடம் கிடைக்காது ஏமாந்துபோகாமல் உடனே டெலிகேட் டிக்கட்டுகளும் வரவேற்புக்கமிட்டி டிக்கட்டுகளும் வாங்கிக்கொள்ளுங்கள்.

மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளுக்கு தங்குவதற்கும், சாப்பாட்டுக்கும், ஸ்நானபானாதிகளுக்கும் எண்ணிறந்த பங்களாக்களும் தண்ணீர் வெந்நீர்க்குழாய்களும், தயார் செய்யப்பட்டிருக்கின்றன. மகாநாடு கூடும் இடமும் காலமும் மிகரம்மியமான காட்சியும் சுகாதாரத்துக்கேற்ற சீதோஷ்ணமும் கொண்டவை.

---

## பூவாளூரில் சிற்றுண்டிச்சாலை திறப்பு விழா.

வருகிற பிப்ரவரி மாத இறுதியில் டிை திறப்பு விழா நடைபெறும். வைக்கம் வீரரும் 'குடி அரசு' 'ரிவோல்ட்' ஆசிரியருமா சுயமரியாதை இயக்கத் தலைவருமாகிய உயர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் சிற்றுண்டிச் சாலையைத்திறந்து வைப்பார். 'திராவிடன்' ஆசிரியர் திரு. கண்ணப்பர் 'ரிவோல்ட்' ஆசிரியர் எஸ். இராமனுதன் ஆகியவர்களும் வருவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

குறிப்பு:—இச்சிற்றுண்டி சாலை பங்கு ஒன்றுக்கு ஐந்து ரூபாய் விதம் சேர்த்து நடத்தப்பெறுவது.

பூவாளூர் 19-1-29

அ. பொன்னம்பலனர்.
பொறுப்பாளர்.

8 ம் பக்கத் தொடர்ச்சி,

ருடன் சில மக்கள், தெருவில் நடப்பதற்கு உரிமையற்றவர்களாக இருக்கின்றார்கள். அல்லும் பகலும் இரத்த வேர்வையுண்டாகு மாறு உழைத்தும், வயிற்றுக்கு உணவுகிடைக்காதவர்களாக இருக்கின்றார்கள். மனிதன் அடைய வேண்டிய இன்பத்தில், அனுபவிக்க வேண்டிய மகிழ்ச்சியில் ஒரு சிறிதும் பெற முடியாதவர்களாயிருக்கின்றார்களே! இதைப்பார்க்கும் போது மனித சமூகத்திற்கே அவமானமல்லவா? இவர்களுடைய இடையூற்றை நீக்குவதற்கு நம்மால் ஆகாதாவென்றால் அங்கேயும், பாழுங் "கடவுள்" வந்து நிற்கின்றார். அவர்களை அப்படியே கடவுள் படைத்தாராம். "பூர்வ வினை"யின் பயனால் அப்படிப் பிறந்துவிட்டார்களாம். என்னே இவர்தம் அறிவின் பெருமை! இது தான் கடவுள் தொண்டர்கள் கூறும் வாதம். அவர்கள் கூறிவிட்டாலும், "கடவுளால் தான் எல்லாம் நடைபெறுகின்றது" என்று நம்பும் போது யாரும் இந்த முடிவுக்குத்தான் வரவேண்டும். நோயுற்றவர்களுக்கு மருந்து கொடுக்க வேண்டியதில்லை. அதுவும் "கடவுள்" செயலால் வந்தது தானே. "பூர்வகர்மத்தால்" உண்டானது தானே! என்று சொல்லக்கூடிய நிலைக்குத் தான் வரவேண்டும். "பஞ்சாங்கஞ் சொல்லி மற்றவர்களிடம் கௌரவப் பிச்சை வாங்குகின்றவர்களையும் கடவுள் அப்படியேதான் படைத்தார். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்த 'மிலேச்சர்' என்று பார்ப்பனர்களால் சொல்லப்படுகின்ற வெள்ளைக்காரர்களையும் கடவுள் தான் நமது நாட்டுக்கு அனுப்பினர். ஏன் நாம் 'குடி அரசு' கேட்க வேண்டும்!" என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும்.

எல்லாம் கடவுளால் தான் நடைபெற வேண்டும் என்று சொன்னால் "மனிதர்கள் அப்படியப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும். ஆணும் பெண்ணும் கூடச் சேரக்கூடாது. பெண்மக்களும் துன்பப்பட்டுப் பத்து மாதஞ் சுமந்து பிள்ளைப் பெற வேண்டியதில்லை, மக்களை அப்படியப்படியே உண்டாக்கி விட வேண்டும்" என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். தத்துவ ஆராய்ச்சிக்காரர்களின் 'கடவுள்' நம்பிக்கை நாம் மேலே கூறிய முடிவுக்கு வந்தால் தான் சரி, இல்லா விட்டால் எப்படிச் சொல்ல முடியும்?

இனி எல்லாவற்றையும் விடப் பெரிய சமாதானமாக 'நாம் செய்யும் தீய செயல்களையெல்லாம் மன்னிப்பதற்குக் கடவுள் வேண்டு'மென 'ஆஸ்திகர்' என்று சொல்லிக் கொண்டிருப்போர் கூறுகின்றனர். இதனால் தான் மனிதன் தீய காரியங்களைச் செய்வதற்கு முன் வருகின்றான் எந்தத் தீய காரியத்திற்கும் மன்னிப்பில்லை. எவன் ஒருவன் பிறரை ஏமாற்றுகின்றானோ, எவன் ஒருவன் பிறர் குடியைக் கெடுக்கின்றானோ, எவன் ஒருவன் மனிதனைத் துன்புறுத்துகின்றானோ அவன் தண்டிக்கப்படுவான் என்ற சட்டத்தை ஏற்படுத்தி அதைக்கையாண்டிருப்போமாயின் உலகத்தில் தீய செயலே நடைபெற்றிருக்க மாட்டாது. அவர்களனைவரும் நரகத்தில் தான். கிடந்துதுன்புற வேண்டும் என்று கடவுளைப்பற்றிக் கூறும் நூல்களிலேயே எழுதப்பட்டிருந்தாலும் குற்றமில்லை. இவ்வாறு எழுதிவைத்து விட்டாலோ, மதாச்சாரியார்களுக்கும், புரோகிதர்களுக்கும் வேலையில்லாமற் போய்விடுகின்றது. ஏனெனில் பிறர்செய்த பாவங்களைக் கடவுளிடம் முறையிட்டு மன்னிக்கச்செய்வதன் மூலமாகத்தான் மதாச்சாரியார்கள் பெருமைபெற்று வாழ்ந்து வருகின்றனர். பாவம் தீருவதற்குச் செய்கின்ற சடங்குகளின் மூலந்தான் புரோகிதர்களும் "கௌரவமாக"ப்பிழைத்து வந்தனர். ஆகையால் அவ்வாறு எழுதிவைக்க அப்"பெரியார்கள்" ஒருநாளும் முன்வந்திருக்கமாட்டார்கள். அன்றி, குழந்தைகள் செய்தகுற்றத்தைத் தந்தையர்கள் மன்னிப்பதுபோல "எல்லாம் வல்ல இறைவன்"—"பெருங்கருணை ஆறாகிய இறைவன்"—"கிருபைக்கடலாகிய இறைவன்"? மக்கள் செய்யும் குற்றத்தையும் மன்னித்து விடுகின்றான் எனச் சமாதானங்கூறினர், இதுவும் புத்திசாலித்தனமான சமாதானந்தான். ஆனால் ஒரு சில மனிதர்கள் நாம் கடவுளிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் செய்கின்ற கெட்ட செயல்களால் எத்தனைகோடிமக்கள் துன்பமடையவும், கடவுள் விட்டுக் கொண்டிருப்பாரா?

ஆகவே கடவுளுடைய கவலை யாருக்குவேண்டும்மெனில் குற்றம் செய்கிறவர்களுக்குத் தானே வேண்டும்? பொய்பேசுகிறவர்களுக்கும், நூற்றுக்கு ஐந்தாறு வட்டிவாங்கிஏழைக்குடியைக் கெடுக்கின்றவர்களுக்கும், பொதுஜனங்களின் பணங்களைப் பலவழிகளால் கொள்ளையடிக்கின்றவர்களுக்கும், வழிப்பறி செய்கின்றவர்களுக்கும், தகப்பனை வெட்டுகின்றவர்களுக்கும், தாயைப்புணர்கின்றவர்களுக்கும், சூதாடுகின்றவர்களுக்கும் துணை செய்வதற்குத்தானே கடவுள் வேண்டும். கடவுள்மீது வைத்திருக்கும் நம்பிக்கையினால் அவர் நாம் செய்கின்ற பாவங்களை மன்னித்துவிடுகின்றார் என்ற முட்டாள்தனமான எண்ணத்தினால் எவ்வளவு அக்கிரமங்களைச் செய்கின்றார்கள்! மனிதன் எந்தக்கெட்ட செயல்களையும் துணிந்து செய்வதற்குக் கடவுள் நம்பிக்கையன்றோ காரணம்.

அன்றியும் "கடவுள்" என்றவார்த்தையின் உண்மைப்பொருளை உணர்ந்தவர் எவரேனும் கடவுள் உண்டா? இல்லையா? என்றசண்டையில் இறங்குவார்களா? ஒருநாளும் இறங்கமாட்டார்களென்பது உறுதி. "கடவுள்" என்ற அம்மொழியின் பொருள் 'கடந்து நிற்பது' என்பதுதான். பண்டைக்காலத்தில்-அதாவது இப்பொழுதுள்ள, மதங்களும் அவற்றிற்குரிய வேதங்களும், புராணங்களும் இல்லாத காலத்திலிருந்த அறிஞர்களாற் கண்டுபிடிக்கப்பட்ட இம்மொழியை நன்றாய் உற்றுணருங்கள். எல்லாவற்றையுங்கடந்ததென்றால், அதை உள்ளபொருளென்று எங்ஙனங் கூற முடியும்? கடந்துநிற்கின்ற—கண்டுபிடிக்க முடியாத-பொருளைப்பற்றி நாமேன் கவலைப் படவேண்டும். கண்டுபிடிக்கமுடியாதபொருளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று துன்பப்படுவதைவிட அந்தச்சனியனை மறந்துவிடுவதால் என்னகுற்றம் வந்துவிடப்போகின்றது? இல்லையென்று சொல்வதால்தான் என்ன? இருந்தால் நம் எதிரில்வந்து "ஏன்என்னை இல்லையென்று கூறினை" என்று கேட்கட்டுமே. அல்லது உலகத்தில் உள்ள மற்றவர்களிடந்தான் வந்து "அயோக்கியர்கள்தான் என்னை இல்லையென்று சொல்லுகிறார்கள், நீங்கள் அதை நம்பாதீர்கள், நான் இருக்கின்றேன்" என்று கூறட்டுமே. இவை ஒன்றும் நடவாமையால் நாம் அதைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும், ஒருவர்க்கொருவர் சண்டையிடவேண்டும்.

ஆகவே நாம் உலகத்தில் இன்பத்துடன் வாழவேண்டுமாயின்-ஒருவர்க்கொருவர் உதவியுடையவர்களாக வாழவேண்டுமாயின்—எல்லோரும் சகோதரர்களாக விருக்கவேண்டுமாயின்—நமது பகுத்தறிவை உபயோகிக்க வேண்டும். யோக்கியம்பொருப்புடன் நடந்துகொள்ள வேண்டும். இப்பொழுது கடவுளை நம்பிக்கொண்டு எவ்வளவு அயோக்கியத்தனஞ் செய்தாலும் அவர்களை உயர்ந்தவர்களாகவே கருதும் மதம் ஒழியவேண்டும். ஜனசமூகத்தின் நன்மையைக் கருதி யுழைக்கின்றவர்யாரோ அவர்களே உயர்ந்தவர்கள். வேலை செய்யாமல்-உலகத்திற்கு ஒருசிறிதும் நன்மைசெய்யாமல்-துன்புறும் உயிர்களின் துன்பத்தைப் போக்குதற்கு ஒரு சிறிதும் வழிதேடாமல் இருக்கின்றவர்கள் யாரோ அவர்களையே இழிந்தவர்களாகக்கருதவேண்டும். நாம் இன்னும் கடவுளைப்பற்றிச் சண்டையிட்டுக்கொண்டிருப்போமானால் ஒரு நாளும்விடுதலை பெறப்போவதில்லை.

அன்றியும் "கடவுள் தான் எல்லாவற்றையும் நடத்துகின்றவர்" என்றகொள்கை வேரூன்றியிருந்தகாலங்களில் அறிவைக்கடவுள் என்று சொல்லுபவர்களும், ஊக்கத்தைக் கடவுள் என்று உரைத்தவர்களும், அன்பைக்கடவுள் என்று உரைத்தவர்களும், உலக மக்களுக்குதொண்டுசெய்வதேகடவுளுக்குத் தொண்டுசெய்வதாகும் என்று கூறியவர்களும் இருந்திருக்கின்றார்கள்.

ஆனால், அவர்களும் தாங்கள் கூறியதன்படி நடக்கமுடியாதவர்களாக அக்காலத்துக் குருட்டு வைதீகர்களுக்குப்பயந்து மூடத்தனமான செயல்களையும், பொருளற்ற வழக்கங்களையும் கைப்பற்றியிருந்தார்களென்று அறிகின்றோம். ஆனால் அம்மாதிரியாக நடந்தால்தான் அவர்கள் அக்காலத்திற் பெருமை பெற்றிருக்க முடியும் என்றுநாம் நினைக்க வேண்டியிருக்கின்றது. நாம் அவர்கள் செய்கையைப் பின்பற்றவேண்டாம். அவர்கள் கூறியதில் பகுத்தறிவுக்குப் பொருத்தமுள்ளவற்றை மட்டிலும் நம்புவோம், பின்பற்றுவோம்.

நமது நாட்டுப்புராணங்களில் உள்ள கதைகளெல்லாம் மனிதன் குற்றஞ்செய்தால் அதைக்கடவுளைப்பணிந்து நீக்கிக்கொள்ளலாம். என்பதற்கு ஆதாரமாகக்காணப்படுகின்றனவேயன்றி அவைகளில் வேறுஎன்ன இருக்கின்றது?

ஆகையால் இனிநாம் பண்டைக்காலத்திற் கடவுளாற் கூறப்பட்டனவென்று சொல்லப்படுகின்ற வேதக்குப்பை ஆகமக்குப்பை, புராணக்குப்பை, ஸ்மிருதிக்குப்பை, மநுநூற் குப்பை, புராணகதைகளை உட்கொண்டுவிள

7-ம் பக்கத் தொடர்ச்சி.

லவது பார்ப்பானைக்கொண்டு சடங்கு செய்யவேண்டும் என்பதிலாவது நம்பிக்கை இல்லையென்றும் சொன்னார்.

உடனே திரு நாயக்கர் திரு முதலியார் அவர்களைப்பார்த்து "நீங்கள் இந்தக்கூட்டத்தில் ஆஜரில்லாத சகோதரிகள்மீது குற்றம் சுமத்துவது தர்மமல்ல" வென்று சிரித்துக்கொண்டே சொன்னார். திரு முதலியார் அப்படியானால் தாங்கள் எங்களுக்குமாத்திரம் உபதேசம் செய்வதில் பலனில்லை, ஸ்திரீகளுக்கும் இந்த விஷயத்தை எடுத்துச்சொல்லி அவர்களையும் திருத்தவேண்டுமென்று சொன்னார். திரு நாயக்கர் அப்படியே ஆகட்டும், அவர்களுக்காகவே நானே ஒரு மீட்டிங்கு ஏற்பாடு செய்யுங்களென்று சொன்னார். அந்தப்படியே செய்வதாக பலர் வாக்களித்தார்கள். நிற்க கேள்வி கேட்டவர் "திரு நாயக்கர் சீதையை தட்டுவாணி என்று சொல்லலாமா? தசரதனையும் ராமனையும் கேட்டவர்கள் என்று சொல்லலாமா?" என்று கேட்டார்.

திரு நாயக்கர், தான் சீதையை தட்டுவாணி என்று சொல்லவில்லை என்றும் ஆனால் சீதை "பதிவிரதை" அல்லவென்று தான் சொல்லியிருப்பதாக தனக்கு ஞாபகமிருப்பதாகவும், அதுவும் அந்தப் புராணக்காரர்களும் தர்ம சாஸ்திரத்தில் பதிவிரதைக்கு என்னென்ன நிபந்தனைகள் விதித்திருக்கின்றார்களோ அந்த நிபந்தனைப்படிக்கு சீதையை பதிவிரதைகளில் ஒன்றாக சேர்க்கமுடியவில்லை என்று 'குடி அரசில்' எழுதியிருந்தது உண்மையென்றும், அதற்கு உதாரணம், சீதை தன் புருஷனாகிய ராமனைப் பார்த்து "என்னை நீ கண்டவர்களுக்குக்கூட்டிக்கொடுக்க பார்க்கிறாயா' என்றும், 'உனக்கு பெண்டாட்டியை வைத்து வாழ ஆண்மையில்லையா'என்றும் கனது கொழுந்தனான லட்சுமணனை எதிர்த்துப்பேசி 'என் புருஷனை சாகவிட்டுவிட்டு என்னை நீ பெண்டாளலாமென்று நினைக்கிறாயா' என்றும்கேட்டதினாலும் காட்டில் கொண்டுபோய் விட்டகாலத்தில் தன்னைப்பற்றி தன் புருஷன் சந்தேகப்படக்கூடாது என்று கேட்டுக்கொள்ளும்போது தனது கர்ப்ப வயிற்றை தன் கொழுந்தனுக்கு காட்டி தன் புருஷனை அவ்வளவு மோசமாக நினைத்திருப்பதாலும் சீதையை பதிவிரதைகளில் சேர்க்கமுடியாமல் போய்விட்டதே ஒழிய வேறில்லை என்றும் சொன்னார்,

வேறொரு பட்டைராமக்காரர் 'இதெல்லாம் எங்கு இருக்கின்றது' என்று கேட்டார்.

நாயக்கர் 'வால்மீகி ராமாயணத்தில் இருக்கின்றது'என்று சொன்னார்.

மற்றும் 'தசரதன் எப்படி கேட்டவன்' என்று கேட்க, திரு நாயக்கர்

'தசரதன் தனக்கு பல பெண்கள் இருந்தும் மறுபடியும் கைகேயியை கட்டிக்கொள்ள ஆசைப்பட்டபோது கைகேயியின் தகப்பனாகிய கேகயமன்னன் தசரதனைப்பார்த்து 'உனக்கு ஏற்கனவே பலபெண்கள் இருப்பதால் மறுபடியும் பெண்கொடுக்க முடியா'தென்றும் 'அப்படி கட்டாயமாக வேண்டுமென்றால் என் பெண்வயிற்றில் பிறக்கும் குழந்தைக்கு பட்டம்கொடுப்பதாய் சத்தியம் செய்யவேண்டும்'என்றும் நிபந்தனைகேட்க அதற்கு தசரதன் கட்டுப்பட்டு உறுதிகூறி கைகேயியை மணந்து கைகேயிவயிற்றில் பிறந்த குழந்தைக்கு பட்டம் கொடுக்காமலும் அதற்கு தக்க சமாதானமாவது பரதனுக்கோ கைகேசிக்கோ சொல்லாமலும் பரதன் ஊரில் இல்லாதபோது ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்ததும், ராமனும் இந்த விஷயங்களை தெரிந்திருந்தும் தன் தகப்பனுக்கு நியாயத்தை எடுத்துச்சொல்லி யோக்கியமாய் நடந்துகொள்ளும்படி செய்யாமலும் பட்டம் கட்டிக்கொள்ள சம்மதித்துமான காரியங்களால் இவர்கள் இருவரையும் அயோக்கியர்கள் என்று சொல்லாவிட்டாலும் யோக்கியர்கள் என்று சொல்ல முடியாது என்றும் சொன்னார். உடனே அந்த பட்டைராமக்காரர் 'இந்த விஷயம் உங்களுக்கு எப்படித்தெரியும்' என்றுகேட்டார்-

திரு நாயக்கர், வால்மீகி ராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் ராமனே பரதனுக்கு சொல்லுகின்றதாகவும் வால்மீகி சொன்னதாக வால்மீகி ராமாயணத்தில் இருக்கின்றதென்றும்சொன்னார். உடனே அந்தகேள்வி கேட்டவர் 'ஆரண்யகாண்டம்' என்பதைக் குறித்துக்கொண்டார். பட்டைராமக்காரர் 'நீங்கள் ஏன் ராமன் என்கின்ற பெயர் வைத்துக்கொண்டீர்கள்' ;என்று கேட்டார். திரு நாயக்கர் 'ராமன் என்கின்ற பெயர் ராமாயண ராமனுக்கு மாத்திரம் சொந்தமல்லவென்றும் ராமனுடைய பெற்றோர்களுக்கு தம் மகனுக்கு ராமன்என்கின்ற பெயர் வைக்க எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவுசுதந்திரம் தனது பெற்றோர்களுக்கும் உண்டுஎன்றும் ராமன் என்றால் மிக்க அழகானவன என்றுதான் அர்த்தம் செய்யப்படுகின்றதென்றும் தன் ராமனைவிட அழகானவன் என்றுதான் பெற்றோர் களுக்கு தோன்றியதால் அந்தராமனுக்கும் மேலாக என்னைக் கருதி ராமசாமி (அதாவது ராமனுக்குசாமி) என்று பெயர் வைத்திருக்கின்றார்கள் என்றும் அதை மறுக்கவேண்டிய அவசியம் எனக்குஒன்றும் தோன்றவில்லை என்றும் சொன்னார். உடனே எல்லோரும் கைதட்டிசிரித்தார்கள்.

திரு நாயக்கர் மறுபடியும் கூட்டத்தைப் பார்த்து கண்டித்து எல்லோரும் அமைதியாயிருக்க வேண்டும் என்றும்யாரும் யாரையும் பரிகாசம் செய்யக்கூடாதென்றும் ,கேள்வி கேட்க வருகின்றவர்களை அநுமதிக்க வேண்டும் என்றும் அவர்களை அன்பாய் நடத்த வேண்டும் என்றும் அவர்கள் எந்த எண்ணத்தின் மீது கேட்டாலும்அதை நாம் நல்ல எண்ணமாகவே கருதி நல்லவிதமாய் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார் .உடனே கூட்டத்தில் ஒருவன் ஒரு தடிக் கொண்டு வந்து "இது தான் அன்போ? இப்படி என்னை அடிக்கலாமா? இது நியாயமா" என்று கேட்டார். அதற்கு திரு நாயக்கர் 'நீங்கள் அடிபட்டதற்கு நான் வருந்துகின்றேன் என்றும் அடித்தவர்களையும் நான் கண்டிக்கின்றேன் என்றும் அடிபட்டதாக தயவு செய்துஇனிமேல் வெளியில் சொல்லிக் கொள்ளாதீர்கள். என்றும் சொன்னார். மறுபடியும் அவர் தன்னுடைய கைத்தடியை யாரோ பிடுங்கிக் கொண்டு போய் விட்டதாகவும்சொன்னார்.

திரு நாயக்கர், அவர் கைப்பிரம்பை எடுத்தவர்கள் கொடுத்து விடவேண்டுமென்று சொன்னார். இந்த நபர் தான் முன் சொன்ன பத்திரிகை நிருபரின் தூண்டுதலால் சத்தம் போட்டவர் என்று தெரிய வந்தது.

தொடரும். ஒரு நிருபர்,

ங்கும்சம்பநூற்குப்பைகள்எல்லாவற்றையும் நெருப்பிட்டுக்கொளுத்திவிடுவோம்.கடவுள் உண்டா இல்லையா? என்ற கேள்வியை நாம் மறந்துவிடுவோம், இல்லையென்று சொன்னாலும் பலர் நம்மோடு சண்டைக்கு வந்துவிடுவார்கள். கடவுள் உண்டென்று கூறுவதற்காக அவர்கள் படித்த படிப்பையும், உணர்ந்த அறிவையும் விழலுக்கிறைத்த நீராக்கிவிடுவார்கள். உண்டென்று சொன்னாலோ அவருக்குச் செய்கை கற்பிக்கவேண்டும். செய்கை உண்டாகுமானால் குணங்கள் உண்டாகிவிடும். குணங்கள் இருக்குமானால் உருவமுடையதாகிவிடும். உருவமுடையதாகிவிடுமானால் இறப்பு பிறப்பு உண்டாகிவிடும். உருவம், இறப்பு, பிறப்புகளை விளக்குவதற்காகவே புராணங்களும், இதிகாசங்களும், வேதங்களும் தோன்றிவிடும். அதிலிருந்து கோயில் குளங்கள் தேர் திருவிழா எல்லாம் உண்டாகிவிடும். ஆகவே இப்பொழுது எந்தவிதமான மூடக்கொள்கையில் இருக்கின்றோமோ அந்தவிதமான மூடக்கொள்கையிலேயே மீண்டும் புரும்படி வந்துசேரும். ஆகலால்தான் கடவுளைப்பற்றிய கவலையே நமக்கு வேண்டாமெனக் கூறுகின்றோம். கடவுள் இருப்பாரானால் நாம் இல்லையென்று கூறுவதனால் இல்லாமற் போய்விடமாட்டார். அழிந்துபோகமாட்டார். இறந்துபோகமாட்டார். கடவுள் இல்லாமலிருந்தால் நாம் இருக்கிறார் என்று கூறுவதனால் உண்டாகிவிடமாட்டார், ஒரு சமயம் நாம் சொல்வதனால் உண்டானாலும் அவரால் நமக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது, உண்டாக்கத்தக்க ஆற்றலுள்ள நாமே எல்லாவற்றையும் செய்துகொள்ளலாம் என்பதுதான் நமது அபிப்பிராயமாகும். ஆகையால் நமது அறிவின்பெருமையையும், இயற்கையில் நம்மிடத்தில் அமைந்திருக்கும் சக்தியையும் உணர்ந்து இவைகளை ஒழித்து மக்கட் கூட்டத்திற்குப் பயனில்லாத செயல்களை அழித்து ஜன சமூகம் ஒன்றுபட்டு ஒரேவிதமான இன்பத்தை யடையும்படியான அறைபிற் புகுந்து தொண்டாற்றி மகிழ்ச்சியடைவோம். இன்புறுவோம்.

## வன்னியகுல க்ஷத்திரிய சங்க 40 ம் ஆண்டு நிறைவு விழா.

செங்கல்பட்டுஜில்லா ஸ்ரீ காஞ்சிபுர க்ஷேத்திரம் காமாக்ஷி தியேட்டரில், 1929 ௵ ஜனவரி மாதம் 27 தேதி கொண்டாடப்படும் என்று வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் க. வே. கிருஷ்ணசாமி நாயகர் அவர்கள் தெரிவிக்கிறார்.

# பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு.

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

வேலூரில் இம்மாதம் 4, 5-ம் தேதிகளில் நடைபெற்ற வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பின்வருமாறு:—

1. நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் அரசர் அவர்களின் உடல் நலிவு குணமடைய வேண்டுமென்று இம்மகாநாடு வேண்டுகின்றது என்ற தீர்மானத்தைத் தலைவர் பிரரேபிக்க, ஏகமனதாக நிறைவேறியது.

2. (அ) நமது தலைவர் பானகல் அரசர் காலமானதைக் குறித்து இம்மகாநாடு தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

(ஆ) இந்த தீர்மானத்தை பானகல் அரசர் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவேணுமாய்க் காரியதரிசியைக் கேட்டுக் கொள்கின்றது என்ற தீர்மானங்களை திரு. பத்மநாபநாயுடு அவர்கள் பிரரேபிக்க திரு. சந்தோஷம், திரு மாணிக்கவேலு நாயகர், திரு. மாசிலாமணி முதலியார் ஆகியோர் ஆதரித்தபின்னர் ஏகமனதாக நிறைவேறின

3. வாலிபர்கள், கிராமங்களிலும் பட்டணங்களிலும் மதுவிலக்குப்பிரசாரம் செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. மக்கள் பிறவியினால் ஜாதி உயர்வு தாழ்வையும் அதனால் கற்பித்திருக்கும் தீண்டாமை முதலிய கொடுமைகளை வழக்கத்தில் வைத்திருப்பதையும் அடியோடு ஒழிக்க வாலிபர் முயற்சிக்கவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

### பெண்ணுரிமை.

5. (அ) நமது பெண்மணிகளுக்கு குடும்ப சொத்தில் ஆண்களைப்போலவே சரிபங்கு இருக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(ஆ) விதவைகள் என்பவர்களுக்கும், அவர்களின் புருஷர்களுக்குள்ள சொத்துக்கள் முழுவதிலும் பூர்ண சுதந்திரம் இருக்கவேண்டும்.

(இ) பாகம் பிரியாத குடும்பங்களிலும் புருஷர்களுக்குக் கிடைக்கக்கூடிய சொத்துக்களின் உரிமை முழுவதும் அவர்கள் இறந்த பிறகும் அவர்களின் மனைவிகளுக்குக் கிடைக்க உரிமை இருக்கவேண்டும்.

(ஈ) ஆண்கள் தங்கள் மனைவிகள் காலம் சென்றுவிட்டால் மறு விவாகம் செய்துகொள் உரிமை இருப்பதுபோலவே எல்லாப்பெண்களுக்கும் புருஷன் இறந்துபோனால் மறுவிவாகம் செய்துகொள்ள உரிமை இருக்கவேண்டும்.

(உ) ஜாதிவித்தியாசம் இல்லாமல் ஒவ்வொருவரும் தங்களுக்கு இஷ்டமான வகுப்பில் கலியாணம்செய்துகொள்ள பெண்களுக்கும் ஆண்களுக்கும் உரிமை இருக்கவேண்டும். இவ்விஷயங்களை ஒவ்வொரு வாலிபர்களும் பிரசாரம் செய்வதோடு சட்டசபை அங்கத்தினர்களையும் இந்தக்கொள்கைக்கு ஏற்றபடி அரசாங்கத்தில் சட்டம் ஏற்படும்படி செய்யவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

(ஊ) ஒவ்வொரு வாலிபர்களும் கூடுமானவரை தங்களுக்கு ஏற்ற விதவைகளையே விவாகம் செய்துகொள்ள முயற்சி செய்யவேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(எ) பெண்களுக்கு 18-வயதும், ஆண்களுக்கு 24-வயதும் சென்றபிறகே கல்யாணங்கள் செய்யவேண்டும் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

### ரேயில்வேயிலும் ஜாதி வித்தியாசமா?

6. தென் இந்திய ரயில்வே, மதராஸ் சதர்ன் மாராட்டா ரெயில்வேகாரர் முதலியவர்கள் வைத்திருக்கும் பிரயாணிகள் சாப்பாட்டு விடுதிகளிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் ஜாதிவித்தியாசம் உர்யவு தாழ்வு முதலிய பாகுபாடுகளே இருக்கக்கூடாது என்றும், இம்மாதிரி சமத்துவம்பாராட்ட சம்மதிக்காதவர்களுக்கு சிற்றுண்டிச்சாலைஓட்டல் முதலியவைகள் வைப்பதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்றும், தண்ணீர்ப்பந்தல் தண்ணீர் கொடுக்கின்றவர் ஆகியவர்களும், பிரயாணிகளுக்கு தண்ணீர் கொடுப்பதில் ஜாதிவித்தியாசம் உயர்வு தாழ்வு காட்டும்படி விடக்கூடாது என்றும் இம்மகாநாடு ரயில்வேக்காரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது

### கல்வி மகந்து பாடசாலை அக்கிரமங்கள்

7. (அ) பொதுஜனங்களால் அளிக்கப்படும் காணிக்கைப்பணம் முதலியவைகளிலிருந்து மகந்து போரால் நடத்தப்படும் வேலூர் ஸ்ரீ மகந்து ஹைஸ்கூலில் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களையும் விகிதாச்சாரம் நியமிக்கவேண்டுமென்று இம்மகாநாடு திரு. மகந்து பள்ளிக்கூட நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(ஆ) ஸ்ரீ மகந்து ஸ்கூலில் தண்ணீர்பந்தல் முதலிய விஷயங்களில் மாணவர்களுக்குள் ஜாதிவித்தியாசம் உயர்வு தாழ்வு கற்பிக்கக்கூடாது என்று நிர்வாகிகளை கேட்டுக்கொள்கின்றது.

(இ) சர்க்காரால் ஸ்காலர்ஷிப்பு கிராண்டு கொடுக்கப்படும் பள்ளிக்கூடங்களில் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு விகிதாச்சாரம் கொடுக்கும்படியும் பார்ப்பனரல்லாத உபாத்தியாயர்களை விகிதாச்சாரப்படி நியமிக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டுமாய்ச் சர்க்காரை கேட்டுக்கொள்ளுகின்றது.

9. (ஈ) பார்ப்பனரல்லாத மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்துக்கொண்டவுடன் உபாத்தியாயர் வேலைக்கு தாராளமாகத் தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டுமாய் இம்மகாநாடு பார்ப்பனரல்லாதவாலிபர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

### புரோகித பஹிஷ்காரம்.

10. கோவில், குளம், தெருவு, பள்ளிக்கூடம் முதலிய பொது இடங்களில் ஜாதிவித்தியாசம் உயர்வு தாழ்வு இல்லாமல் எல்லோருக்கும் சம உரிமை இருக்கும்படி பிரசாரம் செய்யவேண்டுமாய் வாலிபர்களைக் கேட்டுக்கொள்கிறது. இந்தப்படி சர்க்காரில் சட்டம்செய்து அதை அமுலுக்குக்கொண்டுவரவேண்டுமாய் முயற்சி எடுத்துக்கொள்ளும்படி சட்டசபை அங்கத்தினர்களையும் சர்க்காரையும் கேட்டுக்கொள்ளுகின்றது.

பூஜை, பிரார்த்தனை, சடங்கு முதலிய காரியங்களில் தரகர்களையும் புரோகிதர்களையும் வைத்துக்கொள்ளுவதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்றும், அதிலும் ஜாதி உயர்வு காரணமாய் தரகர்களை வைத்து நடத்துவது அவசாமாய் அடியோடு நிறுத்தப்படவேண்டு மென்றும் பிரசாரம் செய்ய வேண்டுமாய் தீர்மானிக்கிறது.

### பத்திரிகை.

பார்ப்பனரல்லாதார் நன்மைக்கும், சிறப்பாக எல்லா மக்களுடைய சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் சம சந்தர்ப்பம் அளிப்பதற்கும் நடத்தப்பட்டு வரும் ‘ஜஸ்டிஸ்’ ‘திராவிடன்’ ‘சமதர்சினி’ ‘ரிவோல்ட்’ ‘குடி அரசு’ ‘குமரன் ‘நான்பிராமின் யூத்’ முதலிய பத்திரிகைகளை பொது மக்களும் சிறப்பாக வாலிபர்களும் ஆதரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

### உத்தியோக நியமனம்.

தற்கால மந்திரிகள் ஆட்சியில் அரசாங்க உத்தியோகம் வினியோகிப்பதில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் திட்டம் போதுமானதாயில்லாவிட்டாலும் வகுப்புவாரிக் கொள்கைகளை ஒப்புக்கொண்டதைப் பொருத்த வரையில் சர்க்காரைப் பாராட்டுவதுடன், அதை முதலில் அமுலுக்குக்கொண்டுவரத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்ட சுகாதார மந்திரிகனம் எஸ். முத்தைய்யா முதலியார் அவர்களை இம்மகாநாடு பாராட்டுகின்றது. இதை அமுலுக்குக்கொண்டு வரும்படி மற்ற இலாக்கா மந்திரிகளையும் அரசாங்க நிர்வாகசபை அங்கத்தினர்களையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

### உத்தியோகத்திற்கு ஜாப்தா.

ஒவ்வொரு ஜில்லாவிலும் பார்ப்பனரல்லாத வாலிபர்களில் உத்தியோகத்திற்கு லாயக்காயுள்ள உத்தியோகம் வேண்டியவர்களின் ஜாப்தா ஒன்று பதிவு செய்து வைத்திருப்பதுடன், ஒவ்வொரு வருஷமும் அந்த பதிவு அறிக்கையை சென்னையில் இருக்கும் மத்திய உத்தியோக ஸ்தாபனத்திற்கும் சர்க்கார் இலாக்கா தலைமை அதிகாரிகளுக்கும் முறையாய் அனுப்பிக்கொண்டு வரவேண்டுமாய் தீர்மானிக்கிறது.

குருட்டுநம்பிக்கைக்கும் மூட பழக்கவழக்கங்களுக்கும் ஆதாரமானதும், அறிவு வளர்ச்சிக்கும் தன்முயற்சிக்கும் தடையானதுமான கருத்துகளும் வாசகங்களுமுள்ள பாடபுத்தகளை பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்கக்கூடாதென்று கல்வி இலாகா அதிகாரிகளையும் (யூனிவர்சிட்டி, செனட்) அங்கத்தினர்களையும், டெக்ஸ்ட்புக்கமிட்டி அங்கத்தினர்களையும், ஸ்தலஸ்தாபன நிர்வாகிகளையும் பள்ளிக்கூட மேனேஜர் காஸ்பாண்டுகளையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

திருவாளர்கள் நாயக்கர், பத்மநாப முதலியார், தாமோதரம் B. A. L T., சுந்தரராஜுலு நாயுடு, மாசிலாமணி, சந்தோஷம், கிருஷ்ண ரெட்டியார், தண்டபாணி பிள்ளை, சௌந்தரபாண்டிய நாடார், தக்கோலம் செட்டியார், கண்ணப்பர், ஆரியா, நாயனர்,

# முன்னேற்றம்.

## அறிஞர் இங்கர்சால் இயற்றியது.

பட்டுக்கோட்டை

திரு. ரா. சௌரிராஜன் மொழிபெயர்த்தது.

நான் எடுத்துக்கொண்ட விஷயம் முடிவற்றதென்பதையும் அது தற்காலத்தில் மக்களின் அறிவுக்குப் புலப்படவில்லை என்பதையும் நான் நன்கறிவேன். முன்னேற்றத்தைப்பற்றி பல திறப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றனவென்பதையும் ஒருவன் நாகரீகமென்று கொள்வதை மற்றொருவன் அநாகரீகமென்று தள்ளுகிறானென்பதையும் பழமையானவைகளைப் பலர் பழமையானவைகளென்பதற்காகவே போற்றுகின்றார்கள் என்பதையும் நான் அறிவேன்.

அவர்கள், அக்காலத்திலிருந்த கவிஞர்களைப்போல—அறிஞர்களைப்போல—அரசர்களைப்போல—அரசாங்கங்களைப் போல தற்காலத்தில் இல்லை என்று சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் பழமையானவைகளை வெறுத்து புதுமையானவைகளைப் போற்றுகின்றார்கள். பழமையானவைகளில் கண்டிக்கத்தக்கவைகள் பல விருக்கின்றனவென்றும் ஆதலால் அவைகள் பழமையைக் கண்டிப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் முற்காலத்திலிருந்த அறிவாளிகளின் அறிவைப்போற்றத்தகும் பெருமையும் தன்மையும் எனக்கிருக்கிறது. முன்னோர்கள் சொல்லியதை மூடத்தனமாய் நம்பாமல் ஆராய்ந்து அறியும்படியான அறிவும் ஆண்மையும் என்னிடமிருக்கிறது. எனது கொள்கைகள் எவ்வளவு கடினமாகவிருந்தாலும் அவைகளை ஒளிக்காமல் வெளியிடும்படியான தைரியமும் திடச்சித்தமும் எனக்கிருக்கிறது. உண்மையென்று புலப்படுகிறவைகளை ஒப்புக்கொள்ளும்படியான சுதந்திரமும் சுயபுத்தியும் எனக்கிருக்கிறது. ஆகவே எனது உள்ளத்திலுள்ளவற்றை ஒளிக்காமல் உங்களுக்கு வெளியிடுகிறேன்.

உண்மைக்கு இளமை முதுமை என்ற காலவரையறை கிடையாது. பழமை புதுமை என்ற பாகுபாடு அதற்குக் கிடையாது. எக்காலத்திலும் எவ்விடத்திலும் உண்மை ஒன்றே. ஆதலின் உண்மையை விடா முயற்சியுடன் தேடவேண்டும். பெருமையுடன் அதைப்போற்றவேண்டும். உயிரினும் மேலாக அதை ஓம்பவேண்டும். உழைப்பு உலகத்திலுள்ள சுகபோகங்களுக்கு ஆதாரமாயிருக்கிறபடியால் உழைப்பு உண்மையின் ஓர் பகுதியாகும். ஆதலின் உழைப்பு உலகத்தார்களுக்கு இன்பமளிப்பதால் அந்த உழைப்பாகிய உண்மை சுதந்திரமுள்ளதாகவிருக்கவேண்டும். உழைப்பைக் கையாளும் தொழிலாளி சுதந்திரமுள்ளவனாகவிருக்கவேண்டும். உண்மையை ஆராயும் அறிவாளி சுதந்திரமுள்ளவனாகவிருக்கவேண்டும். முற்காலத்தில் சுதந்திரமென்பதே கிடையாது. உண்மையான உழைப்பு வெறுக்கப்பட்டது. உண்மையான தொழிலாளி மிருகமாகவே கருதப்பட்டான். அறியாமையானது போர்வைபோல உலகத்தை மூடிக்கொண்டிருந்தது. மனிதர்களின் கற்பனைகளில் மூடநம்பிக்கையே குடிகொண்டிருந்தது. அதனால் ஒவ்வொரு காரியமும் அவர்களுக்கு தெய்வீகத்தன்மை பொருந்தியதாக விருந்தது. அம்மூடநம்பிக்கை பேதமை, ஆராய்ச்சியை அழித்து அரசாண்டு வந்தது, அறிவின் கண்களை அவித்தது.

ஒருவன் பெருமையடைய வேண்டுமானால் அவன் போர்வீரனாகவோ அல்லது மதகுருவாகவோ இருக்கவேண்டும். பொய் சொல்லி ஏமாற்றல், கொடுமையாகக் கொல்லுதல் ஆகிய இவைகளுக்குள்ளே அவன் ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சண்டையும் வேதாந்தமுமே அக்காலத்தில் மக்களின் கவனத்தை கவர்ந்திருந்தது. பொதுவாய் நோக்குமிடத்து அக்காலத்தில் வியாபாரமென்பதே கிடையாது. இஷ்டப்பட்டதை கட்டாயப்படுத்தி ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டார்கள். ஒருமதம் மற்றொரு மதத்ினரைக்கொல்வது குற்றமல்லவென்று கருதியது. அக்காலத்தில் எழுதுவதும் படிப்பதும் ஆபத்தான செயல்களாகக் கருதப்பட்டன. நன்றாக எழுதப் படிக்கத்தெரிந்த ஒருவன் மதத்துரோகியாகக் கருதப்பட்டான். அந்தக்காலத்திலிருந்த அறியாமையும் கொடுமையும் கொலையும் மூடநம்பிக்கையும் நம்மால் யோசிக்கக்கூடியவையல்ல. அக்காலத்துச்சரித்திரத்தை வாசிக்கும்பொழுது அக்காலத்தில் மனிதர் மனிதருக்கிழைத்தகொடுமைகள் எனது மனதை பிரமிக்கச்செய்துவிட்டன. ஆனால் அக்கொடுமைக்குக் காரணம் சுதந்திரத்தை வெறுத்ததாகும். மூடநம்பிக்கை என்னும் விலங்கு ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தியது சந்யாசியின் கைக்கோலாலும் கத்தியாலும் அக்காலத்தில் மனிதர்கள் ஆளப்பட்டார்கள்.

அக்காலத்திலிருந்தவர்களின் பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளாது அவர்களின் தன்மையைநாம் உணர்ந்துகொள் முடியாது. அறியாமையே தலைமுதல் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. சுதந்திரத்தின் ஒப்பற்ற காட்சியை அவர்கள் கனவில் கூடகாணவில்லை. கொடுமைகளெல்லாம் சட்டங்கள் ரூபமாக ஜன சமூகத்தைத் துன்பப்படுத்தின. ஆறுவது நூற்றாண்டில் பிரான்சு தேசத்தில் குருக்களை வணங்காததற்காக ஒருவன் கொல்லப்பட்டான். ஒருவருக்கும் ஒன்றும் தெரியாதவொரு விஷயத்தில் அபிப்பிராய பேதங்கொண்டதற்காக கொல்லப்பட்ட ஆண் பெண்கள் கோடானுகோடி. அக்காலத்தில் உண்மையை விளக்கவும் உயரிய கொள்கையை நிலை நாட்டவும் மதக்கொடுமையை அறவே நீக்கவும் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் இரக்கமில்லாமல் கொல்லப்பட்டார்கள். சிறந்த உத்தமர்களில் ஒருவரான லூதர் மனிதர்களுக்குள்ள சுதந்தரத்தை ஐரோப்பாவில் நிலை நாட்டிச்சென்றார். மாண்டெயின் என்பவர் பிரான்சு தேசத்தில் கொடுமையைத் தனது ஆராய்ச்சியால் எதிர்க்க ஆரம்பித்தார். கோடிக்கணக்கான மூடர்களின் சப்தத்தினிடையே உண்மை வீராகிய இவருடைய சப்தமானது கொந்தளிப்புள்ள கடலின் மத்தியிலே துணையின்றி முழுகும்படியான மனிதனை ஒத்திருந்தது. துக்கமும் வருத்தமுமில்லாமல் அக்காலத்திய சுதந்திரப்போராட்ட சரித்திரத்தை நாம் வாசிக்கமுடியாது. நம் போன்ற ஆசையும் பிரியமுமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கடவுளின் பெயரால் கொல்லப்பட்டார்கள். அவர்கள் தூக்குமேடைகளிலும் சிறைச்சாலைகளிலும் கடவுள் பெயரைச்சொல்லிக் கொண்டே இறந்து போனார்கள். ஆனால் அவர்களினுடைய கொள்கைகள் அவர்களுடைய இரத்தத்தால் பாதுகாக்கப்பட்டன அவர்களுடைய உயரிய நோக்கங்கள் அவர்களுடைய கஷ்டங்களால் காப்பாற்றப்பட்டன, அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் எவ்வளவு துன்பத்தை அநுபவித்தாலும் அவர்களின் கொள்கை இறுதியில் வெற்றி பெற்று இப்பொழுது நம்மை நாகரீகமுள்ளவர்களாக்கியது. அவர்களின் கொள்கை உண்மையையும் உழைப்பையும் கொண்டுவளர்ந்திருப்பதால் அதன் பெருமை அளவிடற்கரியது

மதத்தில் சுதந்திரமிருக்கவேண்டும். ஏனெனில் சுதந்திரமில்லாதது மதமாகாது. மதத்திலும் அரசாங்கத்திலும் சுதந்திரம் முதல் முதல் என்னுடைய நாடாகிய அமெரிக்காவில்தான் கொடுக்கப்பட்டது- என்று சொல்லிக்கொள்ளும் பெருமை ஒருவகையில் எனக்கு உரியது. சுதந்திரமில்லாவிட்டால் மதமில்லை. சுதந்திரமில்லாவிட்டால் வணக்கமில்லை, கண்களுக்கு வெளிச்சத்தைப்போலவும் இருதயத்திற்கு காற்றைப்போலவும் ஒற்றுமைக்கு அன்பைப்போலவும் அறிவிற்கு சுதந்திரம் அவசியமாயிருக்கிறது.

---

T. வரதராஜுலு நாயுடு, ராமநாதமுதலியார், கனம் மந்திரி முத்தையா முதலியார், ஸ்ரீமதி மிஸ் நாயகம் முதலியவர்கள் ஆகிய தீர்மானங்களின் மேல் பேச தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

முடிவில் கீழ்கண்ட தீர்மானங்கள் அக்கிராசனரால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

ஸ்தலஸ்தாபன இலாக்கா அதிகாரிகள் தங்கள் ஆட்சியில் உள்ள ஸ்தாபனங்களில் பார்ப்பனரல்லாதாரை உத்தியோகத்திற்கு நியமிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றது.

இந்த ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிலும் கிராமங்களிலும் பார்ப்பனரல்லாத வாலிபர்கள் சங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு ஒவ்வொரு வாலிபர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றது.

ஒரு நிருபர்.

---

## பார்ப்பனீயம் ஒழிந்ததிதி

சித்தோடு திரு. வீ. நாச்சியப்ப முதலியார் சென்ற வாரம் தமது தகப்பனார் திதியை அர்த்தமற்ற சடங்குகளையும் பார்ப்பனப்புரோகிதத்தையும் நீக்கி பந்து மித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு போட்டு முடித்தார்

# தெய்வங்கள்.

## பிர்மா.

சித்தாக்காடு
(திரு. ராமய்யா நயினர் எழுதியது)

நமது நாட்டிலுள்ள கோடிக்கணக்கான தெய்வங்களில் பிர்மா என்று சொல்லப்படுவதும் ஒன்று. பிர்மாவை சிருஷ்டிகர்த்தா வென்றும் சொல்வார்கள். பூர்வீக இருக்கு அதர்வணவேதங்களில், சிருஷ்டிகர்த்தாவுக்கு விஸ்வகர்மா, இரண்யகர்ப, பிரஜாபதி என்ற பெயர்களிருப்பதாக புலனாகிறதே தவிர, பிர்மா என்கிற வார்த்தையே ஒருவிடத்திலும் கிடையவே கிடையாது. பிர்மா என்ற பெயர் வேதத்திலும் பிராமணத்திலும் காணப்படவில்லை என்றால் அன்னவரின், சிரசு, புயம், துடை, பாதம் முதலிய அங்கங்களிலிருந்து மனுஷியர்கள் நான்கு வருணமாக உற்பவித்திருக்கிறார்கள் என்று வர்ணாசிர்மம் சொல்லும் கூற்றை என்னவென்று கூறுவது. பிர்மா என்ற கடவுளும், நாராயணன் என்ற கடவுளும், பெயர் வித்தியாசத்தை தவிர அசாமிஒன்றுதான் என்று மனுவின் மூலம் தெரிகிறது. எப்படி என்றால், பிர்மா ஜலத்தில் அசைவாடிக்கொண்டிருந்ததினால் (நாரம்-ஜலத்தில், அயனம்-அசைவாடிக்கொண்டிருத்தல்) அப்பெயர் வாய்க்கப் பெற்றதாம் அப்படிக்கிருக்க, நாராயணனுடைய வலது பக்கத்திலிருந்து பிர்மா, தோன்றினாரென்று நாரத புராணம் கூறுகின்றதே? விஷ்ணுவின் உந்திக் கமலத்திலிருந்து (கொப்பூழ்கொடியிலிருந்து) உற்பத்தியானாரென்று ஐந்தாம் வேதமாகிய மகாபாரதம் கூறுகின்றது. சரஸ்வதியிலிருந்து உற்பத்தியானதாக மார்க்கண்ட புராணம் சொல்லுகிறது. சிவனுடைய வலது பக்கத்திலிருந்து பிர்மாவும், சரஸவதியும் தோன்றினதாக லிங்கபுராணம் கூறுகிறது. மேற் சொல்லிய மார்க்கண்ட புராணக்கூற்றிலிருந்தும் லிங்கபுராணத்தின் கூற்றிலிருந்தும் கவனித்தால் சரஸ்வதிக்கும் பிர்மாவுக்கும் ஏற்படக்கூடிய முறை வித்தியாசங்களை வாசகர்களே கவனிப்பார்களாக! மேலும் சிவலிங்கத்தை பிர்மா பூஜித்து இரதசாரதியாகவும் இருந்ததாக லிங்கபுராணத்தில் அறியக்கிடக்கின்றது. என்னே புராணங்களின்புரட்டு! இதைப் போன்ற பலவாறான புராணச் செய்திகளிலிருந்து பிர்மா எவ்வகையில் தோன்றினாரென்று சொல்வதற்கில்லையே? இக்கூற்றுக்கு, பொதுவாக நம் நாட்டு மக்கள் பிர்மாவின் நெற்றியிலிருந்து சிவன் உற்பத்தியானதால், பிர்மா தான் பெரியவரென்று விஷ்ணு பக்தர்கள் சொல்லுவார்கள். சிவனுடைய இடது கைவிரலால் பிர்மாவின் தலை கிள்ளப்பட்டுப் போனபடியாலும் சிவலிங்கத்தை பிர்மா வணங்கினபடியாலும் லிங்க புராணக் கதைகளைக் கொண்டு சிவனே பெரியவரென்று விபூதியணிந்த சிவபக்தர்கள் நாமமணிந்த வைஷ்ணவ பக்தரோடு வாக்குப் போர் புரிந்து கொள்வார்கள்.

திரிமூர்த்திகள், கண்டகி என்னும் தாசி வீட்டில் நடந்துகொண்டது மிகவும் அருவருக்கத்தக்க செய்திகளாகையால் இவர்கள் மூன்று பேர்களும் கல்லாக சபிக்கப்பட்டதில், பிர்மா, இரண்ய கர்ப்பமென்னும் கல்லாகவும், சிவன் - சிவனுமக கல்லாகவும், விஷ்ணு - சாளக்கிராமமென்னும் கல்லாகவும் பிறந்தார்கள். இந்த தாசியின் பெயரே ஒரு நதிக்காயிற்று. இத்தாசிக்கு சந்துஷ்டியாக வேசியாதரிசனம் என்ற புண்ணிய மந்திரமுண்டு பண்ணி இப்பவும் காலை-மாலையில் சில பார்ப்பார்கள் ஜபித்து வருகிறார்கள். அந்த ஜபத்தைப்பற்றி இங்கு எழுத கைகூசுகிறது.

பிர்மா, தன் சகபாடிகளான இரு மூர்த்திகளோடு, அத்திரிமுனியின் பெண்ஜாதி அனுசுயையின் கற்பை அழிக்கும்படி பாப்பார வேஷம் தாங்கி வந்து நிர்வாணமாய் பிச்சை கேட்டு, ரிஷி பத்தினியின் சாபமடைந்து, அநேக காலம் தங்களுடைய சிருஷ்டி, திதி, சங்காரமென்னுந் தொழிலை யிழந்துவிட்டு சிறிய பாலகர்களாய் அவளண்டையிலிருந்ததாகவும், திரிமூர்த்திகளின் பெண்ஜாதிகளின் வேண்டுகோளின்படி நாரதரின் முயற்சியால் ரிஷி பத்தினி சாபத்தை நீக்கினாளென்றும் புராணங்கள் கூறுகின்றன. என்னே கூத்து!

பிர்மா தன்தலையில் ஒன்றை இழந்துபோனதைப்பற்றி, கதைக்கூற்றுகளை கவனியுங்கள்.

(1) பிர்மா தன் மகள் ஊர்வசியை இச்சித்து இருவரும் கலைமான் உருவெடுத்து வனத்தில் முறைகேடாய் வாசம்பண்ணின துர்ச்செய்கைக்காக சிவன், பிர்மா தலையை கிள்ளினாராம். (இப் பிர்மாவை எப்படித்தான் போற்றுவரோ தெரியவில்லை.)

(2) பிர்மா சிவனைப்பார்த்து 'உன்னை நான் உண்டாக்கினேன்' என்று சொல்லியதற்காக சிவன், பிர்மாவின் தலையை வெட்டினாராம்!

(3) சிவனுக்கும் பிர்மாவுக்கும் ஐந்து தலைகளிருந்ததினால், பார்வதிக்கு அடையாளம் தெரியாமல் சோரம் போய்க்கொண்டிருந்தபடியால் சிவன் பிர்மாவின் தலையை வெட்டினாராம்.

(4) காசியில் சிவனுக்கு கல்யாணமாகிற சமயத்தில் பார்வதியை பார்க்கச் சிவன் போய் இருந்ததில் பார்வதி திரை மறைவிலிருந்ததினால் அவளை பார்க்கமுடியாவிட்டாலும், காலின் பெருவிரலைமாத்திரம் கண்டு மோகித்து இங்கு எழுதக்கூடாதபடிக்குள்ள ஆபாசம் செய்தார். அதினால் 1 கோபிச் சந்தனப்பாப்பார். 2. விபூதிப்பாப்பார். 3. நாமப்பாப்பார். 4. மல்லகசெட்டிகளாகிய நான்கு வருணம் ஏற்பட்டார்களென்று தெரிந்த சிவன் பிர்மாவின் தலையை, வெட்டினாராம். இப்படி ஒரே விஷயத்திற்கு பல கதைகள் ஏற்பட்டிருக்கின்றன. என்னே பிர்மாவின் நிலை!

மனித அறிவுக்கு ஒத்துவராத பார்ப்பான் சுயநலத்துக்கு எழுதிய இப்புராண இதிகாசங்களே சர்வ வல்லமை உள்ளதென்றும் அவற்றில் பெயர் கொடுத்து எழுதி இருக்கும் கடவுளே சர்வ வல்லமை உள்ளதென்றும் ஆதலால் அத்தகைய கடவுளையே ஒவ்வொருவரும் முறைப்படி உத்ஸவாதிகளோடும் கல்யாணம் காஷி, சாந்தி முகூர்த்தம் முதலியதோடும் போற்றவேண்டுமென்றும்சொல்லி தொன்று தொட்டு கொள்ளை அடித்து வயிறு புடைக்க தின்று கொழுத்துவரும் பார்ப்பனக் கூட்டத்தாரின் சூழ்ச்சியை அறிந்த நமது வைக்கம் வீரமூர்த்தி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்து அதின்மூலமாக கடவுளின் தன்மையைப்பற்றியும் அதனிடத்தில் நாம் நடந்துகொள்ளவேண்டிய முறையைப்பற்றியும் அது அதற்கு கல்யாணம் காஷி சாந்தி முகூர்த்தம் பள்ளியறை, தாசி வீடு முதலியவை கொண்ட உத்ஸவாதிகள் வேண்டியதில்லை என்றும், அது மனிதனின் உதவியால் இருக்கக்கூடியதல்லவென்றும் அதற்கு உயர்வு தாழ்வு என்பதே கிடையாதென்றும் பாப்பானின் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்திக் கொண்ட புரட்டு என்றும், சன சமூகத்திற்கு எடுத்து போதித்து வருகிறார். இப்போதனை செய்து வரும் சுயமரியாதை இயக்கத்தையும் வைக்கம் மூர்த்தியையும் நாஸ்திகர்கள் என்று சொல்லும் பாப்பாரக்கூட்டத்தாரின் யோக்கியதையைப்பற்றி அவர்கள் போற்றச் சொல்லுவதும் இவ்வியாசத்தில் எழுதியிருப்பதுமான பிர்மாவைப்பற்றிய யோக்கியதையும் கவனித்து நாஸ்திகர்கள் யார்? என்பதை முடிவு கட்ட வாசகர்களுக்கே விட்டு விட்டேன். விஷ்ணுவைப்பற்றி அடுத்த வியாசத்தில் எழுதுவோம்.

## பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகளும் நன்கொடையும்.

வாவிபாளயம் திரு.எ. அர்த்தனாரி அவர்கள் தமது ஆண் குழந்தை பிறந்த 9 ம் நாள் 12-1-29 ல் பார்ப்பனீயமும் புரோகிதமும் இன்றி திரு சிவஞான சுவாமிகளின் உதவியால் சிறப்பாகக் கொண்டாடினார். சில பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்தளித்தார். சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்காக 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளார். அன்பு கூர்ந்தனுப்பிய ஷை நன்கொடையைமன மார்ந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம்,

செய்யூர்—திரு எம். எஸ். வரதராஜன் அவர்கள் சென்ற ஆறு ஆண்டுகளாக பார்ப்பனர்களுக்கு கொடுத்து வந்த தமது பிதாவின் திதியை ஞானச் சுடராம் "குடி அரசின்" கொள்கையை பின்பற்றி நளஆண்டு மார்கழித் திங்கள் 25ம் நாள் (8—1—29) மங்களவாரம் சில ஏழைகளுக்கு அன்னமிட்டு பந்துமித்திரர்களோடு உண்டு மகிழ்ந்து கொண்டாடினர்.

தென்காசி—கிடாரக்குளம் கிராமத்திலிருக்கும் திருவாளர் கே. எ. நமசிவாய முதலியாரவர்கள் தம் தகப்பனார் அம்மையப்ப முதலியாரவர்களின் கருமாதி விசேஷத்தை நிகழும் மார்கழி மாசம் 25-தேதி செவ்வாய்க்கிழமை யன்று பார்ப்பனப்புரோகிதத்தை அறவே ஒழித்து சிவலார் குளம் பூமிநாத தேசிகரைக்கொண்டு சிறப்பாக நடத்தினர்.

பினாங்கு. மருத்துவ சங்க ஆதரவில் 21—1—29 ல் பினாங்கு மருத்துவர்சங்க கமிட்டி மெம்பர் திரு. கே. அப்பாவு பண்டிருக்கும் பினாங்கு ஸ்ரீமதி ஜானகி அம்மாளுக்கும் பார்ப்பன புரோகிதமில்லாமல் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைத்தொண்டர் பெருஇந்து மகாஜன சங்க கௌரவகாரியதரிசி அவர்களால் தமிழ் திருமணம் முடித்து வைக்கப்படும். பின் டாக்டர் என் கே மேனன் அவர்கள் தலைமையின் கீழ் பலதலைவர்கள் சுயமரியாதையைப்பற்றி சொற்பெருக்கு நிகழ்த்துவார்கள்.

கட்டுக்குடிபட்டி:— நிகழும் விபவ-ளூ சித்திரைமீ 27ந்தேதி திருவாளர் அ. மு. சின்னய்யா பிள்ளைபெரியதாயார்மீனாட்சியம்மாளுக்கு பதினாறும்நாள் கருமாதி பார்ப்பனரின்றி நடத்தப்பட்டுஇஷ்டமித்திர பந்துக்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

ஆவுடையார் கோவில்:-திரு. பி.நடராஜம் பிள்ளை தமது தகப்பனாரின் மூன்றுவதுஆண்டுவருஷாப்திகத் திதியை புரோகிதத்தை அறவே ஒழித்து பந்துமித்திரர் ஏழை வகைபராவுக்கு சாப்பாடு அளித்து அதிகச் செலவின்றி நடத்தினர்,

வேலூர்:—பாஷ்கால் நாயுடு வீதியில் கல் வியாபாரம் ஸ்ரீமான் நரசிம்மலு நாயுடு அவர்கள் பார்ப்பானை நீக்கி தமது தாயின் கைங்கரியங்களை நடத்தி வைத்தனர். பார்ப்பானுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக்கொண்டு கூன், குருடு, முடம், உள்ள ஜனங்களுக்கு அன்னம் வழங்கினர்,

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒவ்வொரு காலத்திலும் மனுஷ ஜாதி கற்றுக்கொள்ள வேண்டிய பெரிய உண்மைகளாகிய செல்வத்தை அளிக்கும் காலசக்தியின் தூதானது பிரிட்டிஷ் ஜாதியை இந்தியாவிற்கு அளித்திருக்குமிந்தக்காலத்தில், கிழக்கின் காப்புச்சுவர்கள் இடிந்து அதன் தானியக்களஞ்சியங்களுக்கு நடுநிலை மேற்றிசை வந்துபுகுந்திருக்கு மிந்தக்காலத்தில்பாப்பார்களுக்கும்அனுபோகத்திற்குத்தேவையான அறிவு குன்றி சகல குறைகளுக்கும் காரணமாக விருக்கும் சமயப்புரட்டுகளையே நம்பி உலகத்தின் ஆசைக்கு அடிமைப்பட்டு அதனால்கொடுமையும் செய்து பெரும் பழியைச் சுமந்து கொண்டிருக்கும் பாப்பானுக்கு சமயத்தின்பேரால் பண்டிதர்கள் பல்லவி தவராமல்படி சுயமரியாதைக் காரர்களை குற்றம் சொல்லிவிட்டால் ஒளியை ஒரு மரக்காலுக்குள் ஒளித்துவைப்பதெப்படி? அசம்பாவிதத்திற்கு நெடுங்காலம் இடம் கொடுத்துத்தனது விதிகளே சகத்தின் விதி என்று பாவனைசெய்து அதற்குப் பக்குவம் தேடிக்கொண்டே வந்தாலும் எப்போதாவது திடீரென்று சரித்திரமானது ஒருசிறிய நடையில் இடறி தலைக்கீழாகக் கவிழ்ந்துவிடுமென்பதை சுயமரியாதைக் காரர்களறிவார்கள். பல நூற்றாண்டாகப் பாப்பாரும் மற்ற வகுப்பாரும் கூடியிருந்தும் தம்முள் மனுஷிய சம்பந்தங்களை உண்டுபண்ணி யிருக்கிறதா? பாப்பார்களும் அவர்கள் சாஸ்திரங்களும் மற்றவர்களையெல்லாம் அடிமைகொண்ட வழியேயின்றி கீழாக்கிவைத்து ஆளப்பழகியிருக்கின்றனவே ஒழிய சிநேகிதனுக்கவோ பந்துவாக்கவோ செய்யவில்லையே. சாஸ்திரத்தின் கருத்தும் சமயத்தின் ரகசியமும் நேராக அப்படியே இருக்கிறதாம். அனுபோகம் எப்படி இருக்கிறது?

பிராமணன் சூத்திரன் என்னும் இரண்டுஜாதிகளே இருப்பதாக வல்லவா பாப்பாரச்சபை தீர்மானம் பண்ணினது. சாஸ்திரம் யுக்தி அநுபோகங்களோடு பார்த்தால் இந்த இரண்டு ஜாதிகளே இந்த உலகத்திலேயே இல்லை. லௌகீக வாழ்க்கையை விட்டவன் பிராமணன். லௌகீக வாழ்க்கை இதரஜாதிகளுக்கே உரியது. பிராமணன் லௌகீகத்தை விரும்புவானாகில் நிர்ப்பந்தங்களும் நியமங்களும் துறவுநிலைக்குச் சமமாயிருக்கவிர்ப்பந்திக்கின்றது வாழ்க்கைக்குவேண்டிய சுகங்களோ ஒடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இருக்கவேண்டிய பிராமணஜாதி தற்காலத்தில் ஜடப்பொருளுக்குக் கட்டுப்பட்டதாகி தன்னுடைய தெய்வத்தன்மையை இழந்து பணம் சம்பாதிக்கும் இயந்திரமாக மாத்திரம் ஆகிவிட்டதால் பிராமணனாக எப்படி இருக்கமுடியும். ஆனதால் பிராமண ஜாதி இல்லையென்று சொல்ல தடையேயில்லை.

சூத்திர ஜாதியைப்பற்றி கவனிப்போம். சூத்திரனென்றால் அடிமைகளில்லை. சேனைத்திலிருந்த அடிமைகளைக்கூட இப்பொழுது நீக்கிவிட்டார்கள். சூத்திரஜாதியிருக்கவேண்டிய விதியின்கிரமங்களை தருமசாஸ்திரத்திலிருந்து சிலதைக் குறிப்பிடுகிறேன்.

"சூத்திரனுக்கு இம்மைக்கு உபயோகமான அர்த்த சாஸ்திரத்தை சொல்லிவைக்கலாகாது. தனக்குச் சிஷியனாகாத சூத்திரனுக்கு உச்சிஷ்ட அன்னத்தையும் கொடுக்கக்கூடாது. ஓமம் பண்ணிமிகுதியை சூத்திரனுக்குக்கொடுக்கலாகாது. தருமம், விரதம் இவைகளை ஒரு பிராமணனே முன்னையிருத்திக்கொள்ளாமல் நேராய் அவனுக்கு உபதேசிக்கப்படாது."

"எந்தபிராமணன் சூத்திரனுக்கு நேராக தருமத்தையும் விரதத்தையும் உபதேசிக்கிறானோ அவனந்த சூத்திரனோடுகூட அசம் விருதமென்னும் இருளில் மூழ்குவான்."

"சூத்திரன் சுவர்க்கத்திற்காவது ஜீவனத்திற்காவது அல்லது இரண்டிற்குமாவது பிராமணனையே தொழவேண்டும். 'இவன் பிராமணனை அடுத்த சூத்திர'னென்று ஒருவனுக்குப் பெயர்வந்தால் அதே சூத்திரனுக்குப் பாக்கியம்."

ஆதலால் பிராமணனையுபசரிப்பதே சூத்திரருக்கு எல்லாத்தொழிலையும்விட மேலான தருமமென்றும் மற்றவையெல்லாம் பயனில்லாதவையென்றும் வேதத்தில் சொல்லியிருப்பதாக தரும சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.

சூத்திரன பொருள் சம்பாதிக்கத்தக்கவனுயிருந்தாலும் குடும்பத்திற்கு உபயோகமானதைவிட அதிகப்பொருளை சம்பாதிக்கக்கூடாது. அப்படி சம்பாதித்தால் தன்னாலுபசரிக்கத்தக்க பிராமணனையே இம்சைசெய்ய வேண்டியவரும்.

பன்றி மோத்தலினாலும், கோழியிறகின் காற்றினாலும், நாயின் பார்வையினாலும் சூத்திரன் தொடுவதாலும் பதார்த்தம் அசுத்தமடைகிறது. பூனை, அணில், காடை, தவளை, நாய், உடும்பு, சோட்டான், காக்கை, இவைகளி லொன்றைக்கொன்றால் பிராமணனுக்குவேண்டிய காமஇச்சையால் செய்த சூத்திரவதைக்கு விதித்த பிராயச்சித்தஞ்செய்ய வேண்டியது. இந்த ஜெந்துக்களின் உயிர்களைவிட சூத்திர உயிருக்கு ஏற்றம் கொடுக்காவிட்டாலும்பதார்த்தம்அசுத்தமடையும்விஷயத்தில் சற்றுயேற்றம்கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தவிதமாக ஒருஜாதி தான் என்று யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஒத்துக்கொள்ளும் சமயவாதிகளோ பக்திவான்களோ இந்தப் பாப்பார்களாகமாட்டார்களென்றே நினைக்கவேண்டும். சமய சாஸ்திர சந்துகளில் புகுந்து பாப்பானுக்குப்பின் பல்லவிபாடும் பண்டிதர்கள் ஒத்துக்கொள்ளலாமேதழிய உலக உணர்ச்சியோ தன்னறிவு சிறிதோ வந்த எவனும் ஒத்துக்கொள்ள மாட்டான். கடவுளையும் சமயத்தையும் காட்டி ஆசார சீர்திருத்தக் காரர்களை குற்றம் சொல்லுவது போல அபிப்பிராயத்து சுயமரியாதைத்தொண்டர்களைக்குற்றம்சொல்லும் ஆராய்ச்சிப்பண்டிதன் தாசி மகனாகவும் ஒழுக்கம் ஆசாரமில்லாத அடிமையாகவுமிருக்கட்டும். இவர்கள்சொல்லும் அர்த்தமற்ற பிரசங்கங்களையும் மனிதனுக்குமுன்னால் மனிதனைப்பிழைக்கும் வழிக்குக்கடவுள் விரோதமல்லவென்பதையும் உலகம் கூடியசீக்கிரம் தெரிந்துகொள்ளும்.

## காரமடை யூனியன் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்.

1929-ம் ஜனவரி மாதம் 12-தேதியில் தலைவர் தேர்தல் நடந்ததில் இவ்வூர் பிரபல மிராஸ்தாரும் சுயமரியாதை இயக்கத்தை ஆதரிப்பவருமான திருவாளர் எம். கே. ரங்கே கவுண்டர் அவர்கள் தலைவராக போட்டியின்றி ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார். இவ்வாறே அனைவரும் ஒற்றுமையுடனிருந்து கிராமகாரியங்களை இனிதாக முடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

என். கே. சாமி.


## சுயமரியாதைத் தொண்டன்.

இஃது வைக்கம் வீரரும் 'குடி அரசின்' பத்திராதிபருமான உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் உதவியைக்கொண்டும், 'குடி அரசின்' கொள்கையைக்கொண்டும் வெளிவரப்போகும் ஓர் உயர்தர வாரப் பத்திரிகையாகும்.

இதன் வருஷ சந்தா ரூ 3—0—0
வெளி நாடுகளுக்கு ரூ 4...0...0

ஆசிரியர், S. சாமிநாதன்.

விலாசம்:—
மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்"
பள்ளிபாளையம். ஈரோடு மார்க்கம்.

## இனும்! இனும்!!
## புஸ்தக ஆர்டருக்கு
### 1929-வருஷ காலண்டர் இனும்!

| | | | |
|---|---|---|---|
| மர்மமுடி | 0-12-0 | சுந்தரவதனி | 0-12-0 |
| ராதாமணி | 2-8-0 | கற்பகசுந்தரி | 2-12-0 |
| கௌரீமுகுந்தன் | 1-12-0 | கனகபுரி | 1-8-0 |
| ஆங்கில ஆசான் | 2-0-0 | மதனசிங்கர் | 1-0-0 |
| மங்கள பூஷணம் | 1-4-0 | பவன பதுமை | 1-4-0 |

இல்வாழ்க்கையின் ரகசியம் 3—0—0

ஸ்ரீ வாணி விலாச புஸ்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

## மதனாமிர்த ஹல்வா

உண்டால் தாதுவை விருத்தி செய்கிறது.

இதில் ஜாலாயின்ரி, ஷகாகுல்மன்ரி, நத்தைச்சூரி விதை, கஸ்தூரி முதலிய உயர்ந்தசரக்குகளும், பழங்களும், சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. சுறு சுறுப்புக் குறைவு, ஹிருதயத் துடிப்பு, நரம்புத் தளர்ச்சி, வெட்டைச்சூடு முதலியன நீங்கும். நீர்ப்பை, குண்டிக்காய்கள் ஆகியவைகளின் சீர் கேடுகள் நீங்கும். மூளை ஹிருதயம், முதலியவைகட்கு வலுவை உண்டாக்கும். தாதுவிர்த்தியை உண்டாக்கும்.

15 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1க்கு ரூ-ா 1 10 0
1 மாதம் ,, 1க்கு ரூபா 3 0 0

இளமைப் பருவத்தில் துர்நடத்தையினாலோ வேறு காரணங்களினாலோ இந்திரிய வலுக்குறைந்தவர்கள் இதனை உபயோகிக்க குன்றாத வலுவுண்டாக்கும். கீழ்கண்ட தைலமும் சேர்த்து உபயோகிக்க மிக்க நன்மை தரும்.

## சிறு சந்தனாதித் தைலம்.

உஷ்ண திரேகிகள், வெட்டைச்சூடுடையவர்கள் இந்த தைலத்தை தேய்த்து ஸ்நானம் செய்து வர சகலவித உஷ்ணமும் நீங்கி, கண்களுக்குக் குளிர்ச்சியும் மூளைக்கு வலுவும் உண்டாகிறது.

5 அவுன்ஸ் டின் ரூபா 1 1 0. 10 அவுன்ஸ் டின் ரூபா 2 0 0.

பண்டிட் சி. வா. ஞான சம்பந்தம்,
சித்த வைத்தியம், ஜீவாமிர்த இராஜ வைத்தியசாலை, சீர்காழி S. I, Ry.

## செய்தித்திரட்டு.

ஆழ்வார் குறிச்சி-பார்ப்பனரல்லாதார் வாலிபர் கழகம் 1928ம் வருஷம் டிசம்பர் மாதம் 29-ந் தேதி 4-30 மணிக்கு திருவாளர் சுப்பையா முதலியார் தலைமையின் கீழ் பனகால் அரசரது குடும்பத்தாருக்குத் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றியது.

திண்டிவனம்-சன்மார்க்க சபையின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நிகழும் விபவ வருடம் மார்கழி மாதம் 27-தேதி (10-1-29) ஸ்ரீ வேதவல்லியம்மாள் சத்திரத்தில் பெருமுக்கல் அபேதாச்ரமம் ஸ்வாமி தயானந்த பாரதி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

முத்துராமலிங்கபுரம்-செட்டி வாலிபர் சுயமரியாதைச் சங்கம் ஞானானந்த வாசகசாலைக் கட்டிடத்தில் நாளது ஜனவரி மாதம் 10-தேதி இரவு 8 மணிக்கு சுயமரியாதைப் பாவலர் திரு. தி. அ. வெங்கடசாமி ரெட்டியார் அக்கிராசனத்தின் கீழ் நிறுவப்பெற்று நடைபெற்று வருகிறது.

மேட்டுப்பாளையம் டவுனில்-கிராமசங்கங்களின் முதலாவது ஐக்கிய மகாநாடு நிகழும் 1929 வருடம் ஜனவரி மாதம் 19, 20 தேதிகளில் திருவாளர் அ. இ. ரா. முருகய்ய சோதிடர் தலைமையில் நடைபெறும்.

திண்டிவனம்-சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர் 7-வது மகாநாட்டை நாளது வருஷம் மே மாதம் நடத்த வேண்டியது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நால்வர் ஷை மகாநாட்டுக்கு பிரசாரவேலை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திருப்பத்தூர்-யூனியன் போர்டு தலைவர் திருவாளர் P. S. P. பிரான்மலை ராவுத்தர் அவர்கள் தலைமையில் 26—12—28ல் கூடிய யூனியன் போர்டு கூட்டத்தில், பனகால் அரசர் சர். ராமராயனிங்கவாரு Kt., K. C. I. E., M. A., B. L., அவர்கள் திடீரெனக் காலஞ் சென்றமை குறித்து வருந்துவதாகவும் அன்னாருடைய குடும்பத்தாருக்கு போர்டின் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் ஒரு அநுதாபத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறப்பட்டது.

## தேவை.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு மாதம் ரூ 60—2—80 சம்பளத்தில் ஒரு சீனியர் அக்கவுண்டெண்ட் தேவை. தக்க யோக்கியாம்சம் பெற்றவர்களே விண்ணப்பம் செய்ய வேண்டும். முனிசிபாலிட்டியில் நீண்ட அநுபவம் பெற்றவர்களுக்கு மேற்குறிப்பிட்ட சம்பளத்தைவிட அதிகமான சம்பளத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். விண்ணப்பதாரிகள், ஜனவரி மீ 15உக்குள் கீழ்க்கண்டவருக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

ஈரோடு முனிசிபாலிட்டி 3—1—28 } K. சுப்பராயலு நாயுடு சேர்மென்,

ஆவினிப்பட்டி-விவேகானந்த கல்விக்கழகம் இரண்டாவதாண்டு விழா நிகழும் விபவ ஆண்டு தைத்திங்கள் 8-ம் நாள், (20-1-29) ஆதிவாரம் முற்பகல் 9 மணிக்கு கிழைச்சிவற்பட்டி மீனாக்ஷிசுந்தரேசுவரர் கலாசாலைத் தலைமையாசிரியர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் தலைமையின்பால் நடைபெறும்.

## நோட்டீஸ்.

1929—30ம் வருஷத்திற்கு முனிசிபல் சங்கத்தாருக்குச்சேர்ந்த சுங்கம் (Tole gates) மார்க்கெட் முதலியவைகளின் குத்தகைகளை 1929-ஞு பிப்ரவரி-மீ 2-உ சனிக்கிழமை காலை 8-மணிக்கு கோயமுத்தூர் விக்டோரியா டவுன் ஹாலில் முனிசிபல் சங்கத்தாரின் ஸ்பெஷல் மீட்டிங்கில் ஏலம் போடப்படும்.

முனிசிபல் ஆபீஸ் கோயமுத்தூர் 3—1—29 } C. S. இரத்தின சபாபதி சேர்மென் C. M. C.


## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தொழில்கள் பிழையேதுமின்றி இருக்குமாறும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதை அம்மன் கோவில் வீதி
புதுச்சேரி.


### கோவை
### மீனாக்ஷி அம்மாள் மறுமணம்.

நமது நாட்டில் கணவனையிழந்த பெண்கள் அடையும் கணக்கிலடங்காத துன்பங்களை மாற்றுவதற்கேற்ற சாதனம் விதவா விவாகத்தைத்தவிர வேறொன்றுமில்லை. விதவா விவாகஞ்செய்வது வேதசாஸ்திரங்களுக்கும் அனுபவத்துக்கும் பொருத்தமானதே. அவ்வாறே கலப்பு விவாகங்களும் விதவா விவாகம் கலப்பு விவாகம்முதலான நிகழ்ச்சிகளெல்லாம் தினசரி முதலிய பத்திரிகைகளில் அடிக்கடி வெளியாகின்றன. அவைகளைக் காணுந்தோறும் எவரும் சந்தோஷமடையாநிரார். சென்ற டிசம்பர் மாதம் 15-தேதி இலங்கை மாகாண "தேசபக்தன்" பத்திராசிரியரும் இலங்கை சட்டசபை மெம்பருமாகிய ஸ்ரீமான் கே. நடேசய்யர் அவர்களுக்கும் ஸ்ரீமதி கோ. மீனாட்சியம்மாள் அவர்களுக்கும் மறுமணம் நிகழ்ந்தது. ரிஜிஸ்டர் செய்து கொண்ட சங்கதியை அந்தம்மாளவர்களே தமது 1—1—29 தேதியுள்ள கடிதத்தில் சந்தோஷமாய் தெரிவிக்கிறார். இவ்வம்மை வேளாள குலத்தில் பிறந்த ஒரு சிறந்த தேசாபிமானி. 1927-ல் கோயமுத்தூரில் நடந்த அகில இந்திய நாயுடு மகாநாட்டில் விதவா விவாகத்தாலும்ஜாதிசமரசநிலைமையாலும் வரும்பலன்களையும் கேட்டோர் மனங்களிக்குமாறு சொற்பொழிவு செய்தவர்கள். இன்னும் இத்திரிசிரபுரத்துக்கு சமீபத்தில் வந்து பல சொற்பொழிவுகள் செய்வதாகவும் வாக்களித்துள்ளார்கள். இவர்கள் தாம் மகிழ்ந்து வரித்துக்கொண்ட கணவரோடு நெடுநாள் நல்வாழ்க்கைப் பேறடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

சி. பி. ராஜகோபால பாரதி,





புத்தகம் 1-க்கு

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.
Mysteries of Wedded Life.
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்
வாஸன் புஸ்தகசாலை,
244, தாங்கசாலைவீதி, சென்னை.

விலை ரூ. 2—0—0

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இலவமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

# ஹாடன்ஸா.

ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டது.

## :: மூலவியாதிக்கு சிறந்த மருந்து. ::

ஆபரேஷன் தேவையில்லை.




பெருமிதமான இரத்தப்பெருக்கு அல்லது கடுமையானதாயிருந்தாலும் ஜர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட ஹாடன்சா முன்னால் நிற்கமுடியாது. இசனை உலமெங்கும் ஆயிரக்கணக்கான டாக்டர்கள் உபயோகித்து உண்மை என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஹாடன்சா ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு ஆஸ்பத்திரிகளிலும் இன்னும் மற்ற எல்லாவிடங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. போட்ட உடனேயே ஆறுதல் அளிக்கும். மூலத்தால் இரத்தம் வழிந்துகொண்டிருந்தால் உடனே இரத்தப்பெருக்கை நிறுத்தி சாதாரணநிலைக்குக் கொண்டுவரும். எவ்விதமான ஆபரேஷனும் செய்யவேண்டியதில்லை. இன்றே பரீக்ஷித்துப் பாருங்கள் தாமதிக்கவேண்டாம். பலனைக்கண்டு ஆச்சரியப்படுவீர்கள். எல்லா இங்கிலீஷ் மருந்து வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். பெரிய டபிள் டியூப் ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0 தான். தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

'எச்சரிக்கை'

வாங்குபவர்கள் பெட்டியின்மேல் 'டபிள்டியூப்' என்று முத்திரை போட்டிருப்பதை பார்த்து வாங்கவும். இது புதிதாக தயாரிக்கப்பட்டது. உபயோகிக்கும் முறை டியூபினுடன் இருக்கும் பிரசுரத்தில் தெரியும்.

மதராஸ் ஏஜண்டுகள்:— சவுத் இண்டியன் மேர்கன்டைல் கம்பேனி,
நெ. 12, மன்னார் தெரு, பி. டி. சென்னை.



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

# சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதலம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சொக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை

அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I)



"ஏன் வீணாக அவஸ்தைப் படுகிறீர்கள்"

உடனே எழுதுங்கள்.

# அமிர்த சாரம்.




ஆயிரக்கணக்கான நற்சாட்சிப்பத்திரங்கள் குவிந்துவருகின்றன. மனிதனுக்கு ஏற்படும் எல்லா வியாதிகளையும் நிமிஷக்கணக்கில் உபயோகிக்க, நிமிஷக்கணக்கில் ஆச்சரியமாய் குணமடையலாம்.

ஒரு புட்டியின் விலை 2—0—0 கேட்டால் இனாம்.

Apply to— சங்கராம் மெடிகல்ஹால், குகை, சேலம். (S. I. R.)


## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறு வருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


எதிர்பார்த்தது வந்து விட்டது!!

# தமிழ் டைப் மிஷின்கள்.

எழுத்துக்கள் சுத்தமாக இருக்கக்கூடியது எல்லாவித வேலைகளுக்கும் உதவக்கூடியது. ஒவ்வொரு ஆபீசுக்கும் தேவையானது. வியாபாரிகளுக்கு அவசியமானது. கிரயம் ரூ. 360.

ராம் நாராயணன் அண்ட் கம்பேனி,
147, அக்கிரார வீதி, ஈரோடு.



பட்டாதாரர்களே!

# இன்றே எழுதுங்கள்.


இன்ஷிகாலம் நெருங்கிவிட்டது. நீங்கள் செலுத்தும் பணத்துக்குச் சரியான இரசீது புஸ்தகங்களை முன்னமே வரவழைத்துக்கொள்வது நலம். 100-பக்கமுள்ள பைண்டுபுக் 1-க்கு 0—8—0. சிறுபுக் 1-க்கு 0—0—9. 100-க்கு 3—0—0. தபால் சார்ஜ் வேறு. பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்களும் கிடைக்கும்.

ஸ்ரீ ஷண்முகானந்தம் பிரஸ்,
பழனி.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

இனம்! இனம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பேனாவுடன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பேனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.


இது ஈரோடு "குடி அரசு" ... "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.